T.1929

# ாமகிருஷ்ண உபநிஷத

T. 1929

ஆசிரியர்

சக்கரவர்த்தி ராஜகோபாலாசாரியார்

T
1929



# ராமகிருஷ்ண உபநிஷதம்

ஆசிரியர்

சக்கரவர்த்தி ராஜகோபாலாசாரியார்

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்

மயிலாப்பூர் :: சென்னை

இஃது சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துத் தலைவரால்
வெளியிடப்பட்டுள்ளது.

முதற் பதிப்பு
உரிமை பதிப்பாளர்க்குரியது
XXX—11—50

கபீர் அச்சுக்கூடம், சென்னை-5

# பதிப்பாளரது முகவுரை

"ராமகிருஷ்ண உபநிஷதம்" எனப் பெயர் பெற்று வெளிவரும் இந்நூல் "கல்கி" யெனும் பத்திரிகையில் புகழோங்கிய ஸ்ரீமான் சக்கரவர்த்தி ராஜகோபாலாசாரியார் அவர்கள் நயம்பட எழுதிய தொடர்ச்சியான கட்டுரைகளின் தொகுதியேயாகும். அக்கட்டுரைகளைப் புத்தக வடிவமாக வெளியிட எமக்கு அனுமதியளித்த கட்டுரையாசிரியர்க்கும் பதிப்பாளர்க்கும் எமது மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகின்றோம்.

இந்நூலை அச்சுவாகனம் ஏற்றி உலவச் செய்யப் பொருளுதவி புரிவதாக முன் வந்துள்ள பொள்ளாச்சி ஸ்ரீமான் ராமசாமிக் கவுண்டர் அவர்கட்கும் எமது நன்றி உரியதாகுக.

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்
18—11—50

பதிப்பாளர்

# முன்னுரை

சில நாட்களுக்குமுன், அதாவது தில்லியிலிருந்து இந்த வருஷ ஆரம்பத்தில் நான் ஊருக்கு வந்ததுமுதல், 'கல்கி' பத்திரிகையில் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய உபதேசங்களை நான் தெரிந்துகொண்டிருக்குமளவு தமிழில் துண்டு துண்டாக எடுத்து விளக்கி வந்தேன். நான் பயந்து பயந்து எழுதிய அத்தியாயங்களைப் படித்து வந்த நண்பர்கள் என் விளக்கம் நன்றாகவே இருப்பதாகச் சொல்லி உற்சாகப் படுத்திவந்தார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ண பகவான் உபதேசத்தை எடுத்துச் சொல்லும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. ஆண்டவன் அருள் அன்றி வேறில்லை.

இந்த ராமகிருஷ்ண உபதேச விளக்கம் முப்பத்தைந்து அத்தியாயங்களாகத் தீபாவளியன்று முற்றுப் பெற்றது. அவற்றைப் புஸ்தக உருவமாக வெளியிடலாம் என்று எண்ணியது, சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தாருடைய பேரருளால் நிறைவேறப் பெற்றது. நான் எழுதிய எழுத்தை மடத்தார் அங்கீகரித்தது என் அதிருஷ்டமே யாகும். யமதர்ம ராஜன் நசிகேதனுக்குச் சொன்ன னல்லவா? பரம்பொருள் தரிசனம் சாஸ்திரம் படித்தால் மட்டும் கிடைத்துவிடாது. புத்தி சூட்சுமத்தாலும் கற்ற கல்வியினலும் வாதப் பிரதிவாதங்களினலும் ஆத்ம ஞானம் வந்துவிடாது. ஆண்டவன் அருள் வேண்டும். அதற்கு உள்ளம் கரைந்து உருகவேண்டும்; பக்திவேண்டும். சாஸ்திர பாண்டித்தியம் வேறு; பக்தி வேறு. சமஸ்கிருத புஸ்தகங்களை ஓதிவிட்டு சுலோகங்களைப் பெருவெள்ளமாக

ஒப்புவிக்கலாம். ஆசாரியர்கள் எழுதிவைத்திருக்கும் பாஷ்யங்களைத் தலைகீழாக ஒப்புவிக்கும் திறமையை அடையலாம். ஆனால் தரும வாழ்க்கையும் சமநிலையும் வேறு. உள்ளம் பக்குவம் அடையாதவனுடைய படிப்பும் சாஸ்திர பிரவசனமும் குரங்காட்டமேயொழிய வேறல்ல. உள்ளத்தில் ஞானம் இருக்கவேண்டும். இல்லாவிடில் எவ்வளவு படிப்பிருந்தாலும் பயனில்லை. உள்ளமும் வெளியும் ஒன்றுபட்டிருந்தால் மட்டுமே ஞானம். இல்லாவிடில் குரங்கு கற்ற வித்தைதான். ஸ்ரீ ராமகிருஷ்ணரின் உபதேசங்கள் உண்மை ஞானத்தை உண்டாக்கும்.

சிறுவர்களும் பெரியவர்களும் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் உபதேசங்களைப் படித்துப் பயன் பெறுவார்களாக.

15—11—50 இராஜகோபாலாச்சாரி

# உள்ளுறை


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பரம் பொருள் | ... | 1 |
| 2. | சமய பேதங்கள் | ... | 5 |
| 3. | பாம்பை நெருங்காதே! | ... | 7 |
| 4. | சித்த சுத்தி | ... | 13 |
| 5. | பக்தி மார்க்கம் | ... | 17 |
| 6. | அரசனும் பாகவதரும் | ... | 22 |
| 7. | பெண்மையும் தாய்மையும் | ... | 26 |
| 8. | ஊமையும் பேசும்! | ... | 30 |
| 9. | துறவியின் கதை | ... | 35 |
| 10. | பேச்சும் மௌனமும் | ... | 39 |
| 11. | எண்ணெய்க் கிண்ணம் | ... | 44 |
| 12. | தேவீ கவசம் | ... | 48 |
| 13. | நீரின்மேல் படகு | ... | 54 |
| 14. | பொதுப் பணி | ... | 58 |
| 15. | அத்துவைதம் | ... | 64 |
| 16. | அர்ச்சாவதாரம் | ... | 68 |
| 17. | பஜ கோவிந்தம் | ... | 72 |
| 18. | சமய சீர்திருத்தம் | ... | 76 |
| 19. | அடக்கம் | ... | 80 |
| 20. | "ஒன்னரையஞ் பெறும்!" | ... | 83 |
| 21. | அடிப் பாறை | ... | 85 |
| 22. | வருந்தி வேண்டினல், வந்து நிற்பான்! | ... | 87 |
| 23. | பொன்னுசாரியின் மனைவி | ... | 90 |
| 24. | "மாடுகள் அசை போடுவது போல்" | ... | 93 |
| 25. | உய்யும் வழி | ... | 96 |

| | | | |
|---|---|---|---|
| 26. | பெற்றதாய் | ... | 99 |
| 27. | பக்தன் | ... | 102 |
| 28. | இன்னும் ஏன் பொய்யும் திருட்டும்? | ... | 105 |
| 29. | பிரார்த்தனை | ... | 108 |
| 30. | நந்தா விளக்கு | ... | 111 |
| 31. | கமலியின் கண்ணாடி | ... | 113 |
| 32. | உய்தலும் உபதேசமும் | ... | 116 |
| 33. | ஐயப்பட வேண்டாம்! | ... | 118 |
| 34. | ஒரு பாட்டிக்கு உபதேசம் | ... | 122 |
| 35. | கோபாலன் எங்கே? | ... | 125 |



பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்

# ராமகிருஷ்ண உபநிஷதம்

## 1. பரம் பொருள்

ராமகிருஷ்ண பரமஹம்ஸருடைய உபதேசங்கள் உபநிஷத்துக்குச் சமானம் என்றால் மிகையாகாது. பழைய காலத்து ரிஷிகளைப் போன்ற தபோதனர் ஒருவர் நம்முடைய காலத்தில் அவதரித்தார். அவரே ராமகிருஷ்ண பரமஹம்ஸர். அவர், நூல் ஏதும் எழுதவில்லை ; பிரசங்கமும் செய்யவில்லை. சுத்த சந்நியாச வாழ்க்கை வாழ்ந்து மறைந்தார். பக்தியுடன் பக்கத்தில் உட்கார்ந்து கேட்ட சீடர்களுடன் பேசிய பேச்சே அவருடைய உபதேசம். அப்படி அவர் பேசியதைக் கேட்ட சீடர்கள் பிறகு அந்த உபதேசங்களை எழுதி வைத்திருக்கிறார்கள்.

படித்தவர்களும் நன்றாக எழுதத் தெரிந்தவர்களும் மிக நல்ல வியாசங்களையும் உபதேசங்களையும் எழுத முடியும் ; அம்மாதிரி பலர் எழுதியும் வருகிறார்கள். ஆனால் அவற்றுக்கு உண்மையான வேகம் இல்லை. ஸ்ரீராமகிருஷ்ணர் தம் உள்ளத்திலும் வெளி உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களிலும் பகவானைக் கண்ட மகான். நாம் ஒருவரை யொருவர் பார்க்கும்போது எவ்வளவு நிச்சயமும் உறுதியும் நிறைந்த உணர்வோடு பார்க்கிறோமோ, அவ்வாறு ராமகிருஷ்ணர் எல்லாப் பொருள்களிலும் பகவானைக் கண்டார். இத்தகைய அற்புத ஞானிகள் பல நாடுகளில் அவ்வப்போது அவதரிக்கிறார்கள்.

தெய்வீக வாழ்க்கை வாழ்ந்த மக்களின் பேச்சுக்கே ஒரு தனியான வேகம் உண்டு. அவர்களுடைய உபதேச மொழிகளுக்கு உள்ள சக்தி வெறும் படிப்பும் அறிவும் படைத்தவர்களின் தருமோபதேசத்துக்கு இருப்பதில்லை. மகரிஷிகள் பேசும்போது அவர்களுடைய வாழ்க்கை முழுவதும் பேசுகிறது ; அறிவுமட்டுமல்ல. மீமாம்ச வாதங்களும் விமரிசனங்களும் எவ்வளவு அழகாகவும் பொருட்செறிவு கொண்டனவாகவும் இருந்தாலும் ஆண்டவன் அருள்பெற்ற மகான்களின் சம்பாஷணைகளில் காணும் வேகத்துக்கு ஈடாகாது.

ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் இத்தகைய உபதேச மொழிகளைத் தமிழ் மக்களுக்கு எடுத்துச் சொல்லலாம் என்ற எண்ணம் எனக்குத் தோன்றிற்று. அவருடைய அவதார விழாவன்று இந்த வருஷம் சென்னை ராமகிருஷ்ண மடத்தார் என்னை அக்கிராசனம் வகிக்கச் சொன்னதை ஒப்புக்கொண்டு சபையில் பேசியபோது எனக்கு இந்த எண்ணம் உதயமாயிற்று. தமிழில் வெளியாகியிருக்கும் பல நூல்களின் மூலம் பகவான் ராமகிருஷ்ணருடைய உபதேசங்களைத் தமிழ் மக்கள் அறிவார்கள். ஆயினும் அவற்றிலிருந்து எடுத்து மறுமுறை நான் சொல்லலாம் என்று ஆரம்பிப்பது என் சொந்த உள்ள மகிழ்ச்சிக்காகவே. 'வியாசர் விருந்து'ம் அப்படித்தான் ஆரம்பித்தேன். அது ஓரளவு பிறருக்கும் பயன் பட்டதாக எண்ணுகிறேன். அவ்வாறு இதுவும் ஒருவேளை பயன் படலாம்.

நம்முடைய சமூகம் சுதந்திர வாழ்க்கை அடைந்துவிட்டது. சுதந்திரத்துடன் சுகமும் பெறவேண்டுமானால் மக்கள் அறவழியில் நிற்கவேண்டும் ; நின்றால், சுகமும் நிகரற்ற புகழும் பெறுவோம். 'கடவுளாவது ! சாமியாவது !' என்று பலர் இந் நாட்களில் தைரியமாகப் பேசு

கிறார்கள். இது நம்முடைய துர்ப்பாக்கியம். நாம் காணும் உலகமும் அற்புதப் பொருள்களும் வேகங்களும் ஒன்றி னின்று ஒன்று உண்டாவதைக் காண்கிறோம். எல்லாம் நியதியின்படி நடைபெற்றும் சுழன்றும் வருகின்றன. நியதி தானாக உண்டாகிவிடுமா? அனைத்துக்கும் காரண மான ஒரு வித்து இல்லாமல் இவ்வளவும் உண்டாவதற் கில்லை. சூன்யத்தினின்று பொருளோ வேகமோ நியதியோ உண்டாகாது அல்லவா? நாம் கிரகித்துக்கொண்டு விமரி சனம் செய்யக்கூடாத தன்மை படைத்த ஒரு காரணம் இருந்தே தீரவேண்டும். அதுவே பரம்பொருள். நியதி, இயற்கையாகவே இருக்கிறது. அதற்குக் கடவுள் வேண்டிய தில்லை என்று வாதித்துக் கடவுளுக்குப் பதிலாக இயற்கை யைக் கொண்டாடுவதில் சாரம் ஒன்றுமில்லை.

கண்ணுக்குக் காணப்படவில்லை என்பது கடவுள் இல்லை என்பதற்கு ஒரு காரணமாகுமா? இரவில் நட்சத் திரங்கள் திரள் திரளாகக் காணப்படுகின்றன. பகலில் எல்லாம் மறைந்து போகின்றன. கண்களைக்கொண்டு காணாத பொருள்கள் இல்லவே இல்லையென்று சாதிக்க முடியுமா? நம்முடைய அறிவீன வாழ்க்கையில் கடவுளைக் காணவில்லை என்கிற காரணத்தினால் கடவுளே இல்லை, கடவுளுக்கு அவசியமும் இல்லை என்று சாதிக்க வேண்டாம்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒருநாள் சொன்னார்: "பட்டணத் துக்கு ஒருவன் வந்து இறங்கினதும் முதலில் ஒரு இடம் தேடி மூட்டை முடிச்சுகளை வைத்துவிட்டுப் பிறகு ஊர் பார்க்கப் போகிறான். பகலெல்லாம் சுற்றித் திரிந்துவிட்டு இரவு வந்ததும் தான் ஏற்படுத்திக்கொண்ட விடுதிக்குப் போய்ப் படுக்கிறான். இப்படி முன்னாலேயே தங்குவதற்கு ஒரு இடம் ஏற்படுத்திக்கொண் டிராவிட்டால், பகலெல்லாம் வேடிக்கையாகக் கழித்துவிட்டு இரவில் தங்க இடமின்றி மிகவும் கஷ்டப்படுவான். உலகமெல்லாம் சுற்றி அலையும்

உள்ளத்துக்கு ஒரு தங்குமிடம் கடவுள். அந்த விடுதியைப் பத்திரப்படுத்திக் கொள்ளுவது க்ஷேமம். இல்லாவிடில் சந்தோஷமும் அமைதியும் கெட்டுத் துக்கப்படுவோம். மகனே! வாழ்க்கையின் சந்தோஷம் முடிந்து அந்தகாரம் மூடிக்கொள்ளும் காலம் வரும். அப்போது நிம்மதியைக் காண ஒரு புகலிடம் வேண்டும். கடவுளாகிய விடுதியின் அவசியத்தை உணர்வோமாக.''

குடிப்பதற்குத் தண்ணீர் மொள்ளும்போது குளத்தினின்று லேசாக மேலேயுள்ள தெளிந்த தண்ணீரை எடுத்துக்கொள்ள வேண்டுமே ஒழிய சேற்றைக் கலக்கித் தண்ணீரைக் கெடுத்துக்கொள்ளக் கூடாது. உள்ளம் தூய நிலையடைந்து தரும வாழ்க்கை வாழ விரும்பினால் பக்தியை உறுதியாகக்கொண்டு தியானமும் உபாசனையும் மெள்ள நடத்திக்கொண்டு போகவேண்டும். சாஸ்திரப் பிரவசனத்திலும் மீமாம்சங்களிலும் சமய தத்துவ வாதங்களிலும் காலம் கழித்து மூளையைக் குழப்பிக்கொள்ள வேண்டாம். நம்முடைய சிற்றறிவு சிறு குட்டைத் தண்ணீரைப் போன்றது. ரொம்பக் கலக்கி விட்டால் சேறுதான் மேலே வரும்.

தயிருக்குள் வெண்ணெய் உண்டு என்று அனைவருக்கும் தெரியும். ஆனால் தயிரைக் கடைந்தால்தான் வெண்ணெய் வருமே யொழிய, ''தயிரில் வெண்ணெய் இருக்கிறது'' ''தயிரில் வெண்ணெய் இருக்கிறது'' என்று எவ்வளவு கத்தினாலும் வெண்ணெய் வராது. பரம்பொருளைக் காண வேண்டுமானால் பக்தியுடன் உள்ளத்தில் விருப்பத்தைக்கடையவேண்டும். 'பரமாத்மா' என்றும் 'ஜீவாத்மா' என்றும் தத்துவம் பேசிக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. தாயைக் காணாத குழந்தை தாயைக் காண விரும்பி வருந்துவதைப்போல் ஆண்டவனை அடைய உள்ளத்தில் வருந்தி உருக வேண்டும்.

# 2. சமய பேதங்கள்

"பல்வேறு வழிகளில் நாம் கடவுளை உபாசித்துக் காட்சியும் அருளும் பெறலாம். ஆற்றங்கரையில் பல படித்துறைகள் உண்டல்லவா? ஆனந்த வெள்ளமாகிய பரம்பொருளுக்கும் பல படித்துறைகள் உண்டு. எந்தப் படித்துறையிலும் இறங்கித் தண்ணீர் மொண்டு கொள்ள லாம், குளிக்கலாம். எந்த சமயத்தையும் எந்த முறையை யும் தூய உள்ளத்துடனும் பக்தியுடனும் பின்பற்றினுல் போதும், ஆண்டவனை அடையலாம். ஒரு வீட்டின் மேல் மாடிக்குப் படிக்கட்டு வழியாக ஏறலாம்; மூங்கிலை வைத்துத் தொத்தியும் ஏறலாம்; கயிற்றைப் போட்டு அதைப் பிடித் தும் ஏறலாம். இவ்வாறே பல சமயங்களும் பல வழிகளைக் காட்டுகின்றன.

"அவரவர் தத்தம் மதத்தின்படி கடவுளை உபாசித்தல் நலம். கிறிஸ்துவ மக்கள் கிறிஸ்து மார்க்கத்தையும் முஸ்லீம் மக்கள் முகம்மது நபி காட்டிய மார்க்கத்தையும் இந்துக்கள் ரிஷிகள் உபதேசித்த முறையையும் அனுசரிப் பதே மேலானது. பக்தியோடு வழிபடும் மக்கள் எந்த மதத்தினராயினும் சரி, பிற மதத்தினரை மிக்க வினயத் துடன் கவுரவிப்பார்கள். எல்லாச் சமயங்களுமே நம்மைப் பரம்பொருளிடத்தில் சேர்ப்பிக்கும்."

இவ்வாறு ராமகிருஷ்ண பரமஹம்ஸர் நூறு வருஷங் களுக்கு முன் உபதேசித்தார். இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முன்னுல் அசோக மன்னர் எழுதி வைத்த கல் சாஸனத்திலும் இதையே காண்கிறோம்.

"தேவர்களின் அன்புக்குரிய பிரிய தரிசனன் சாஸனம்: அரசர் எல்லாத் துறவிகளையும் இல்லறம் நடத்தும் கிரஹஸ்தர்களையும் அவர்கள் எந்த மதத்தின

ராயினும் அவர்களுக்குத் தக்க தானதிகளைத் தந்தும் மற்ற வழிகளில் கவுரவித்தும் சந்தோஷப் படுத்துகிறார். மகா ராஜாவுக்கு அதிக மகிழ்ச்சி தருவது எது வென்றால் எல்லா மதத்தினரும் தத்தம் முறையில் தத்தம் ஆத்ம சக்தியை விருத்தி செய்து கொள்வதே. பல துறைகளின் மூலமாக ஒருவன் இந்த ஆத்ம சக்திப் பெருக்கத்தை அடையலாம். ஆனால் எல்லாவற்றிற்கும் அடிப்படையான விஷயம் ஒன்று உண்டு. அது யாதெனில், தன் சமயத்தை மேம் படுத்துவதற்காகப் பிறர் சமயத்தைத் தூஷிக்கத் தோன்றும்; அவ்வாறு செய்யாமல் சமயம் வாய்த்த போதெல்லாம் பிற மதத்தினரைக் கவுரவித்துப் பாராட்ட வேண்டும். இப்படிச் செய்வதினால் ஒருவன் பிற மதத்தினருக்கு உதவி செய் வதோடன்றித் தன் சமயத்தின் பெருமையையும் வளர்ப் பான். இப்படிச் செய்யாமல் ஒருவன் பிற சமயங்களைக் குறைத்துப் பேசியும் பிற சமயத்தினரை அவமதித்தும் நடந்து கொண்டால் தன் சமயத்துக்கே தீங்கு இழைப்பவ னவான். பிறர் கொள்கையை ஒருவன் தூஷிப்பதால் தன் மதத்துக்குப் பெருமை சம்பாதிப்பானா? ஒரு நாளும் இல்லை. கட்டாயம் தன்னுடைய மார்க்கத்தின் புகழ் இதனால் தாழ்ச்சி அடையும்; பெருமை அடையாது. ஒவ்வொரு சமயத்தினரும் தத்தம் கொள்கைகளை நன்றாகக் கற்றுணர்ந்து அவ்வழியில் பக்தியை விருத்தி செய்து கொள்ள வேண்டும். இது அசோக ராஜா பிரியதரிசன னுடைய கோரிக்கை என்று அனைவரும் பிரசாரம் செய்வார்களாக.''

பல்லாயிரம் வருஷங்களுக்கு முன் பகவத் கீதையில் கண்ணன் சொன்ன உபதேசமும், அதற்குப் பின் அசோக மன்னருடைய பன்னிரண்டாம் கல் சாஸனமும், பிறகு ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் உபதேசமும், நம்முடைய வாழ்நாளில் அவதரித்து நமக்குப் பல துறைகளிலும் வழி

காட்டிய காந்தியடிகள் இட்ட ஆணையும் எல்லாம் ஒரே வித மாகவும் தெளிவாகவும் இருப்பதை உணர்ந்து அந்த ஆணைப்படி உறுதியாக நின்று நடந்து கொள்வோமாக.

இரண்டு பிள்ளைகள் மரத்தின் மேல் இருந்த ஒரு ஓணானின் நிறத்தைப் பற்றிச் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள்.

"நன்றாகப் பார். அந்த ஓணான் சிவப்பு நிறம்; நீ குருட னைப் போல் மஞ்சள் என்றாயே!" என்றான் ஒருவன்.

"பைத்தியக்காரனே! நீதான் குருடன். மஞ்சள் ஓணானைச் சிவப்பு என்கிறாய்!" என்றான் மற்றவன்.

இப்படியே விவாதம் முற்றிப் போயிற்று. பிறகு அவர் கள் அந்தத் தோப்பில் ஒரு குடிசையில் இருந்த கிழவியைக் கண்டு அவளை மத்தியஸ்தம் செய்யச் சொன்னார்கள்.

"உங்களுக்குள் என்ன சண்டை?" என்று கிழவி கேட்டாள்.

"அந்த மரத்தில் பார்! ஒரு சிவப்பு ஓணான் இருக் கிறது. இந்தப் பயல் அது மஞ்சள் என்று சொல்கிறான். என்னைக் குருடன் என்கிறான். நீ பார்த்துச் சொல். சொன்னால் ஒருவேளை அந்த மடையன் ஒப்புக்கொள்வான்" என்றான் சிவப்புக் கட்சிக்காரன்.

"அம்மா! நீயே பார்த்துச் சொல். மஞ்சள் ஓணானை இந்த முரடன் சிவப்பு, சிவப்பு என்று உளறிக் கொண்டிருக் கிறான்" என்றான் மஞ்சள் வர்ண வாதி.

கிழவி சிரித்தாள்.

"நீங்கள் இருவர் சொல்லுவதும் சரியே. வீண் சண்டை பிடிக்காதீர்கள். அந்த ஓணான் பல நிறம் கொள்ளும் பச்சோந்தி. அதனுடைய நிறம் அடிக்கடி மாறுவதை நான் கண்டிருக்கிறேன். போங்கள், சண்டை போட வேண்டாம்" என்றாள்.

கடவுளைப் பக்திக் கண்ணுல் கண்டு அனுபவித்த மகான்களுக்குக் கடவுளின் உருவமும் அருவமும் பல உருவங்களும் தெரியும். கடவுளைக் காணுமல் பேச்சில் வல்லமை காட்டும் சமய வாதிகளுக்கு ஆண்டவன் சொரூபம் தெரிய மாட்டாது. தங்கள் அகங்காரத்தின் சொரூபத்தையே அவர்கள் கடவுளாகப் பாவித்து வீண்பேச்சில் காலம் கழிப்பார்கள்.

நான்கு கபோதிகள் ஒரு மடாதிபதியின் சிப்பந்திக் கூட்டத்தில் பிச்சை எடுக்கப் போனுர்கள். அங்கே இருந்த யானையைத் தடவித் தடவிப் பார்த்தார்கள். யானைக்கார மாவுத்தன் இவர்களை வேடிக்கை செய்து கொண்டிருந்தான். "எப்படி யிருக்கிறது யானை?" என்று கேட்டான்.

காலைத் தடவிப் பார்த்த குருடன் "கம்பம் மாதிரி இருக்கிறது இந்த மிருகம்" என்ருன்.

"சீச்சீ! மரக் கிளையைப் போல் அல்லவா இருக்கிறது? இதைப் போய்க் கம்பம்போல இருக்கிறது என்கிருயே" என்ருன் இரண்டாம் குருடன். இவன் தும்பிக்கையைத் தடவிப் பார்த்து விட்டு இப்படிச் சொன்னுன்.

"என்ன நீங்கள் சொல்லுகிறீர்கள்? இது ஒரு பீப்பாய் மாதிரி யல்லவோ இருக்கிறது?" என்ருன் யானையின் வயிற்றைத் தடவிக் கொண்டிருந்த மூன்ரும் கபோதி.

"நன்ருய்ச் சொல்லுகிறீர்கள்! இதோ ஒரு முறம் போல இருக்கும் பிராணியை நீங்கள் பீப்பாய் என்றும் தடியென்றும் கம்பம் என்றும் உளறுகிறீர்களே!" என்ருன் யானையின் காதைத் தடவிக் கொண்டிருந்த நான்காம் குருடன்.

பரம்பொருளின் சொரூபத்தைப் பற்றிச் சண்டை போடும் குருடர்களின் அறிவும் இம்மட்டே.

# 3. பாம்பை நெருங்காதே!

பெரிய வியாபாரி ஒருவர் பரம ஹம்ஸரிடம் வந்து, "சுவாமி! நான் என்னுடைய சொத்தெல்லாவற்றையும் குடும்பத்துக்கு எழுதி வைத்துவிட்டேன். ஒரு வியாபார ஜோலியும் நான் இப்போது வைத்துக் கொள்ளவில்லை. ஆயினும் பகவான் எனக்கு இன்னும் தரிசனம் கொடுக்க வில்லை. இதற்கு என்ன காரணம்? எல்லாவற்றையும் தியாகம் செய்துவிட்டால் கடவுளைக் காணலாம் என்கிறீர் களே?" என்று கேட்டார்.

அதற்கு ராமகிருஷ்ணர், "செட்டியாரே! பழைய எண்ணெய்க் குடம் ஒன்றை முழுதும் காலிசெய்துவிட்டா லுங்கூடக் கொஞ்சம் எண்ணெய் ஒட்டிக்கொண்டுதா னிருக்கும். குடத்தில் உறிஞ்சிப் பல காலம் ஊறியிருக் கும் எண்ணெய் போகவே போகாது. அதை நாற்றமில்லா மல் சுத்தம் செய்ய இயலாது. அவ்வாறே உம்முடைய உலக விவகார வாசனையைச் சுலபமாக நீக்கிக்கொள்ள முடியாது. எல்லாச் சொத்துக்களையும் எழுதிவைத்து விட்டீராலும் மனதில் ஊறியிருக்கும் உலகப்பற்று எளி தில் நீங்கிவிடாது" என்று அருளினர்.

சொத்தையெல்லாம் எழுதிவைத்து விட்டதனாலேயே ஒருவன் சந்நியாசியாகப் போய்விட மாட்டான். கவலை யில்லாமல் அக்கடா வென்றிருக்கலாம் என்கிற எண்ணம் போதும் சொத்தை எழுதிவைத்து விடுவதற்கு. பணம், பாந்தவ்யம், காமம் முதலிய பற்றுக்கள் அறவே மனதி னின்று நீங்கி ஆண்டவனிடம் காதல் பொங்கிய ஞான நிலை அடைவது வேறு விஷயம்.

உள்ளத்தைப் பக்குவப்படுத்திக் கொள்ளாமல், எல்லா வற்றையும் விட்டு விட்டு, பிறகு விட்ட பொருள்களின் நினைவிலேயே உள்ளம் தங்கி அலைந்துகொண்டு கஷ்டப் படுவதும், பிறருக்கு இது தெரியாமலிருக்கும்படி லோக அபவாதத்துக்குப் பயந்து பொய் வேஷம் போடுவதும் துறவு நிலையாகாது. இதைக் காட்டிலும் யோக்கியமான இல்லற வாழ்வே மேலாகும்.

பாழிகளும் பாம்புகளு மிருக்கும் ஒரு பழைய வீட்டில் குடியிருந்தால் எவ்வளவு ஜாக்கிரதையாக இருப்போமோ, அப்படியே வாழ்க்கையில் காமமும் லோபமுமாகிய விஷப் பொருள்களைப் பற்றி ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். பாழியில் ஒடுங்கியிருந்து திடீர் என்று கடித்துக் கொல்லும் நாகப்பாம்பைப் போலவே பண ஆசையும் காமத்தின் வேக மும் எதிர்பாராத முறையில் மனிதனைப் பிடித்து வீழ்த்தி விடும். ஞானிகளாயினும் சர்வதா ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இடைவிடாமல் ஆண்டவன் நினைவை மனதில் நிறுத்திவைக்க வேண்டும். சர்ப்பத்தைக் கண் டால் பழைய நாட்களில் கிராம வழக்கம் "அம்மா தேவி! வாலைக் காட்டிச் செல். படத்தைத் தூக்காமல் போய்விடு!" என்று ஒரு மந்திரத்தைச் சொல்லுவார்கள். பாம்பும் போய்விடும். காம விருப்பத்தை நாகப்பாம்பாகவே கருத வேண்டும். அதனுடன் விளையாடலாகாது. அதனின்று தூர நிற்பதே விவேகம். 'நான் விவேகன்; ஏன் பயப்பட வேண்டும்? இதில் என்ன கேடு வரும்? இவ்வளவோடு நிற்பேன். அதற்குமேல் போகமாட்டேன்' என்றெல்லாம் எண்ணுவது அவிவேகம். பாம்பை நெருங்கினல் நிச்சய மாகக் கடித்து விடும்.

*

ஒரு தனவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் சென்று " உங்களுக்கு ஒரு பெரிய தொகை உதவ விரும்புகிறேன். இதோ, இந்த உண்டியலைப் பெற்றுக்கொண்டு அவசியமான செலவுக்கு உபயோகித்துக் கொள்ளுங்கள் "என்றார்.

நல்ல எண்ணத்துடன்தான் அந்த தனவான் இவ்வாறு கேட்டுக் கொண்டார். ஆனால் சுவாமி ராமகிருஷ்ணர் ஒப்பவில்லை. " வேண்டாம் ! உம்முடைய பணத்தை நான் வாங்கிக் கொண்டால் அதைப் பற்றிச் சிந்தனை செய்து கொண்டிருக்க நேரிடும். என் உள்ளம் பணத்தில் சிக்கிக்கொண்டு அலையும் " என்று மறுத்தார்.

" நல்ல பாத்திரம் பார்த்துத் தருமம் செய்யவேண்டும் என்பது என் ஆசை. இதை ஏன் தடுக்கிறீர்கள் ? நீங்கள் பணத்தைத் தொடவே வேண்டாம். உங்களுக்குப் பணிவிடை சரியாக நடப்பதற்காக உங்கள் பந்துக்களில் ஒருவர்பேரில் பணம் பாங்கியில் போட்டுவைக்க அனுமதி தாருங்கள். இதற்கு என்ன ஆட்சேபனை ? என்மேல் இரங்கி இதற்கு ஒப்புக்கொள்ளுங்கள் " என்று தனவான் மிகவும் வற்புறுத்தினார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் இதற்கும் ஒப்பவில்லை. " நீங்கள் சொல்லும் ஏற்பாட்டுக்கும் நானே பணம் பெற்றுக் கொள்ளுவதற்கும் என்ன வித்தியாசம் ? உண்மையை ஏமாற்ற முடியுமா ? நான் நேரில் உங்கள் பணத்தை வாங்கிக் கொள்ளாமல் என்க்காக உங்களுடைய யோசனைப்படி வேறொருவர் பெற்றுக் கொண்டால் அவரிடம் எவ்வளவு பணம் இருந்தது, இப்போது எவ்வளவு இருப்பு என்றெல்லாம் என் சிந்தனை அந்தப் பணத்தில் நிற்கு மல்லவா ? யோசித்துப் பாருங்கள். இந்த ஏற்பாட்டுக்கு நான் ஒப்புக் கொள்ள முடியாது, வேண்டாம் " என்று மறுத்து விட்டார்.

ஆயினும் அந்தத் தனவான் விட்டபாடில்லை. "உங்களுக்கு ஒரு பற்றும் இல்லை. நீரில் எண்ணெய் போல் உங்கள் உள்ளம் நிற்கும். தீரர்கள் ஏன் பயப்பட வேண்டும்? பணமும் பெண்ணழகும் கடலைப்போல் நிரம்பி நின்றாலும் தூய உள்ளமானது அந்தக் கடல் வெள்ளத்தில் கலக்காமல் எண்ணெய் போல் மிதந்து நிற்கும் என்று நீங்களே சொல்லியிருக்கிறீர்கள்" என்று மறுபடியும் வற்புறுத்தினார்.

"பற்று நீத்த உள்ளம் எண்ணெய்போல் மிதக்கலாம்; உண்மைதான். ஆனால் வெகுநாள் ஜலத்தோடு சேர்ந்து கிடந்தால் நல்ல எண்ணெயும் கெட்டுப்போய் நாற்ற மெடுக்கும் என்பது உங்களுக்குத் தெரியாதா?" என்றார் ஸ்ரீ ராமகிருஷ்ணர் நகைத்து.

*

தூய மனதுக்குச் சக்தி உண்டுதான். அது அபாயங்களைத் தாண்டித் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும். வலையில் சிக்காது. ஆயினும் யாரேனும் நீண்டகாலம் விஷப் பரீட்சை செய்தல் தவறாகும். நல்ல விவேகியின் உள்ளமும் சில சமயம் தடுமாறிப் போகும். காமப் பொருள்களினின்று ஜாக்கிரதையாகத் தூர நிற்பதே விவேகம். அவ்வாறின்றிப் பரீட்சை செய்து பார்க்கலாம் என்று நெருங்கி ஒருவன் படிப்படியாக விட்டுக் கொடுத்துக் கொண்டு போய் அபாயத்தின் அருகிலேயே நின்றானானால் நிச்சயமாகக் கெட்டுப் போவான்.

# 4. சித்த சுத்தி

அழகிய ஒரு ஸ்திரீயைப் பார்க்கும்போது உலக மாதாவான தேவியைத் தியானிக்க வேண்டும். முன் நிற்கும் ஸ்திரீ உலக மாதாவின் பல உருவங்களில் ஒன்று என்று நினைவூட்டிக்கொண்டு, " இது தேவியின் அவதாரம், உலக மாதா அழகாக இல்லாமல் வேறு எப்படி யிருப்பாள்? அன்புக்குரிய என் தாய் மகாதேவி எனக்குத் தரிசனம் தருகிறாள் " என்று முன் நிற்கும் தாயை வணங்க வேண்டும். உள்ளத்தைக் குழந்தை பாவத்தில் நிறுத்திக் கொள்ளவேண்டும். தாயைக் கண்டால் வேறு எண்ணங் களுக்கு இடம் ஏது? இந்த உபாயத்தைத்தான் ஸ்ரீ ராம கிருஷ்ணர் முதலிலிருந்து கையாண்டார். விவேகமும் கல்வியும் பெற்றவர்களுங்கூடக் காம வேகத்துக்கு இரை யாகிவிடுவது உண்டு. இந்த அபாயத்திலிருந்து காப் பாற்றிக்கொள்ள பகவான் ராமகிருஷ்ணர் உபதேசித்திருக் கும் இந்த உபாயம் மிகச் சிறந்த சாதனமாகும்.

பெண்ணுருவத்தைத் துவேஷிக்கலாகாது. பெண் களைத் தாழ்த்தியும் பேசலாகாது. வஞ்சக உருவம் என்று ஸ்திரீகளை இகழ்வது தவறு. தாயை வெறுக்கலாமா, இகழலாமா? மகாபுனிதமான தேவியின் அவதாரம். இவள் உனக்குத் தாய், அனைவருக்கும் தாய், மகாசக்தி, உலகத்துக்கு மாதா. எங்கும் பரவி நிற்கும் பரம்பொருளே இந்த உருவம் எடுத்து நிற்கிறது. அதன் சௌந்தர்யமும் புன்சிரிப்பும் தாய்க்குள்ள இயற்கையான பிரியத்தின் அடையாளம். தேவியை வணங்கு, காமம் மறைந்து போகும். பகவான் ராமகிருஷ்ணர் உபதேசித்த இந்த உபாயத்தைப் பயன்படுத்திக்கொண்டு பாருங்கள்; மனம் தாய்மைப் படுவதை உடனே உணர்வீர்கள்.

சட்டியும் கரண்டியும் துடுப்பும் எல்லாம் இருந்தும், நீ எழுந்து சமைத்தா லல்லவோ உணவு ஆகும்? சாமக் கிரிப் பட்டியலை வாசித்துக் கொண்டிருப்பதில் பண்டம் உண்டாகாது. உன் முயற்சி யில்லாமல் போனால் உப தேசங் கள் என்ன செய்யும்? பக்தி நெறியில் மனதைச் செலுத்து.

அழகிய பெண்ணுருவத்தைக் கண்டு மனம் தடுமாறி னால் உடனே அசோக வனத்தில் மரத்தடியில் தவமிருந்த சீதா தேவியைத் தியானித்துக்கொள். ராக்ஷசர்களோடு சேருவாயா? அல்லது அனுமன் காலில் வீழ்ந்து உன் உள்ளத்திலுள்ள மாசை ஒப்புக்கொண்டு தாயின் அருளைத் தேடுவாயா? தேவி இந்த உருவத்தில் நின்று, உன் பக்தியை அல்லவோ கேட்கிறாள். மூர்க்கனைப்போல் உன் காமத்தைக் கிளப்பிக் கொள்ளாதே! பொய்யை மெய்யாகக் கருதி மாளும் வழியைத் தேடிக் கொள்ளாதே!

நன்மைக்கும் தீமைக்கும் ஊற்று நம் உள்ளத்தில் இருக்கிறது. அங்கே குடி கொள்ளும் எண்ணங்களே புறச் செயல்களாக உருவம் எடுக்கின்றன. புறச் செயல் தான் பெரிது, உள்ளத்தி லிருப்பதை யாரும் அறியவில்லை யென்று உள்ளத்தை வரவர அழுக்குக் குட்டையாய்ப் போக விடாதே. அப்படிச் செய்தால் வாழ்க்கைச் செயல்கள் அனைத்தும் தப்ப முடியாத வழியில் கெட்டுப்போகும். குடிநீர் எடுக்கும் கிணற்றில் அழுக்கு சேரும்படி விட்டால் ஊரின் ஆரோக்கிய நிலை கெட்டுப் போவது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயம் இதுவும்.

*

நண்பர்கள் இரண்டு பேர் தெருவில் காரியம் ஒன்று மில்லாமல் போய்க்கொண் டிருந்தபோது ஒரு வீட்டில் யாரோ புராணம் படித்துக் கொண்டிருக்க, அதைப் பக்த கூட்டம் கூடிக் கேட்டுக்கொண்டிருந்ததைக் கண்டார்கள்.

" வாடா ! நாமும் போய்க் கதை கேட்கலாம் " என்று அழைத்தான் திருவேங்கடம்.

" இந்த ஹரிகதை காலட்சேபம் எனக்குப் பிடிக்காது. இதனால் என்ன பிரயோஜனம் ? சும்மா அழுதுகொண்டு நடக்காத கதையை யெல்லாம் சொல்லிக்கொண்டு காலம் கழிக்கிறார்கள். அதோ அங்கே தாஸித் தெருவுக்குப் போகலாம், வா ! அங்கே உல்லாசமாக இன்று மாலையைக் கழித்து விடலாம். நம்முடைய கஷ்டம் இருக்கவே இருக்கிறது. ஒரு நாள் தமாஷாக அனுபவிக்கலா மல்லவா ? " என்றான் சாம்பன்.

திருவேங்கடம் இதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. " எனக்கு அது வேண்டாமப்பா ! நீ வேண்டுமானால் போ. நான் இவ்விடம் உட்கார்ந்து ஹரிகதை கேட்கிறேன் " என்று சொல்ல, இருவரும் பிரிந்து போனார்கள். சாம்பன் தாசித் தெருவுக்குப் போனான். திருவேங்கடம் பாகவதர் கதை சொல்லும் திண்ணைக் கூட்டத்தில் உட்கார்ந்து கொண்டான்.

தாசி வீட்டுக்குப் போன சாம்பனுக்கு அன்று ஏனோ மனசில் சந்தோஷம் உண்டாகவில்லை. " இங்கே ஏன் வந்து சிக்கிக் கொண்டேன் ? ஹரிகதைக்கே நானும் போயி ருந்தால் நன்றாயிருந்திருக்கும் " என்று எண்ணி வருத்தப் பட்டான். அங்கே நான்குபேர் கூடி சீட்டு ஆடிக்கொண்டும் வேடிக்கையாகப் பேசிக்கொண்டுமிருந்தார்கள். அவர் களோடு இவனும் கலந்து உட்கார்ந்தான். ஆனால் மனம் அங்கே இல்லை. திண்ணையில் பாகவத பக்தர் கூட்டத்து நினைப்பாகவே இருந்தான்.

திருவேங்கடமோ காலட்சேபக் கூட்டத்தில் உட்கார்ந் திருந்தாலும் அவனுடைய உள்ளம் கதையில் செல்லவில்லை. பாகவதர் நன்றாகப் பாடவில்லையென்று அவர் குரல் கம்மி யிருப்பதைக் கவனித்துக் கொண்டிருந்தானே யொழிய,

கதையில் அவனுக்குப் பிடிப்புண்டாகவில்லை. "சாம்பன் இப்பொழுது என்ன செய்துகொண்டிருப்பானோ? எவ்வளவு சந்தோஷமாக இருப்பானோ? நானும் அவனோடு போயிருந்தால் நன்றாக இருந்திருக்கும்" என்றெல்லாம் எண்ணிக் கொண்டிருந்தான். சாம்பனைப் பற்றியும் அவன் போயிருக்கும் இடத்தைப் பற்றியும் அங்குள்ள சிநேகிதர்களைப் பற்றியும் தாசிகளைப் பற்றியுமே யோசித்துக் கொண்டிருந்தான். பாகவதர் கதையில் கவனமே இல்லாமல் அவன் மனம் தாசி வீட்டிலேயே இருந்தது.

தாசி வீட்டில் இருந்தாலும் சாம்பனுடைய மனம் ஹரி கதா காலட்சேபம் நடக்கும் திண்ணையில் திருவேங்கடத்துடனேயே இருந்தது. "திருவேங்கடம் எவ்வளவு சந்தோஷமாக இருப்பான்? புண்ணியமும் சம்பாதித்து விட்டான். நான் இங்கே மடையர்கள் கூட்டத்தில் இருக்கிறேனே" என்று எண்ணிக்கொண்டே காலங்கழித்தான்.

உண்மையில் திருவேங்கடம் பக்தர் கூட்டத்திலிருந்தாலும், மனத் தூய்மை இல்லாதபடியால் தாசி வீட்டுக்குப் போன பாவத்தை அனுபவித்தான். சாம்பன் தாசியின் வீட்டில் இருந்தாலும் பக்தர் கூட்டத்து நினைப்பிலிருந்ததால் ஓரளவு தூய்மை அடைந்தான்; போகக்கூடாத இடத்துக்குப் போயிருந்தாலும் நாசமடையாமல் தப்பிப் பிழைத்தான்.

# 5. பக்தி மார்க்கம்

பகவான் ராமகிருஷ்ணர் ஒரு சீடருக்குச் சொல்லுகிறார் :

உனக்கு முன்னால் நான் இருக்கிறேன் அல்லவா? ஆனால் என் முகத்துக்கு முன்னால் ஒரு துணியைப் பிடித்துக் கொண்டேனானால் என்னை நீ காண்பதில்லை. உடனே நான் மறைந்து போகிறேன். முன்னைப் போலவே நான் உனக்கு அருகிலேயே இருந்து வருகிறேன். ஆயினும் துணிக்குப் பின் நான் மறைந்து உன் கண்ணுக்கு இல்லாமற் போகிறேன். இவ்வாறே ஈசுவரன் உனக்கும் எனக்கும் அனைவருக்கும் வெகு அண்மையிலே இருக்கிறான்; மற்ற எப்பொருளையும் விடக் கிட்டத்திலே எப்போதும் இருக்கிறான். ஆனால் 'நான்' என்னும் ஒரு திரை அவனை மறைத்து விடுகிறது. உன் கண்ணுக்கு முன்னால் ஒரு சிறு துணியை வைத்துக்கொண்டால் பெரிய மலையும் மறைந்து போகிறது. அகங்காரம், ஆணவம் என்று சொல்லப்படும் இந்தத் திரையை நாம் பிடித்துக்கொண்டிருக்கும் வரையில் நாம் கடவுளைக் காணமுடியாது. 'நான்' என்பது ஒழிந்தால் பளிச்சென்று ஆண்டவன் தோன்றுவான்.

அருள் ஒருவன் பேரில் வீசினால் அவன் தன் செயல் அனைத்தும் ஈசன் செயல் என்றும், நடைபெறும் நிகழ்ச்சிகள் எல்லாம் அந்தப் பெருங் கூத்தனின் கூத்து என்றும் உணர்வான். இந்த ஞானம் ஒருவன் பெற்றுவிட்டால் அவன் ஜீவன் முக்தனாகி விடுகிறான். அதாவது உடலுடன் இருக்கும்போதே முக்தி அடைந்து விடுகிறான். அவனுக்குப் பயம் என்பது கிடையாது; துயரம் என்பதும் இல்லை.

நன்ருக ஈடுபட்ட பக்தன் அடிக்கடி தனக்குத் தானே நினைவூட்டிக் கொள்ளுவான் : "ஐயனே, நீதான் எல்லாச் செயலும் செய்பவன். நான் செய்வது ஒன்றும் இல்லை. பொம்மை போல் ஆட்டப் படுகிறேன். நீதான் என்னைச் செய்விக்கிருய் ; அனைத்தும் உன்னுடைய மகிமை. நான் எந்த வேலையையாவது நன்ருகச் செய்தேனுைல், அது உன்னுடைய சிறப்பு; வேருென்றுமில்லை. இந்த வீடு, இந்தக் குடும்பம் என்னுடையது அல்ல. இவை உன்னுடைய பொருள்கள். உன் இச்சைப்படி பணி செய்யும் ஆள் நான். உன் ஆணைப்படி பணி செய்வதே என் உரிமையும் என் மகிழ்ச்சியும்."

இப்படி அடிக்கடி நினைவூட்டிக்கொண்டு, உண்மையான பக்தியுடனும் வாழ்க்கை நடத்திேேைமானுல் 'நான்' என்னும் திரை ஒழிந்து பெருங்காட்சி அடைவோம்.

*

'நான்' என்பது இரண்டு விதமானதாகும். ஒன்று பக்குவப்பட்டுப் பழுத்த பக்தியோடு கலந்த 'நான்' என்கிற உணர்ச்சி. மற்ருென்று பழுக்காத ஆணவம். என் வீடு, என் குழந்தை, என் மனைவி, என் உடல், என் சொத்து, என் புகழ் இவை போன்ற எண்ணங்கள் கூடியது 'பழுக்காத' அகங்காரம். இது கடவுளை மறைக்கிற திரை.

"ஆண்டவன் ஆணைப்படி பணி செய்பவன் நான். இவை அனைத்தும் அவன் சொத்து, அவன் உரிமை, அவன் சிறப்பு. நான் அவனுடைய பணியாள்; என் மகிழ்ச்சி அவனுடைய பணியைச் செய்வது" என்று பக்தன் தன் வாழ்க்கையை நடத்துவான். அத்தகைய வாழ்க்கையின் பயனுக ஆணவமானது கனிந்த பழம் போலாகி விடும். நாளடைவில் அது உதிர்ந்து போகும். பக்தன் ஜீவன் முக்த நிலையை அடைவான்.

'நான்' என்னும் எண்ணத்தை எளிதில் அகற்றி விட முடியாது. அறிவும் அத்துவைத சாஸ்திரப் படிப்பும் இருந்தால் மட்டும் போதாது. தான் ஈசனுடைய சேவகன் என்று முழுதும் மாற்றிக் கொண்டு பக்தி வாழ்க்கை வாழ வேண்டும். பக்தனுடைய 'நான்'—தன்மையில் குற்ற மில்லை. குழந்தையுடைய 'நான்' எவ்வளவு குற்றமற்ற தோ அதைப் போன்றது. பழுக்காத அகங்காரத்தைத்தான் ஒழிக்க வேண்டும். பக்தனுடைய 'நான்' உணர்ச்சி யானது கடவுளண்டை கொண்டு போய்ச் சேர்க்கும். பக்தி நெறியில் நின்றவனுடைய உள்ளத்திலும் ஓரளவு 'நான்' என்பது தங்கினாலும் அது ஆண்டவனுடைய அடிமையாக நிற்கிறது. அதனால் குற்றமில்லை. பக்தி மார்க்கம் மிகச் சிறந்த வழி.

*

உள்ளிப்பூண்டு வைத்திருந்த பாத்திரத்தை எவ்வளவு கழுவினாலும் நாற்றம் இருந்து கொண்டே யிருப்பதைக் காண்கிறோம். அதைப் போலவே அகங்காரமும். அது பொல்லாதது. மற்றவர்கள் தங்கள் அகங்காரத்தை நீக்கிக் கொண்டாலும் கொள்ளலாம். துறவியின் பாடு வெகு கஷ்டம். 'நான்' என்பதை பக்தி வழியில் செலுத்தி மெள்ளத் திருத்திக்கொண்டு போனால் பக்குவ மடைந்து பழுத்துத் தளர்ச்சி யடைந்து நீங்கும்.

*

படித்துப் பட்டம் பெற்ற வைத்தியர் ஒருவர் வந்து நோய் வாய்ப் பட்ட குழந்தையைப் பார்த்துவிட்டு, அதன் தாயிடம், "கவலை வேண்டாம். நான் சொஸ்த்தப்படுத்தி விடுகிறேன். குழந்தையின் உயிருக்கு நான் பொறுப்பு" என்று கூறுகிறார்.

இப்படி வைத்தியர் பேசும்போது ஆண்டவன் நகைக்கிருன் என்கிருர் ராமகிருஷ்ண பரமஹம்ஸர். உயிருக்குக் காவலும் ஏஜமானனும் வைத்தியன் 'அல்ல. அது ஆண்டவனுடைய திருவிளையாடல்.

அண்ணன் தம்பி இருவர், ஒரு குடும்பமாக இனிமேல் வாழ முடியாது என்று தீர்மானித்து நிலத்தைப் பங்கிட்டுக் கொள்ள ஏற்பாடு செய்துவிட்டார்கள். கயிற்றைப் பிடித்து வயலை அளந்து "இது உன்னுடைய நிலம், தம்பி!—இது என்னுடைய நிலம்" என்று அண்ணன் சொல்லுகிருன். அப்போதும் ஆண்டவன் சிரிக்கிருன் என்கிருர் பகவான் ராமகிருஷ்ணர். நிலையும் சுதந்திரமும் அற்ற ஒரு ஜீவன் "இது என்னுடையது" என்று பேசும்போது ஆண்டவன் சிரிக்காமல் என்ன செய்வான்?

✶

பல ஆண்டுகளுக்கு முன் மேல் நாட்டில் ஒரு கிறிஸ்துவத் துறவி—வாலிபர்—துறவிமடத்தில் சேர்ந்து அங்கே மற்ற துறவிகளுக்காகச் சமையல் வேலையும் வேறு குற்றேவல் பணிகளும் செய்து வந்தார். இவர் அதிகப் படிப்பில்லாதவர்; வயதிலும் சிறியவர். ஆயினும் மகா புனித உள்ளம் படைத்த பக்தர். சமையல் வேலை துணி துவைத்தல், சட்டி பானை கழுவுதல் முதலிய எல்லாப் பணிகளும் நேரடியாக ஆண்டவனுக்குச்' செய்வதாகவே எண்ணிச் செய்து வந்தார். தியானம் ஜபம், இவற்றிற்குக் குறிப்பான காலமோ, இடமோ கிடையாது. எப்போதும் எந்த வேலை செய்துகொண்டு எந்த இடத்திலிருந்தாலும் அவருடைய பக்கத்தில் ஆண்டவன் இருப்பதாக அவர் கண்டார். கடவுள் அவருக்கு ஒரு நிரந்தர சகாவாகப் போய் விட்டார். தன் பக்கத்தில் இருந்தும் படுத்தும் விளையாடியும் தன்கூட இருந்து வேலை செய்து வருவ

தாகவே ஆண்டவனை அவர் கண்டார். இவருடைய பத்தியும் இடையரு ஆனந்தமும் மடத்தில் வசித்துவந்த மற்ற துறவிகளுக்கு ஒரு வியப்பான நிகழ்ச்சியாக இருந்தது. பிரதர் லாரென்ஸ் (Brother Lawrence) என்ற பெயர் கொண்ட இந்தத் துறவியின் சரித்திரத்தைப் படிக்கிற போது, பிருந்தாவன கோபிகளுடைய கதையைப் போலவும், பகவான் ராமகிருஷ்ணருடைய சரித்திரத்தைப் போலவும் தொனிக்கிறது. எந்த தேசத்திலும் எந்தக் காலத்திலும் சில மகாத்மாக்கள் ஜீவன் முக்த நிலை அடைந்து, ஆண்டவனை நேரில் காணப் பெறுகிருர்கள்.

## 6. அரசனும் பாகவதரும்

சாஸ்திரங்களும் புராணங்களும் படித்த ஒரு பிராமணர் அரசனிடம்போய் அரமனையில் புராணம் வாசித்துச் சொல்லத் தாம் விரும்புவதாகத் தெரிவித்தார்.

"மகாராஜாவே! பாகவதம் மிகச் சிரேஷ்டமான தரும நூலாகும். அதை நீங்கள் நல்ல ஆசிரியரைக் கொண்டு படிக்க வேண்டியது அவசியம். எனக்கு உத்தரவு தந்தால் நான் சொல்லுவேன். நான் தரும நூல்களை நன்ருகக் கற்ற பெரிய பண்டிதன் என்று சாஸ்திரம் படித்த வித்துவான்கள் அறிவார்கள். அரமனையில் பாகவதம் படித்துச் சொல்ல வேண்டும் என்பது என்னுடைய ஆசை. வித்துவான்களை உபசரிப்பது அரசர்களுடைய கடமை" என்று பிராமணர் கூறினர்.

அரசன் இயற்கை யறிவு படைத்தவன். இவர் பாகவத புராணத்தைப் படித்து அதன் உட்பொருளை உண்மையாக உணர்ந்தவராக இருந்தால் தியானமோ ஜபமோ தவமோ செய்து கொண்டல்லவா இருந்திருப்பார், பணமும் புகழும் சம்பாதிக்கலாம் என்று ஆசைப்பட்டு அரசனுடைய தயவைத் தேடி இராஜமாளிகைக்கு வந்திருக்க மாட்டாரே என்று எண்ணி அவருக்குப் பின் வருமாறு பதில் சொன்னன் :—

"பண்டிதரே! உங்களை ஆசிரியனக அமைத்துக் கொண்டு பாகவதம் கேட்க நானும் விரும்புகிறேன். மறுபடியும் தாங்கள் பாகவதத்தை நன்ருக ஒன்றிரண்டு முறை படித்துவிட்டு வாருங்கள்."

அரசன் சொன்னதைக் கேட்டு வித்துவான் கொஞ்சம் கோபம் அடைந்தார். ஆனல் அரசனிடம் கோபித்து

என்ன பயன் ? ஒன்றும் பேசாமல் வீட்டுக்குத் திரும்பிப் போனூர்.

" இந்த அரசன் சுத்த மூடன். பண்டிதன் யார், படிக்காதவன் யார்? என்று இவனுக்குத் தெரிந்து கொள்ள முடியவில்லை. என்னைப் 'பாகவதம் நன்ருகப் படித்து விட்டு வாருங்கள் ' என்கிருன் ! பன்னிரண்டு வருஷங்கள் நான் சாஸ்திரம் படிப்பதில் செலவழித்திருக்கிறேன். பாகவதம் மனப்பாடமாகவே இருக்கிறது. இந்த அரசன் என்னை மறுபடியும் படித்து விட்டு வரச் சொல்லுகிருன் " என்றிவ்வாறு தமக்குள் நொந்துகொண்டு வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தார்.

மனைவியிடம் நடந்ததைச் சொன்னுர். அவள் யோசித்துவிட்டு, " என்னவானுலும் அரசன் அரச னல்லவோ ? அவன் சொல்லியவாறு இன்னுமொரு முறை பாகவதத்தைப் படித்துவிட்டு மறுபடியும் போய் 'சந்நி தானத்தில் சொன்னபடியே செய்துவிட்டு வந்திருக்கிறேன்' என்று கேளுங்கள். எப்படியாவது அரசனைத் திருப்தி செய்து அரமனையில் பௌராணிகராக அமர்ந்து விட் டால் நாம் பலவிதத்தில் லாபம் அடையலாம் " என்ருள்.

மனைவி சொன்னபடியே பிராமணரும் தம்முடைய கோபத்தை அடக்கிக் கொண்டு பாகவதத்தை நிதானமாக மறுபடியும் படித்தார். எந்தக் கட்டத்தில் எந்தக் கேள்வி கேட்டாலும் உத்தரம் சொல்லத் தயாராக நூலை நன்ருகப் பாராயணம் செய்துவிட்டு, ஒரு நல்ல நாள் பார்த்து அரமனைக்கு மறுபடியும் போனுர்.

அரசன் பிராமணரை மரியாதையாகவே வரவேற்ருன். " படித்தாகி விட்டதா ?" என்று அரசன் கேட்க, " மகாராஜாவே ! சந்நிதானத்து உத்தரவுப்படி புராணத்தை நன்ருகப் பலமுறை ஓதிவிட்டு வந்திருக்கிறேன். பாக வதத்தைக் கிரமப்படி விஸ்தாரமாகச் சொல்லி உங்க

ளுடைய கீர்த்தியையும் தருமத்தையும் வளரச் செய்ய வேண்டும் என்பதே என் ஆசை '' என்றார் வித்துவான்.

அரசன் '' பண்டிதரே ! நான் உம்முடைய சீடனுக அமைந்து பாகவதம் கேட்கப் போகிறேன் என்பது நிச்சயம். ஆனால் இன்னும் ஒரு முறை நீங்கள் பாகவதத்தைப் படித்து விட்டு வாருங்கள் !'' என்றான்.

மறுபடியும் இவ்வாறு ஏமாற்றம் அடைந்த பிராமணர் வீடு திரும்பி மனைவியிடம் நடந்த கதையைச் சொன்னார். அவள் '' இதில் ஏதோ ரகசியம் இருக்க வேண்டும். அரசன் சொற்படி மறுபடியும் படித்துத்தான் தீருங்கள், பார்ப் போம் '' என்றாள்.

விடா முயற்சியுடன் பண்டிதர் மறுபடியும் படிக்க ஆரம்பித்தார். மறுபடியும் ஏமாற்றம் அடையக் கூடா தென்று தனியாக ஒரு விடுதி ஏற்படுத்திக் கொண்டு மிக்க கவனமும் ஆழ்ந்த சிந்தனையும் செலுத்திப் படித்தார். இந்த முறை பாகவதத்தைப் படிக்கும்போது அவர் அந்த நூலில் புதிய புதிய கருத்துக்களைக் கண்டார். அவரையும் அறியாமல் புருஷோத்தமன் அவதார மகிமை அவர் உள்ளத்தைக் கவர்ந்தது. சரியான வேளையில் சாப்பிடு வதையும் மறந்தார். பாகவதத்தில் முந்திக் காணுத உண்மைகளை யெல்லாம் கண்டார். வீட்டுக்கும் போகாமல் தாம் ஏற்படுத்திக் கொண்ட ஆசிரமத்திலேயே காலம் கழித்தார்.

புகழ், தனம், கவுரவம், இவையெல்லாம் அற்பப் பொருள்கள் என்று தோன்ற ஆரம்பித்தது. பிறகு பாக வதம் படிப்பதையும் விட்டு விட்டுத் தியானத்திலே ஆழ்ந்து விட்டார். அரசன் மாளிகைக்குப் போகும் எண்ணத்தையும் துறந்து விட்டார்.

குடும்பத்தைக் கவனியாமல் இவ்வாறு தியானத்திலும் ஜபத்திலும் தன் புருஷன் காலம் கழிப்பதைப் பார்த்த

மனைவி மிகவும் வருத்தமுற்ருள். எதையோ ஆரம்பித்து இப்படி விபரீதமாக முடிந்ததே என்று அவள் துக்கப்பட்டு, ஒன்றும் தோன்ருமல் அரசனிடம் சென்று தன் கஷ்டத்தைச் சொல்லிக் கொள்ள அனுமதி கோரினுள். அரசன் அவளிடம் நடந்ததைக் கேட்டறிந்தான். அரச னுக்கு அளவற்ற மகிழ்ச்சி உண்டாகி அந்த வித்துவானைப் பார்ப்பதற்குத் தானே புறப்பட்டுச் சென்ருன்.

அரசன் ஆசிரமத்தை யடைந்தபோது, பிராமண ருடைய முகத்தில் புது தேஜஸ் ஜொலிப்பதைக் கண்டான். சம்பூர்ண ஞானம் அடைந்த ஒளி பிரகாசித்தது.

அரசன் விழுந்து கும்பிட்டு, "கடவுளின் அருள் பெற்றுவிட்டீர். உங்களை நமஸ்கரிக்கிறேன். நான் செய்த அபசாரத்தை மன்னிக்க வேண்டும்" என்று சொன்னுன்.

படிப்பும் புலமையும் வேறு; படித்த படிப்புடன் பக்தியும் கலந்து மெய்யுணர்வாவது வேறு.

# 7. பெண்மையும் தாய்மையும்

பெண்ணாய்ப் பிறந்த எல்லோரும் தேவியினுடைய அம்சங்களே யன்றி வேறல்ல என்பது பகவான் ராம கிருஷ்ணர் அடிக்கடி வற்புறுத்திச் சொன்ன விஷயம்.

" தேவி தன்னைப் பல பகுதிகளாகச் செய்துகொண்டு நிற்கிறாள். அப் பகுதிகளே உன் பார்வைக்குள் வரும் ஸ்திரீகள் அனைவரும். ஆனபடியால் அவர்களில் யாரைக் கண்டாலும் 'அம்மன் எனக்கு தரிசனம் கொடுக்கிறாள்' என்று மனதை ஒரு அம்மன் கோயிலுக்குள் புகும்போது நீ கொள்ளும் பாவத்தில் நிறுத்திக்கொள். நல்ல சுபாவம் படைத்தவராயினும் சரி, வேறு விதமானவராயினும் சரி, ஸ்திரீகள் அனைவரும் தேவியின் சொரூபம் என்று அறிந்து வணங்கு. உனக்கும் எனக்கும் அவர்களைப் பற்றித் தூஷிக்கவோ பாராட்டவோ என்ன உரிமை? உலகத்துக்குக் காரணமான தேவியின் விளையாட்டை நாம் அறிவோமா? வணங்குவதே நம்முடைய கடமை. பெண்ணாய்ப் பிறந்த எல்லோருமே தேவியின் சொரூபம். அலங்கரிக்கப்பட்ட அம்மன் விக்கிரகத்தைப் பூஜித்து வணங்குவதைப் போலவே உயிருள்ள இம்மூர்த்திகளையும் தேவி என்று பாவித்து வணங்கு. "

★

" குருவே! பெண் குலத்தினிடம் நாம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்? " என்று ஒரு சீடர் பரம ஹம்ஸரைக் கேட்டார்.

" ஆண்டவனுடைய அருள்பெற்று அவனுடைய தரிசனத்தை அடைந்தவன் பெண்களைப்பற்றிப் பயப்பட

வேண்டியதில்லை. பார்வைக்குள் விழும் ஸ்திரீகள் அனைவரும் உலக மாதாவின் விக்ரகங்களாகவே காண்பான். விசுவரூபம் கொண்ட தேவியே பல ஸ்திரீகளாகப் பிரிந்து தோற்றம் கொடுக்கிருள் என்று எல்லா ஸ்திரீகளையும் பூஜிப்பான். தன்னைப் பெற்ற தாயை அன்புடன் வணங்குவதுபோல் அனைவரையும் வணங்குவான்.''

''குருவே! காம விகாரத்தை எப்படி வெல்வது? அதைச் சொல்லுங்கள்.''

''அதைத்தான் சொல்லுகிறேன்; எந்த ஸ்திரீயைக் கண்டாலும் அவளை உன் தாயாகப் பாவித்துக்கொள். அவளுடைய பாதங்களை நோக்கி வணங்கு. அப்போது கெட்ட எண்ணங்கள் பறந்து போகும்.''

*

புருஷனுடன் இருந்தாலும் கன்னி வாழ்க்கை வாழும் மங்கையர்களும் உண்டு. அவர்கள் ஈசுவரியின் பூரண அவதாரமே என்று சொல்லலாம்.

''தாந்திரீக முறையில் ஸ்திரீபக்தர்களுடன் கலந்து தேவியைச் சிலர் பூஜை செய்கிருர்களே, அதைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?'' என்று ஒரு சீடர் ஸ்ரீ ராமகிருஷ்ணரைக் கேட்டார். வங்காளத்திலும் வேறு சில பிராந்தியங்களிலும் 'சாக்த' சம்பிரதாயத்தைச் சிலர் பின்பற்றி வருகிறுர்கள். அவர்களில் துன்மார்க்கர்களும் உண்டு. இதை உத்தேசித்தே சீடர் அந்தக் கேள்வியைக் கேட்டார். ஸ்ரீ ராமகிருஷ்ணரும் அடியில் கண்ட எச்சரிக்கை செய்தார்.

''இந்த முறைகளில் அபாயம் உண்டு. சாதாரண மக்கள் இம்முறையை அனுசரித்தல் கூடாது. மிகவும் கடினமான முறையை எடுத்துக் கொண்டு பாபத்தில் விழ நேரிடும். ஒரு ஸ்திரியை மகா சக்தியாகக் கொண்டு

அவளைப் பூஜை செய்யும் வழி தாந்திரீக முறையில் சொல்லப்பட்டிருக்கிறது. இதை மூன்று விதமாகச் செய்யலாம். பக்தன் தன்னை மகனாகப் பாவித்தல் ஒரு வழி. தாயை எவ்வாறு மகன் அன்புடன் நெருங்கிப் பூஜிப்பானோ அந்த அன்பை மேற்கொண்டு உபாசித்தல். மற்றொரு வழி, சகி அல்லது தோழியாகத் தன்னைப் பாவித்துக்கொண்டு அந்த பாவனையின் மூலமாகப் பூஜித்தல்.

"இந்த வழிகளில் மகனாக நின்று மனதை அந்நிலையில் பரவசப்படுத்திப் பெற்ற தாயிடம் குழந்தை அன்பு செய்வதுபோல் தேவியைப் பூஜித்தலே மேலான வழி. தோழி நிலையை அடைந்து பூஜிப்பதும் நல்லதே.

"மூன்றாவது முறை யொன்றும் உண்டு. அதுதான் தலைவன் - தலைவி பாவனை. இது மிகவும் அபாயமான முறை. அதைப் பின்பற்றல் கூடாது."

அர்ச்சாவதாரம் அல்லது விக்கிரகத்தை வைத்துப் பூஜித்தலைப்போல் உடலும் உயிரும் கொண்ட பெண்ணைத் தேவியாகப் பாவித்து ரகசியமாகப் பூஜை செய்யும் முறை தாந்திரீகத்தில் சொல்லப்படுகிறது. இதைப் பரமஹம்ஸர் வேண்டாம் என்கிறார். தம் சொந்த அனுபவத்தையும் சொல்லி இருக்கிறார். "இரண்டு வருஷங்கள் நான் இந்தத் தாந்திரிக சாதனத்தில் கழித்திருக்கிறேன். சகி பாவனை, குழந்தை பாவனை ஆகிய இரண்டும் அப்பியசித்தேன். என் சுபாவம் குழந்தை பாவனைக்கு இசைந்த சுபாவம். தேவியைத் தலைவன் பாவனையை மேற்கொண்டு நான் உபாசித்ததில்லை. யாருக்குமே அது கடினமான முறை, வேண்டாம் என்பேன்."

" நீங்கள் ஏன் பத்தினியுடன் இல்லற முறையில் வாழவில்லை ? " என்று ஒருவர் கேட்க, பகவான் ராம கிருஷ்ணர் ஒரு கதையைச் சொன்னார்.

" நீ கேட்ட கேள்விக்கு ஒரு கதையைச் சொல்லு கிறேன். ஒரு நாள் பரமசிவனுடைய குழந்தையாகிய கணேசன் ஒரு பூனையை நகத்தால் கீறிக் காயம் பண்ணி விட்டான். பிறகு தாயிடம் திரும்பிப் போனபோது அவளுடைய கன்னத்தில் ஒரு காயம் இருக்கக் கண்டு 'அம்மா, இதென்ன ? உன்னை யார் காயப்படுத்தினது ?' என்று கேட்டான்.

அதற்குப் பார்வதி, 'மகனே, இது நீ செய்த வேலை யல்லவோ ? உன் நகத்தினால் கீறின காயம் இது' என்றாள்.

'இதென்ன விபரீதம் ? நான் எப்போது உன்னைக் கீறினேன், அம்மா ?' என்றான் கணேசன்.

'கண்மணி ! நீ பூனையைத் தொந்தரவு செய்து கீறினதை மறந்து விட்டாயா ?' என்றாள் கௌரி.

'ஆமாம் ; கீறினேன். அது உன் கன்னத்துக்கு எப்படி வந்தது ?' என்று கணேசன் கேட்டான்.

'மகனே, உலகமெல்லாம் என் உடல் தானே ? யாருக்கு என்ன காய முண்டானாலும் அது எனக்கு உண்டான காயமே' என்றாள் தாய்.

" இதற்குமேல் கணேசன் யாரை விவாகம் செய்து கொள்ள முடியும் ? எந்தப் பெண்ணைக் கண்டாலும் அவளைத் தன் தாயாகவே கண்டான். பெண்மை அனைத் தும் அவனுக்குத் தாய்மையாகவே போய்விட்டது. விவாகம் செய்துகொள்ளும் எண்ணத்தையே ஒழித்தான். என் கண்ணுக்கும் அப்படியே எந்த ஸ்திரீயும் பார்வதி யம்மனாகவே தோற்றம் தருகிறாள். நான் என்ன செய் வது !" என்றார் பரமஹம்ஸர்.

# 8. ஊமையும் பேசும்!

ஒரு நாள் புகழ் பெற்ற பிரம்ம சமாஜ ஆசாரியரான கேசவ சந்திரசேனர் பகவான் ராமகிருஷ்ணரை தக்ஷிணே சுவரக் கோயிலில் கண்டு பேசிக் கொண்டிருந்தார்.

"என்ன காரணமோ, ரொம்பப் படித்த வித்வான் களுங்கூட மூர்க்கர்களாகவே இருக்கிருர்கள்! சாஸ்திரங் களை யெல்லாம் நன்ருகக் கற்றும் ஞானம் அடையாமல் ஆசைகளையும் பற்றுகளையும் விடாமல் தத்தளிக்கிருர்கள். இது வியப்பாக இருக்கிறது!" என்ருர் கேசவசந்திரர்.

"பருந்துகள் ஆகாயத்தில் பறக்கின்றன. வெகு உயரமாகத்தான் சுத்த வாயு மண்டலத்தில் பறக்கின்றன. ஆனுலும் அவற்றின் கண்கள் கீழே செத்த பிராணி, மாமிசம், எலும்பு இவற்றைத்தான் தேடி-உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கும்" என்ருர் ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

உயர்ந்த நூல்களைப் படித்தாலும் மனம் காமப் பொருள்களிலேயே உலாவித் திரியும். படிப்பு வேறு, ஆசைப்படும் விஷயம் வேறு. ஆசைகளினுலும் பற்று களினுலும் நாம் நூல்களிலிருந்து ஞானம் அடைவது தடைப்படுகிறது.

படிப்பதனுல் மட்டும் பயன் பெற முடியாது. மொழிப் பயிற்சியைப் பெறுவோம், நல்ல சுலோகங்களை ஒப்பு விக்கலாம், மந்திரங்களைத் தவறின்றி உச்சரிக்கலாம், அவ்வளவுதான். எந்த விஷயங்களில் ஆசை செலுத்து கிருேமோ அவைதான் நம்மை உயர்த்துகின்றன, அல்லது தாழ்த்துகின்றன. மண்ணும், பொன்னும், பெண்ணும் நம் உள்ளத்தைக் கவர்ந்து நிற்க் விட்டோமானுல், எவ்வளவு சாஸ்திரங்கள் ஓதினுலும் அறிவும் வராது;

மோக்ஷமும் கிட்டாது. படித்துவிட்டு மிக நன்ருக உபந்நியாஸம் செய்யலாம். பிரம்மம், பரம்பொருள், ஞான யோகம், 'பக்தி யோகம், மூலப் பிரகிருதி, ஜீவாத்மா, பரமாத்மா என்றெல்லாம் வாதித்து, கேட்பவர்களைப் பிரமிக்கச் செய்யலாம். ஆனுல், பேசும் விஷயங்கள் பேச்சளவில்தான் நிற்கும். உள்ளம் உருகி ஆண்டவனிடத்தில் மனதைச் செலுத்திஞல் படிப்பின் பயனை அடைவோம். இல்லாவிடில் சாஸ்திரமும் புராணமும் ஒன்றும் பயன் தராது. ச, ரி, க, ம, ப, த, நி, என்று சுவரங்களின் பெயரைச் சொல்லலாம் ஒருவர். ஆனுல் சுவரமும் சங்கீதமும் வேறு விஷயம். சரியான மொழிகளைக் கோத்து ஞான வைராக்கியத்தைப் பற்றிப் பிரசங்கம் செய்வது எளிது. ஆனுல் ஞானமும் வைராக்கியமும் தோய்ந்த மனே நிலையும் வாழ்க்கையும் கடினம்.

*

பஞ்சாங்கத்தில் இந்த மாதத்தில் இந்தத் திதியில் இத்தனை மழை பெய்யும் என்று கணக்கிட்டு எழுதியிருப்பார்கள். அப்படியே மழையும் பெய்யலாம். ஆனுல் ஒருவன் பஞ்சாங்கத்தின் ஏடுகளை எடுத்துப் பிழிந்தால் தண்ணீர் வடியுமா? எவ்வளவு கசக்கிப் பிழிந்தாலும் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட வழியாது. தரும நூல்களில் அநேக நல்ல விஷயங்களைப் படிக்கலாம். ஆனுல் அவற்றை ஓதுவதினுலேயே ஒருவன் பக்தி அடைந்து விட முடியாது. அந்த நூல்களில் சொல்லியபடி ஆசைகளை அடக்கிஞல் பக்தி உண்டாகும்.

ஆண்டவன் சந்நிதானத்தில் படிப்பும் மேதையும் எம்மாத்திரம்? அங்கே ஊமையும் பேசும்; கபோதிகளுக்கும் கண் தெரியும்; சாஸ்திரங்கள் எல்லாம் படித்தவனும் படிப்பே யில்லாதவனும் ஆண்டவனுக்கு முன் ஒன்றே.

'கஞ்சா!' 'கஞ்சா !' என்று ஆயிரம் தடவை வாயால் சொன்னாலும் போதை உண்டாகாது அல்லவா ? கொஞ்சம் கஞ்சா எடுத்து இடித்துத் தண்ணீரில் கரைத்துக் குடித்தால்தான் போதை உண்டாகும். மனசை ஆண்டவனிடம் செலுத்தாமல் ஆயிரம் நாமங்களையும் வாயால் உரக்கச் சொல்லுவதில் பயனில்லை. மனசை ஒரு நிலையில் நிறுத்தித் தியானித்து அப்பியசிக்க வேண்டும். அப்போது தான் பரம்பொருளைக் காண்போம்.

*

ஒருவன் பள்ளிக்கூடச் சுவரில் மாட்டியிருக்கும் இந்தியா தேசத்தின் படத்தில் 'காசி' என்ற புள்ளியைப் பார்த்து விட்டு 'நான் காசியைப் பார்த்து விட்டேன்' என்று பேசுவதைப் போன்றதுதான் சாஸ்திர நூல்களைப் படித்துவிட்டுப் பரம்பொருளை மற்றவர்களுக்கு விளக்கப் பார்ப்பது. படத்தில் சரியாகத்தான் ஊர்களும் நதிகளும் மலைகளும் குறிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் படத்தைப் படித்து விட்டதால் நதிகளையும் ஊர்களையும் பார்த்தபடியாகுமா? நூல்களும், தையல் நூலைப் போலத்தான் சில சமயம் சிக்கலாய்ப் போகும். சிக்கலாகிப் போய்த் தைக்கப் பயன் படாமல் போன நூலைப் போலவே, பக்தி யில்லாமல், ஒழுக்க மில்லாமல், தியான மில்லாமல் படிக்கப்பட்ட தத்துவமும் சாஸ்திரமும் சிக்கலாகி ஒன்றுக்கும் உதவாது போகும். ஆண்டவன் அருளால், அடக்கமும் பக்தியும் பெருமற் போனால் ஒருவன் கற்ற நூல்கள் எல்லாம் ஆணவத்தைப் பெருக்குமே யொழியப் பயன்படாது. அடைந்த படிப்பினால் 'நான்' என்பது முன்னைவிடப் பெரிதாக வளர்ந்து உள்ளத்தில் ஞானத்துக்கு இடம் தராமல் தடுத்து விடும்.

அகங்காரம் என்பது ஒரு சாம்பற் குப்பை போன்றது. அதன்மேல் எவ்வளவு அறிவுத் தண்ணீர் ஊற்றினுலும் உறிஞ்சிக் கொண்டுவிடும். பகவானைப் பக்தி செய்து உருகினுலொழிய அகங்காரம் நீங்காது. எவ்வளவு சமஸ்கிருதம் ஓதினுலும், எவ்வளவு மனனம் பண்ணினுலும் அவையெல்லாம் சாம்பற் குப்பைமேல் ஊற்றின தண்ணீரைப் போலாகி விடும். பரம்பொருளைக் காணும் வழியைத்தான் நூல்கள் காட்டும்; ஒழுக்கமும் பக்தியும் தியானமுமின்றி நூல்களைத் திரும்பத் திரும்பப் படிப்பதினுல் மட்டும் பயன் உண்டாகாது.

கடையில் வாங்க வேண்டிய சாமான்களை ஒரு சீட்டில் எழுதிக் கொண்டு போய்ச் சாமான்களை விலைக்கு வாங்கிக் கொள்கிரேம். இன்னது வாங்க வேண்டும் என்று தெரிந்து விட்ட பிறகு, சீட்டில் என்ன விசேஷம்? சாஸ்திரங்களில் சொல்லப்படுவதெல்லாம் இந்த மார்க்கம் சென்ருல் ஆண்டவனை அடையலாம் என்பதுதான். மார்க்கத்தை அறிந்த பிறகு அடுத்தபடி அதில் நடக்க வேண்டியது அவசியம். அதைச் செய்யாமல் சீட்டையே மனனம்செய்து கொண்டிருந்தோமானுல் கடைச் சாமான் வீட்டுக்கு வருமா? ஒரு ஊருக்கு வழி தெரிந்துகொண்டு அந்த வழியைப் பிடித்து நடந்து சென்ருல் ஊர் போய்ச் சேருவோம். வழி தெரிந்தால் மட்டும் போதாது. அந்த வழியில் நடந்தால்தான் ஊரை அடையலாம்.

*

சைதன்ய தேவர் தெற்கே யாத்திரை சென்றபோது, ஒரு பண்டிதர் கீதையைப் படித்து உபந்நியாசம் செய்து கொண்டிருந்ததைக் கண்டார். கேட்டுக் கொண்டிருந்த கூட்டத்தில் ஒரு பக்தன் உட்கார்ந்திருந்தான். அவனுக்

குக் கீதையில் ஒரு சுலோகத்தின் பொருளும் தெரிந்து கொள்ளும் சக்தியில்லை. ஆனால் உபந்நியாசம் நடந்து கொண்டிருந்தபோது, அவன் கண்களில் தாரை தாரை யாகக் கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது.

"எதற்காக அழுகிறாய், அப்பனே! என்ன தெரிந்து கொண்டாய்?" என்று சைதன்யதேவர் கேட்டார்.

அதற்கு அந்த பக்தன், "தேர்மேல் கிருஷ்ண பகவானையும் அருச்சுனனையும் காண்கின்றேன். அதனால் என் கண்களில் கண்ணீர் பெருகுகிறது. உபந்நியாசம் ஒன்றும் என் காதில் விழவில்லை" என்றானும்.

எழுதப் படிக்கத் தெரியாத இந்த பக்தனே மெய்ஞ் ஞானி. கண்ணன்பேரில் அவனுக்கு உண்டான காதலே எல்லா சாஸ்திரங்களின் பொருளும்.

# 9. துறவியின் கதை

ஒரு கோயிலின் கோபுர வாசலில் துறவி ஒருவன் ஜாகை வைத்துக்கொண் டிருந்தான். எதிரில் ஒரு தாசி வீடு. அந்த வீட்டுக்கு ஆட்கள் தினமும் வந்து போவதைத் துறவி பார்த்துக்கொண்டே வந்தான். 'இவ்வளவு பேர் கெட்டுப் போகிறார்களே' என்று துறவி மிகவும் வருந்தி ஒருநாள் தாசியைக் கூப்பிட்டு அவளைக் கண்டித்தான்.

"பாவி! இரவும் பகலும் நீ இம்மாதிரி தீயவழியில் கழிக்கிறாய். யமன் உன்னை இழுத்துப்போகும் சமயத்தில் என்ன செய்யப் போகிறாய்?" என்று அவளை ஏசினான் துறவி. இவ்வாறு அழைத்துச் சொன்னது அந்தத் தாசி யின் மனதில் பட்டு, அவள் தன் வாழ்க்கையைப் பற்றி வருந்தி ஆண்டவனைப் பிரார்த்திக்கத் தொடங்கினாள்.

"ஆண்டவனே! நான் செய்யும் பாவத்தை நீதான் தீர்க்கவேண்டும்" என்று மிக நொந்து, தினமும் பக வானை எண்ணி வந்தித்து வந்தாள். ஆனால் அவளுக்குப் பிழைக்க வேறு வழியில்லை; பழைய விருத்தியிலேயே இருந்து வந்தாள்.

"ஐயோ, வேறு வழியில்லாமல் இப்படிச் செய்கிறேன். ஆண்டவனே, என்னை எப்படியாவது காப்பாற்று!" என்று இரவும் பகலும் பகவானை வணங்கி வந்தாள்.

துறவி பார்த்தான். "ஏது, என் பேச்சு ஒன்றும் பலிக்கவில்லை. இவள் தன் பழைய தொழிலை விடவில்லை.

பார்க்கலாம் ; இவளைத் தேடி மொத்தம் எத்தனை பேர் வருகிறார்கள், கணக்கெடுப்போம்'' என்று தீர்மானித்தான்.

அதுமுதல் அத்துறவியின் கவனம் அந்தத் தாசி வீட்டின் மேலேயே சென்று, அவள் வீட்டுக்கு வந்த ஆட்களை எண்ணி வந்தான். ஆள் ஒன்றுக்கு ஒரு கல்லாகக் கணக்கு வைத்துக்கொண்டே வந்தான். நாள் செல்லச் செல்லக் கற் குவியல் உயர்ந்து வளர்ந்தது. ஒரு நாள் மறுபடியும் துறவி அந்தத் தாசியை அழைத்து அவளுக்குச் சொன்னான் : "பார்த்தாயா, இந்தக் கற்களின் குவியலை! இந்தக் கற்கள் உன் பெரும் பாவங்களின் எண்ணிக்கை. நான் சொன்னதைக் கேட்காமல் உன் தொழிலிலேயே இருக்கிறாய். நான் எச்சரித்த பிறகும் நீ செய்துவந்த பிழையின் எண்ணிக்கை இது. நீ அனுபவிக்க வேண்டிய நரக தண்டனையை இதிலிருந்து அறிந்துகொள். உனக்குக் கதியே இல்லை, போ !'' என்றான்.

தாசி நடுங்கினாள் கற்குவியலைப் ப்ார்த்து. "ஆண்டவனே ! நான் என்ன செய்வேன் !'' என்று பயந்தவளாக வீடு சென்றாள். வீடு போய்ச் சேர்ந்ததும் துக்கத்தைத் தாங்க முடியாமல் அழத் தொடங்கினாள்.

"ஹே, கிருஷ்ணா ! என்னை எப்படியாவது கைதூக்கி விட மாட்டாயா ? என் உயிரை எடுத்துக்கொள்'' என்று கதறிக் கதறி அழுது, ஓய்ந்து மெய்மறந்து போனாள்.

ஆண்டவன் அந்தப் பேதையின் பேரில் கருணை கொண்டான். யமதருமராஜா அன்றிரவே அவளுடைய உயிரைக் கொண்டேகினான்.

துறவியின் காலமும் அன்றிரவே முடிந்து விட்டது. அவன் உயிரும் உடலை நீத்துச் சென்றது.

ஆச்சர்யத்திலும் ஆச்சர்யம் ! துறவியின் உயிரை யம கிங்கரர்கள் பிடித்து இழுத்துக்கொண்டு நரகம் சென்

ரூர்கள் ; ஆனால் தன் பாவத்தை எண்ணி வருந்திய தாசியின் உயிரோ விஷ்ணு பதம் சென்றது.

துறவி விண்ணுலகம் சென்றுகொண்டிருந்த தாசியின் ஆன்மாவை வழியில் பார்த்து, " ஏ, தாசி ! நீயா பரமபதம் செல்வது ? எண்ணற்ற பாவங்கள் செய்தாய். நான் வைத்த கணக்கே பெருங் குவியலாகக் குவிந்தது. நானே சுத்தத் துறவியாக இறந்தேன். ஒரு பிழையும் செய்யவில்லை. என்னை நரகம் போகவிட்டு, உன்னை ஆண்டவன் தன் பதத்துக்கு அழைத்துச் செல்கிறான். இந்த ஆண்டவன் தருமம் அறியாதவன் !'' என்று கூக்குரலிட்டான்.

விஷ்ணு தூதர்கள் துறவிக்குச் சாமாதானம் சொன்னார்கள் : " அப்பனே ! கதற வேண்டாம். ஆண்டவனுக்குப் புத்தித் தடுமாற்ற மில்லை ! உன் வாழ்க்கை வெளி வேஷமாக இருந்தது. துறவு பூண்டபோதும் நீ தேடியது ஆடம்பரமும் புகழும். அதோ பார் உன் ஊனுடல். அது பிழையற்றே நின்றது. அதற்காக மக்கள் அதை மலர்களால் அலங்கரித்து வாத்திய கோஷத்தோடு தூக்கிக் கொண்டு போகிறார்கள். நீ தூய்மையாக வைத்திருந்த ஊனுடல் பெருமையடைந்து விட்டது ! ஆனால் நீதான் நரகம் செல்கிறாய். இந்தத் தாசியின் உடல் பல பாவங்கள் செய்தது. அதோ பார் ! அவளுடைய உடலைப் பருந்துகள் கொத்தித் தின்கின்றன. அவள் உடலை யாரும் சரியாகத் தகனம் செய்யக்கூட இல்லை. அவள் உள்ளம் தூய நிலையில் இருந்தபடியால் அவளை ஆண்டவன் சந்நிதானத்துக்கு எடுத்துச் செல்கிறோம். தாசியின் குற்றங்களை நீ எண்ணி வந்தாய் அல்லவா ? உன் கவனம் அவள் பாவத்தில் தங்கிய படியால் அந்த அழுக்கு உன்னைப் பற்றிக் கொண்டது. தன் பாவத்தை நினைத்து வருந்தி பகவானைச் சரண் புகுந்த அவளுடைய உள்ளம் பாவத்தினின்று விடுபட்டுப் பரிசுத்த மாயிற்று. தாசியின் பாவங்களை எண்ணிக்

கொண்டிருந்த நீ அவளுடைய பாவங்களைச் சுமக்கிருய்'' என்று சொன்ஞர்கள்.

பிறர் குற்றங்களை எண்ணுவது பக்தனுடைய வேலை அல்ல. ஆண்டவன் லீலையை யாரே அறிவார்! அவன் இட்ட வழி, அவன் இடும் பரீட்சை. அவற்றின் நன்மையும் தீமையும் ஆண்டவனே அறிவான்.

தன்னுடைய உள்ளத்தைத் தூய நிலையில் வைத்துக் கொண்டு, பிறரிடம் உள்ள குற்றங்களை அருள் கண்ணுல் பார்க்கவேண்டும்.

# 10. பேச்சும் மௌனமும்

ஆண்டவன் அருளை அடைந்து ஒருவன் பக்தியாலும் ஒழுக்கத்தாலும் ஞானத்தைப் பெற்று விட்டால், ஒன்றும் சொல்லாமலே அவன் மற்றவர்களுக்கு வழிகாட்டியாகி விடுகிறான். உள்ளத்தில் பக்தி பொங்கி ஆண்டவனை அனுபவித்தவர்களே, இந்த நிலையை அடைய முடியும். படித்துப் படித்துச் சாஸ்திர அறிவு மட்டும் பெற்றால் போதாது. இமயமலைப் பனியைப் பற்றிப் புத்தகம் படித்தோ, மற்றவர்கள் சொல்லக் கேட்டோ அடைந்த அறிவினால் ஒருவன் அதை விளக்கி மற்றவர்களுக்குச் சொல்ல முடியுமா? பனியைப் பார்த்தும், தொட்டும், வாயில் போட்டு ருசியும் கண்டவர்களுக்குத்தான் மற்றவர் களுக்கு அதைப்பற்றிச் சொல்லும் திறமை உண்டாகும்.

'முக்தி நெறியை நான் அறிந்து கொண்டேன்; மற்றவர்களுக்கும் உபதேசித்து, என்னைச் சுற்றி ஒரு தனிக் குழாம் உண்டாக்கிக் கொள்ளப் போகிறேன்' என்று ஒரு பக்தன் எண்ண ஆரம்பித்தால் அது அகங்காரத்தின் சேஷ்டை என்று அறிந்து கொள்ள வேண்டும். ஆண்டவ னுடைய சீட்டு வந்தால் மற்றவர்களுக்குப் போதிக்கும் சக்தி ஒருவனுக்குத் தானாகவே வந்து சேருகிறது. ஆண்டவனுடைய பட்டயம் பெறாமல் ஞானம் புகட்டும் வேலை வெறும் ஆணவக் கூத்தே யொழிய வேறு எவ்விதப் பயனும் அளிக்காது.

*

புஷ்பங்களில் தேன் நிறைந்தால் வண்டுகள் தாமாகவே வந்து மொய்க்கும். வெல்லம் இருக்கும் இடத்திற்கு வர

எறும்புக்குத் தனியாக ஒரு அழைப்பு அனுப்ப வேண்டிய தில்லை. ஒரு மனிதன் உண்மையில் ஞானம் பெற்று அவனுடைய வாழ்க்கையானது ஞானம் ஊறிய வாழ்க்கை யாகி விட்டால் யாரையும் கூப்பிட்டு அழைக்க வேண்டிய தில்லை. அவனுடைய ஆத்ம சக்தி அமுத வெள்ளம் போல் நாலா பக்கமும் பாய்ந்து எல்லோரும் அவனைத் தாமாகவே தேடி வருவார்கள். எறும்பையும் தேனீக்களையும் இழுக்கும் இனிப்பு உள்ளத்தில் இருக்க வேண்டும். ஆண்டவன் படைத்த உலகத்தில் மனத் தூய்மையானது வெல்லத்தைப் போன்ற இனிப்பான பொருள். சீடர்களைத் தானகவே அது இழுத்துக் கொள்ளும்.

பகவானுடைய அருளைப் பெருதவர்கள் பிரசாரம் செய்வது பயனற்ற சிரமமே யாகும். அது யாருடைய உள்ளத்தையும் தீண்டாது. பக்தியாலும் ஒழுக்கத்தாலும் ஆண்டவனை அடைந்து அவனுடைய பட்டயம் பெற்ருல் மட்டும் சீடர்களை அடைந்து ஆசிரியனுக வேலைசெய்ய முடியும். ஆண்டவனுடைய அருள் பெருத முயற்சி ஒன்றுக்கும் உதவாது.

நெருப்பு ஜொலித்தால் எங்கிருந்தோ திரள் திரளாகப் பூச்சிகள் வந்து அதில் விழுகிறதைப் பார்க்கிறோம். பூச்சிகளுக்கு யாரும் அழைப்புத் தருகிறதில்லை. ஞானம் பெற்றவர்கள் அந்த நெருப்பைப் போலாவார்கள். அதன் சக்தியே சீடர்களை இழுத்துக் கொள்ளும். எங்கிருந்து வருகிருர்கள் என்று சொல்லக்கூட முடியாது.

*

அருள் பெற்ற குரு எதைச் செய்தாலும் என்ன பேசினுலும் அது ஆண்டவனை ஆராதிக்கும் பூஜையாகவே இருக்கும். அதுவே உபதேசமுமாகும். தனியாக உப தேசமே வேண்டியதில்லை. தன் உள்ளத்தில் பகவானைக்

கண்டு, பகவானுடைய நினைவில் ஒருவன் தன் மனதை நிறுத்தினால் அதுவே பிறருக்கும் உபதேசமாய் வேலை செய்யும். சம்ஸார பந்தங்களினின்று விடுதலை அடைவதற்காக ஒருவன் செய்யும் முயற்சியே மற்றவர்களுக்கு உபதேசமாகும். புஷ்பம் மலர்வதைப் போல் அவன் உள்ளம் தேன் நிறைந்து வண்டுகளை இழுத்து அவற்றுக்கு உணவு வழங்கும்.

பெரிய மண்டியில் தானியம் அளந்து விற்கப் படுவதைப் பார்த்திருக்கிறீர்களா? அளந்து போடுகிறவன் நிறுத்தாமல் அளந்துகொண்டே யிருப்பான். அளந்து போடப் போட ராசியிலிருந்து தானியம் சரிந்து விழுந்து குவிந்து கொண்டே யிருக்கும். அந்த மாதிரியே சத் குருவின் உபதேசமும். ஆண்டவனுடைய பெரிய மண்டியில் தானியம் அளந்து போடுகிறான். ஞானமும் உபதேசமும் வந்து குவிந்து கொண்டே யிருக்கும். வழங்கப்படும் தானியம் ஆண்டவனுடையது. சின்ன பல சரக்குக் கடையில் நடைபெறும் வியாபாரம் வேறு விதம். அங்கே நடைபெறும் வியாபாரத்தில் பண்டம் சீக்கிரம் தீர்ந்து போகும். நூல்களைப் படித்துச் செய்யும் உபதேசத்துக்கும் பக்தியினால் ஆண்டவனுடைய அருளைப் பெற்றுச் செய்யும் உபதேசத்துக்கும் இதுவே வித்தியாசம். அருள் பெற்றுச் செய்யும் உபதேசத்தில் பண்டத்துக்குப் பஞ்சமில்லை. நூலைப் படித்துச் செய்யும் உபதேசத்தில் சரக்கு சீக்கிரம் தீர்ந்துபோகும்.

*

மழை பெய்யும்போது மாளிகைக் கூரையிலிருந்து ஜலம், பெருந் தாரையாகக் கீழே விழுகிறது. கோமுக மாகவும், புலிமுகமாகவும், ஆங்காங்கே கட்டிடத்தில்

அமைக்கப்பட்ட கடைகால் வழிகளில் ஜலம் ஏராளமாக விழும்போது, பார்ப்பவர்கள் மாட்டு வாய் அல்லது புலிவாயி னின்றுதான் ஜலம் வருவதாக எண்ணலாம். உண்மையில் வானிலிருந்து பெய்யும் மழைதானே அந்தக் கடைகால் வெள்ளமாகிறது? ஞானிகள் உபதேசிக்கும் மொழிகள் அனைத்தும் ஆண்டவன் பெய்யும் அமுத வெள்ளம். அருள் பெற்ற உபதேசிகளின் வாயிலாக அந்த வெள்ளம் வருகிறது.

குடத்தில் தண்ணீர் மொள்ளும் பொழுது பொள் பொள் என்று சப்தம் உண்டாகிறது. ஆனல் குடத்தில் தண்ணீர் நிறைந்த பின் சப்தம் நின்றுவிடுகிறது. சாஸ்திரம் மட்டும் படித்தவர்கள் வெகுவாகப் பேசுவார்கள்; வாதிப்பார்கள். ஞானம் அடைந்தவர்கள் மௌனமாய்ப் பகவானை அனுபவித்து ஆனந்தத்தில் மூழ்கியிருப்பார்கள்.

விருந்துக்கு ஜனங்கள் கூடியபோது முதலில் கலகல வென்று சத்தம் உண்டாகும். எல்லோரும் பேசிக் கொண் டிருப்பார்கள். ஆனல் சாப்பிட ஆரம்பித்ததும் சத்தம் அடங்கிப் போகும். பரிமாறத் தொடங்கும்போது, முக்கால் பங்கு இரைச்சல் நின்றுபோகும். பாயஸம் வந்தவுடன் சாப்பாட்டுக் கூடம் நிச்சப்த மாகிவிடும். 'உர்' 'உர்' என்று உறிஞ்சும் சத்தம் ஒன்றுதான் கேட்கும். சாப்பிட்டு முடிந்ததும் எல்லோரும் திண்ணையில் படுத்துத் தூங்கியே போவார்கள்.

வாதப் பிரதிவாதங்கள் எல்லாம் கடவுளைக் காண் பதற்கு முந்திதான். ஆண்டவனைக் கண்டதும் பேச்செல் லாம் நின்று போய்விடும்.

சந்தைக்கு வெளியிலே பெரிய இரைச்சல் கேட்கும். அது என்ன சத்தம் என்று கேட்டால் "சந்தைக் கூச்சல்" என்போம். ஆனல் சந்தைக்குள்ளே பிரவேசித்து விட்டால் இரைச்சல் காதில் படாது. பண்டத்தின் விலை

கேட்பதிலும் வியாபாரம் முடிப்பதிலும் கவனம் செலுத்து கிறோம். இப்படியே தான் பக்தியும். தொலைவில் நிற்கும் போது, வாதங்களின் இரைச்சல் அதிகமாக இருக்கும். பகவானை அண்டிப் பக்கத்தில் நெருங்கியதும் வாதங்களின் சத்தம் அடங்கிப் பகவானிடம் லயித்து விடுவோம்.

பணியாரச் சட்டியில் நெய்யில் அப்பம் பொரியும் போது ரொம்ப சத்தம் உண்டாகும். அப்பம் பக்குவ மானதும் சத்தம் அடங்கிப் போகும். பக்தி செய்கிறவர்கள் முதலில் மிகவும் பேசுவார்கள். பிறகு பேச்சு அடங்கிப் போய் ஞானம் முற்றும்.

# 11. எண்ணெய்க் கிண்ணம்

ஒருகாலத்தில் நாரதருடைய உள்ளத்தில் அகங்காரம் புகுந்து விளையாட ஆரம்பித்ததாம். தன்னைப் போன்ற பக்தன் யாரும் இல்லையென்று எண்ணினுர். இவ்வாறு நாரதருடைய உள்ளத்தில் தன் மதிப்பு மிஞ்சிப் போனது பகவானுக்குத் தெரிந்துவிட்டது.

"நாரதரே! கொஞ்சம் பூவுலகத்துக்குப் போய் அங்கே என் சிறந்த பக்தனொருவன் இருக்கிருன். அவனைக் கண்டு அவன் குணுதிசயங்களைப் பார்த்து வாரும். உமக்கு நன்மை உண்டாகும்" என்று மகாவிஷ்ணு சொன்னுர்.

"சரி, பகவான் ஆக்ஞைப்படியே போய் அந்தப் பக்தனிடமுள்ள விசேஷத்தை அறிந்து வருகிறேன். என்னைவிடப் பெரிய பக்தன் ஒருவன் உலகத்தில் இருக்கிருனு? அந்த அதிசயத்தையும் பார்க்கலாம்!" என்று நாரதர் எண்ணி, அவன் யார், எங்கே இருக்கிருன் என்று எல்லா விவரங்களையும் விசாரித்துக்கொண்டு வர பூலோகம் சென்றுர். அங்கே போனவர் குறிப்பிட்ட வீட்டில் ஒரு குடியானவனைக் கண்டார். அவன் காலையில் எழுந்ததும் "ஹரி!" என்று ஒருதடவை சொல்லிவிட்டு ஏரைத் தூக்கிக்கொண்டு தன் வயலுக்குப் போனுன். நாள் முழுதும் வயலில் உழுது வேலை செய்துவிட்டு வீட்டுக்குத் திரும்பி வந்தான். படுக்குமுன் "ஹரி!" என்று ஒருமுறை மறுபடியும் சொல்லிவிட்டுப் படுத்துத் தூங்கப் போனுன்.

இதைப் பார்த்த நாரதர் "இவன் பெரும் பக்தனுமே!" என்று மனத்திற்குள் நகைத்தார். மறுநாளும் அவன் என்ன செய்கிருனே என்று பார்த்தார். குடியானவன் எழுந்ததும்

"ஹரி!" என்று ஒருதடவை சொல்லிவிட்டுத் தன் வயலுக்குப் போய் நாள் முழுவதும் தன் தொழிலில் கழித்துவிட்டு இரவில் ஒரு தடவை "ஹரி" என்று சொல்லிவிட்டுத் தூங்கினான். இவ்வளவுதானா என்று எண்ணி நாரதர் விஷ்ணு லோகத்துக்குத் திரும்பிப் போனார்.

"உங்கள் பக்தனைப் பார்த்தேன். அவனிடத்தில் அதிக பக்தி யிருப்பதாக எனக்குக் காணப்படவில்லை. வயலில் வேலை செய்வதிலேயே முழு நேரமும் செலுத்தி வருகிறான். என்னை வேடிக்கை செய்யவே, அவனிடம் அனுப்பினீர் போலிருக்கிறது!" என்றார் நாரதர்.

மகாவிஷ்ணு "நாரதரே! இந்தாரும், இந்தக் கிண்ணத்தை வாங்கிக்கொள்ளும்!" என்றார். பகவான் கொடுத்த எண்ணெய்க் கிண்ணத்தை முனிவர் வாங்கிக் கொண்டார்.

"இதில் எண்ணெய் வழிய வழிய இருக்கிறது. ஜாக்கிரதை! இதை எடுத்துக்கொண்டு போய், பூலோகத்தை ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு வாரும். ஒரு துளி எண்ணெயும் கீழே சிந்தாமல் பார்த்துக்கொண்டு சுற்றிவிட்டு வாரும்" என்றார் திருமால்.

பகவான் சொல்லியபடியே நாரதர் செய்தார். ஒரு சொட்டு எண்ணெயும் கீழே சிந்தாமல் ஜாக்கிரதையாகப் பிடித்துக் கொண்டு வெற்றிகரமாகத் திரும்பி வந்தார்.

"திரும்பி வந்தீரா? சந்தோஷம். தயவு செய்து சொல்லும். உம்முடைய பிரதக்ஷிணத்தில் எத்தனை தடவை என்னை ஸ்மரித்தீர்?" என்று கேட்டார் பகவான்.

"சுவாமி! நான் எப்படி உம்மை ஸ்மரிக்க முடியும்? கொஞ்சமும் சிந்திப் போகாமல் இந்த எண்ணெய்க் கிண்ணத்தை ஏந்திக்கொண்டல்லவா சுற்றிவரும்படி சொன்னீர்? அது எனக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது!" என்றார் நாரதர்.

" முனிவரே ! இந்த எண்ணெய்க் கிண்ணமும் உம்முடைய சிந்தனை முழுவதையும் கவர்ந்து விட்டதால் நீர் என்னை ஸ்மரிக்க முடியாத நிலையில் இருந்தீரல்லவா ? உம்மைப் போன்ற ஞானிக்கே இப்படியானால் அந்த ஏழைக் குடியானவன் கஷ்டத்தை யோசித்துப் பாரும். தாங்க முடியாத குடும்ப பாரத்தைச் சுமந்துகொண்டு அவன் தினமும் இரண்டுமுறை என் பெயரைச் சொல்கிறான் அல்லவா ? அவன் பக்தியின் சிறப்பு உமக்கு இப்போது தெரியவில்லையா ?" என்று பகவான் கேட்க நாரதர் வெட்கமடைந்தார்.

✶

ஆண் பெண் கவர்ச்சி வேகத்தில் மனம் சிக்கிக் கொண்டலைந்தால் அல்லது வேறு காமப் பொருள்களின் பேரில் ஆசை யுண்டானால் அதைத் தடுத்துக்கொண்டு வேறு நல்ல கருத்துக்களில் மனதைச் செலுத்தவேண்டும். இந்த முயற்சி பயன்படாமல் போனாலும் போகும். அப்போது பகவானை வேண்டிக் கொண்டு, அவனை ஒரு நண்பனாகவோ, அல்லது அப்பனாகவோ, அல்லது தாயாகவோ பாவித்து அவன் நாமங்களைச் சொல்லிப் பாவத்தினின்று காப்பாற்றும்படி வேண்டிக் கொள்ள வேண்டும். தேவியை மனதின் முன்னால் நிறுத்திக்கொண்டு தாயை வணங்குவதுபோல் வணங்குவாயாக. ' ராமா, வாசுதேவா, அப்பனே, கோவிந்தா ' என்று ஜபிப்பது மிகவும் உதவியாயிருக்கும்.

✶

சித்த மலத்தைக் கழுவுவதற்கு, ஹரி நாமங்கள் சஞ்சீவி மருந்தைப்போல் உதவும்.

ஆண்டவனுடைய நாமங்களைச் சொல்வதில் நான் சந்தோஷம் காணவில்லையே!'' என்று ஒருவர் கேட்க பரமஹம்ஸர் சொன்னதாவது:

''அப்பனே! பகவானை வேண்டிக் கொள்! 'உன் நாமங்களை ஜபிப்பதில் எனக்கு ஆனந்தம் தரவேண்டும்' என்று அழுது அழுது கேட்பாயாக. உன் பிரார்த்தனையை ஆண்டவன் பூர்த்தி செய்வான். அம்மனே, அப்பனே, கிருஷ்ணு, ராமா, சீதா, கோபாலா, கோவிந்தா, மகாதேவா, ஈசுவரா, சிவனே,—இவற்றில் எந்தப் பெயரும் போதும். தினமும் அந்த நாமத்தைச் சொல்லிப் பார்! வரவர அதில் ருசி காண்பாய். நோயாளிக்கு முதலில் அன்னத்தில் ருசி இருக்காது. வரவர ருசி உண்டாகும். அதுவே நோய் தீருவதற்கு அடையாளம்.''

பகவான் வேறு, அவன் பெயர் வேறு என்று அல்ல. ருக்மணி தராசில் ஒரு துளசி இலையையும் அவன் பெயரையும் வைத்துக் கண்ணனுக்குச் சரி எடை போட்டு விட்டாள் அல்லவா? சைதன்ய தேவர் சொன்னபடி பகவானுடைய நாமம் சத்துள்ள ஒரு விதையைப் போலாகும். மாளிகையின் கம்பத்தின் மேலுள்ள விதை அங்கே பல ஆண்டுகள் சும்மா கிடக்கும். கட்டிடம் இடிந்து விழுந்து குட்டிச் சுவராகப் போய்விடும். அப்போது அந்த விதை கீழே மண்ணில் புதைந்து மழைத் தண்ணீர் விழுந்ததும் முளைத்துச் செடியாகி செழித்து வளர்ந்து காயும் கனியும் கொடுக்கும். பகவானுடைய நாமம் வீண்போகாது.

# 12. தேவீ கவசம்

மரத்தில் வேரிலிருந்து நுனிக்கிளை வரையில் பரவி இயங்கும் மரச் சாருனது, இலையும் கிளையும் பூவும் காயு மாகத் தோற்றம் கொள்ளுகிறது. அதைப்போல ஒரே பரம் பொருள் பிரபஞ்சத்திலுள்ள எல்லாத் தோற்றங்களு மாகிறது. இந்தச் சிருஷ்டி லய நிலையிலிருக்கும் பரம் பொருளுக்கு நம் பெரியோர்கள் மகா சக்தி என்றும் மாயை என்றும் இன்னும் பல் வேறு பெயரிட்டுச் சொல்லுவார்கள். நாம் காணும் எல்லாப் பொருள்களும் எல்லா வேகங்களும் எங்கும் பரவி நிற்கும் பரம் பொருளின் உருவ விகாரங்களே யாகும். உயிர் பெற்று வளர்ந்து அழிந்து மறையும் ஜீவ ராசிகள் அனைத்தும் மகாசக்தியின் விசுவரூபம். ஏகமாய் நின்ற பரம்பொருள் தன் சங்கற்பத்திஞல் பலவாகப் பிரிந்தது. அவ்வாறுண்டான தனிப் பொருள்கள் ஒயா மல் முன்போல் மறுபடி ஒன்று சேரப் பார்க்கின்றன. அதுவே நாம் பார்க்கும் பலவித பௌதிக மானசிகக் கவர்ச்சி வேகங்களுக்கு மூல காரணம். பிரிபட்ட தாதுக் கள் ஒன்று சேரத் துள்ளி விரும்புவதே' பலவித கவர்ச்சி வேகங்க ளாகின்றன. பௌதிக விஞ்ஞானிகள் அவற்றைச் சோதித்தும் வகுத்தும் விளக்கி யிருக்கிருர்கள். பூமியி னின்று பிரிந்த பொருள்களைப் பூமி இழுப்பதும் எண் ணற்ற கோளங்கள் பிரம்மாண்டத்தில் விசுவ கவர்ச்சி வேகத்துக்கு அடங்கி ஓயாமல் சுழல்கின்றதும்-எல்லாமே பராசக்தியின் திருவிளையாடல்கள். ' விசுவ கவர்ச்சியை விஞ்ஞானிகள், அது எப்படி வேலை செய்கிறது, அதன்

விசை என்ன என்பதை யெல்லாம் ஆராய்ந்தும் விளக்கி யும் வந்திருக்கிருர்கள். அது ஒரு பெரிய கணித சாஸ்திரப் பகுதி. ஆஞல் அந்தக் கவர்ச்சியும் அதன் நியதியும் அது எந்த மூல காரணத்தின் தோற்றம் என்பதும் அவர் களுடைய ஆராய்ச்சிக்குள் அடங்காத விஷயம். மகா சக்தி, மாதவி, துர்க்கை, தேவி என்றெல்லாம் ஸ்ரீ ராம கிருஷ்ணர் உள்ளங் கரைந்து வழிபட்ட பரம் பொருளே அது. ஸ்ரீ சங்கரர் ஆயிர நாமங்களிட்டு அர்ச்சித்ததும் அந்த மகா சக்தியையே.

மகா சக்தியின் தோற்ற வேறுபாடுகளான பல கவர்ச்சி வேகங்களில் ஆண் பெண் கவர்ச்சியும் ஒன்று. இது மக் களே மிக வாட்டுகிறது என்பது அனைவரும் அறிந்த விஷ யம். பராசக்தியின் பிரசாதமான இந்த இயற்கை வேகம் மக்களுக்கு அடங்கா மகிழ்ச்சியும் தந்து வருகிறது. கூடவே அவர்களே மிகவும் துன்புறுத்தியும் வருகிறது. இல்லற வாழ்க்கையும் அதில் தோன்றி வளரும் சந்தோஷ மும் அன்பும் இந்தக் கவர்ச்சியினின்று விளையும் பயன்கள். பல கஷ்டங்களுக்கும் துக்கத்துக்கும் பாவத்துக்கும் அதுவே தோற்றுவா யாகிறது. பெரும் சக்தி கொண்ட இந்தக் கவர்ச்சிக்குப் 'பசுத்துவம்' அல்லது 'பசு தருமம்' என்பதும் ஒரு பழைய பெயர். அது எல்லா ஜீவராசி களுக்கும் பொதுவான ஒரு இயற்கை வேகம். அதை இகழ்தலில் பயனில்லை. அதைத் தீய நெறியில் செலவிடா மல் தரும மார்க்கத்தில் அடக்கிச் செலுத்த வேண்டும் என்பது பெரியோர்களின் உபதேசம். கவர்ச்சி வேகம் தூய நெறியில் செல்வதற்காக சாதாரண மக்களுக்குச் சமூ கத்தில் அமைக்கப் பட்டிருக்கிற இல்லற வாழ்க்கையும், மனைவி மக்கள் அன்பும் உயர்ந்த சாதனங்களாகும். இந்த நெறியை விட்டு துன்மார்க்கத்தில் மக்களுடைய பசு தருமம் சென்ருல் கேடும் துக்கமும் நிச்சயம்.

சில மகான்கள் கவர்ச்சி வேகத்தை முற்றிலும் வென்று, அதை ஆன்ம வேகமாக மாற்றிக் கொண்டு பிரம் மசரிய நிலையில் இருந்து வருகிறார்கள். மகா சக்தியின் அருளால் அவர்களுடைய பசு தருமத்தின் வேக முழுமை யும் உடல் உள்ளம் இரண்டுக்கும் உரம் தரும் சாதனமாகிப் போய், அவர்களை உயர் நிலைக்குத் தூக்கி விடுகிறது. முற் றிலும் அடக்க முடியாதாயினும் எவ்வளவில் பசு தருமத்தை மறந்து வெற்றி பெறுகிறோமோ அவ்வளவில் ஆன்ம சக்தி யும் மேதை மலர்ச்சியும் அடைகிறோம்.

*

தமிழ் மக்களாகிய நாம் நல்ல இயற்கைப் பண்பும் சமுதாயப் பண்பாடும் பிறப்புரிமையாகப் பெற்றிருக்கி றோம். பாரம்பரியமாகக் கூரிய புத்தியும் சிரிப்பும் சந் தோஷமும் கொண்ட சுபாவத்தைப் படைத்திருக்கிறோம். தமிழர்களுடைய உணர்ச்சியானது, வெறியாட்டம் கொள் ளாமல் எப்போதும் அடக்கமும் சாந்தமும் கொண்டு மலரும். இவ்வளவு நல்ல குணங்களுக் கிடையில் பசு தருமக் கவர்ச்சி வேகம், எல்லாவற்றையும் பாழ்படுத்தும் அபாயமாக இருக்கிறது. மிருகங்களுக்கும் மக்களுக்கும் பொதுவான அந்த வேகத்தை அடக்கி ஆளாவிட்டால் அது கொடும் பிசாசு ஆகிவிடுகிறது. பொருள்களின் ஏற்றத் தாழ்வை அறிய முடியாதபடி விவேகத்தைக் கலைத்துக் கொன்று தனி மகனையும் சமூகப் பண்பாட்டையும் கெடுத்து விடும். இதற்கு இடம் கொடுக்காமல் நாம் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். இல்லாவிடில் நம்முடைய சமூகத்தின் மிக நல்ல குணங்கள் எல்லாம் இந்தப் பிசாசுக்கு இரை யாகி நாசமாய்ப் போகும். பெண்கள் துணையின்றித் தெரு விலும் கடையிலும் மற்ற இடங்களிலும் பயமில்லாமல் செல்லும் நிலைமை ஏற்பட்டு வந்தால்தான் அந்தச் சமூகம்

பண்பட்ட ஜாதியாக மதிக்கப்படும். உயர்நிலை நாகரிகத்துக்கு இதுவே அடையாளம். வாழ்க்கைச் சுகத்துக்கும் இது இன்றியமையாத நிலை. நம்முடைய சென்னைத் தெருக்களில் சென்றால் எல்லாவித நாகரிகங்களும் காணப் படுகின்றன. முன் நாட்களைவிட மக்கள், ஆண்களும் பெண்களும் எல்லா ஜாதியாருமே, இப்போது சுத்தமாகவும் நல்ல உடை தரித்தும் வருகிறார்கள். ஆயினும் ஆண் மக்களுடைய நடை பாவனைகளைப் பார்த்தால் பசு தருமம் சரியாக அடக்கப்பட்டு வருகிறதா என்பது கொஞ்சம் சந்தேகமாகத்தான் தோன்றுகிறது. ஆண் மக்களைக் கண்டால் பெண்கள் இயற்கையாகக் கூச்சப் படலாம். ஆனால் கூச்சம் வேறு ; அச்சம் வேறு. தாம் அறியாத அன்னிய ஆண் மக்களைப் பற்றி அதே தேசத்தைச் சேர்ந்த பெண் மக்கள் ஏன் அச்சப்பட வேண்டும்? ஆண் மக்களின் உள்ளமும் உணர்ச்சியும் சுத்தமாக இருப்பின் பெண்கள் உள்ளத்தில் பயம் உண்டாகாது. முகமும் கண்ணும் உள்ளத்திலே தோன்றும் உணர்ச்சியை உடனே காட்டும். ஆண்மக்கள் முகத்திலும் கண்ணிலும் தோன்றும் குறிப்புகளைப் பார்த்துத்தான் சகோதரிகள் பயப்படுகிறார்கள். ஆண்மக்களைப் பார்த்து சகோதரிகள் அச்சமடைந்து வரும் சமூகத்தை என்னவென்று மதிப்பது? பசு தரும வேகத்தை மக்கள் வேலி போட்டு நன்றாக ஆண்டாலொழிய நம்முடைய சமூகம் இன்னும் சரியான பண்பாடு அடையவில்லை என்றே முடித்துக் கொள்ள வேண்டும். இதையெல்லாம் நான் எழுதுகிறேனே என்று கோபித்துக் கொள்ள வேண்டாம்.

*

ஒரு ஸ்திரீயைக் கண்டால் இவள் தேவியின் அவதாரம் என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் எண்ணியபடியே நாம் ஒவ்வொருவரும் பாவித்து, பசு தருமப் பேயை அடக்குவோமாக. அனைவரும் அறியும்படி வேசிகளாக வாழ்ந்த பெண்களையும் பகவான் ராமகிருஷ்ணர் துர்க்கா தேவியின் அம்சமாகவே கண்டார். ஒரு வேசியைக் கண்டாலும் தாயிடம் செலுத்தும் அன்பும் வணக்கமுமே அவர் உள்ளத்தில் தோன்றும். நம்முடைய உள்ளத்தில் பசுத்துவத்துக்கு இடம் உண்டாகாமலிருக்க நாம் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய மந்திரத்தை நன்ருகக் கையாள வேண்டும். பழக்கத்திஞல் ஆகாத காரியம் ஒன்றில்லே. சீதை, பார்வதி, லக்ஷ்மி, கௌரி, ஈசுவரி, அம்மன் இவையனைத்தும் தேவியின் நாமங்கள். பெண்ணுருவம் ஒன்றைக் கண்டபோது ஸ்ரீ ராமகிருஷ்ணரைத் தியானித்து தேவியின் நாமங்களை நாவிலும் உள்ளத்திலும் தரித்து, 'இவள் தேவி, இவளும் பராசக்தியின் அவதாரம், இவளை உள்ளத்தில் பணிவேளுக' என்று நம்முடைய சமூகத்துக்கும், நம் சுய நன்மைக்காகவும் சேவை செய்வோமாக. சுத்த வாழ்க்கைக்கும் உயர்ந்த பண்பாட்டுக்கும் சாதனமாகிய இந்த **தேவீ கவசத்தை** ஸ்ரீ ராமகிருஷ்ணர் நமக்குக் கொடுத்திருக்கிருர். அதைப் பயன்படுத்திக் கொள்ளுவோமாக.

*

பள்ளிகளில் கூடிப் பயிலும் மாணவர்களே! மூளையைப் பெருக்கும் உங்கள் நன் முயற்சிகளில் இதையும் சேர்த்துக் கொள்ளுங்கள். மனத் துப்புரவு உங்களுக்கு மிகவும் முக்கியம். துப்புரவு என்பது உடலும் உடுப்பும் சுத்தமாக வைத்துக் கொள்வது மட்டுமல்ல. எல்லாப் படிப்பையும் விட முக்கியமான படிப்பு மனதில் பசு தர்மக் கவர்ச்சிப் பேய் குடி கொள்ளாமல் உள்ளத்தைச் சுத்தமாக

வைத்துக் கொள்ளப் பயில்வதாகும். பசு தருமம் வாய்ந்த அழுக்குப் படங்களும் கதைகளும் புஸ்தகங்களும் நம் முடைய சமூகப் பண்பாட்டை நாசம் செய்யப் பார்க் கின்றன. பணம் சம்பாதிப்பதற்காகப் பசு தரும வேகத் தையே மூலதனமாகக் கொண்டு பொய்யை மெய்யாகக் காட்டும் மக்களுக்குச் சமூகத்தில் அதிக இடமும் சலுகை யும் ஏற்பட்டு விட்டிருக்கிறது. நம்முடைய சிறுவர்கள் எந்த விதத்திலும் மிக நல்லவர்கள். அவர்களுடைய பசு தருமத்தைத் தூண்டி அவர்களையும் பாவக் குழியில் தள்ளி நம்முடைய சமூகமும் மதிப்பிழக்க நாம் விடுவதா? பரா சக்தியை வழிபட்டு இல்லற வாழ்க்கையை மேம்படுத்தித் தமிழ் நாட்டில் எந்தச் சிறுமியும் எந்த வேளையிலாயினும் எங்கேயாயினும் தைரியமாகப் போகலாம், இருக்கலாம், எந்தத் தமிழ் மகனும் அவளுக்கு அண்ணனும் நல்ல படைகாப்பு மாவான் என்று உறுதிப் படுத்துவோம். ஓங்குக நல்லொழுக்கம்! வாழ்க நற் றமிழர்!

# 13. நீரின்மேல் படகு

நீரில் படகு தங்குகிறது. ஆனால் படகுக்குள் தண்ணீர் புகும்படி விடக்கூடாது. புகவிட்டால் ஓடம் முழுகிப் போகும். அப்படியேதான் உலக வாழ்க்கையிலே இருக்கும் பக்தர்களின் நிலையும். உலக வாழ்க்கைக்கு வேண்டிய காரியங்கள் செய்து கொண்டிருக்கலாம். ஆனால் உள்ளத்துக்குள் உலகத்தைப் பாயவிடக் கூடாது; விட்டால் படகு கவிழ்ந்து போகும்!

இல்லறம் நடத்துங்கள். ஆனால் ஒரு கையால் வாழ்க்கைக் கடமைகளைச் செய்துகொண்டு ஒரு கை பகவான் காலைப் பிடித்துக்கொண்டே இருக்கவேண்டும். வேலை செய்யாமலிருக்கும்போது இரண்டு கைகளும் ஆண்டவன் பாதங்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்கப் பயன்பட வேண்டும்.

நல்ல செவிலித் தாயானவள் தன் எஜமானியின் குழந்தையை அன்புடன் எடுத்து, பால் கொடுத்து வளர்க்கிறாள். பெற்ற தாயைப் போலவே அன்பு செலுத்திப் பால் கொடுத்து வந்தாலும் 'இந்தக் குழந்தை எனக்கு ஒன்றும் செய்யப் போவதில்லை; இது என்னுடைய சொத்து அல்ல; பால் ஊட்டுவதுதான் இதனுடன் என் சம்பந்தம்' என்று செவிலித் தாய் தன் கடமையைச் செய்வதுபோல் பக்தர்கள் இல்லறத்தை ஆண்டவன் பணியாக எண்ணிச் செய்து வருவார்கள்.

"ஒரு வீட்டில் வேலைக்காரி என்ன உணர்ச்சியோடு 'நம்ம வீடு' என்கிறாள்? அவள் சொந்த வீடு எங்கேயோ ஒரு கிராமத்தில் இருக்கிறது; பட்டணத்தில் வேலைசெய்து வருகிறாள். வேலை செய்யும் வீட்டை 'நம்ம வீடு'

என்கிருள். எஜமானியின் குழந்தையை எடுத்து 'என் கண்ணே' என்று சீராட்டுகிருள். 'என் கோபாலன் ரொம்ப துஷ்டன்' 'என் கோபாலனுக்கு, பாவம், அதிக பசி' என்றெல்லாம் குழந்தையைக் கொஞ்சிப் பேசுகிருள். பேசும்போது கோபாலன் எஜமானியின் குழந்தை, தன் குழந்தையல்ல, தன் குழந்தை தன் ஊரில் பாட்டியிடம் இருக்கிறது என்பதை அவள் மறக்கவில்லை! அப்படியே, என் இல்லற சீடர்களே! நீங்களும் வேலைக்காரி பாவத்தில் இல்லறத்தை நடத்துங்கள்."

*

உங்கள் இல்லம் ஆண்டவன் வீடு, அதன் எஜமானன் ஆண்டவன் என்கிற பாவத்தை வழக்கப் படுத்திக் கொண்டு இல்லறத்தை நடத்துங்கள். வழக்கம் பலப்பட்டதும் அதுவே மனசின் பான்மையாகி விடுகிறது. குடும்ப வாழ்க்கை நடத்திக்கொண்டே பகவானையடைய முயற்சி செய்யும் மக்கள் கோட்டைக்குள் சுவருக்குப் பின்னுல் நின்று சண்டை செய்யும் சிப்பாய்களைப் போன்றவர்கள். துறவு பூண்டு ஆண்டவனை வழிபடுகிறவர்கள் மைதானத்தில் நின்று யுத்தம் செய்யும் வீரர்களைப் போன்றவர்கள். இரு பாலாரும் வீரர்களே. கோட்டைக்குள் ளிருந்து ஊரைக் காக்கும் சிப்பாய்கள் சௌகரியங்களைப் பயன் படுத்திக்கொண்டு போர் நடத்துகிருர்கள். அதில் ஒரு குற்றமு மில்லை.

மைதானத்தில் சென்று எதிரியுடன் யுத்தம் செய்வதற்கு முன், லஷ்கரில் சிப்பாய்கள் பயிலுவதைப் பார்த்திருக்கிறீர்கள், அல்லவா? அதுபோல் இல்லறமும் வைராக்கியம் பயிலும் இடமாகும். சில சௌகரியங்களை அமைத்துக் கொண்டு துறவு மார்க்கத்தைப் பயிலுவதே இல்லறத்தின்

பயன். உள்ளத்தைப் பக்குவப்படுத்திக் கொள்ளுவதற்குக் குடும்ப வாழ்க்கையை ஒரு பயிற்சிக் களமாகப் பாவித்துக் கொண்டு இல்லறம் நடத்துங்கள்.

தகப்பனோடோ, மனைவியுடனோ சண்டை பிடித்துக் கொண்டு அதற்காகத் துறவு பூண்டால், அது உண்மையான சந்நியாசமாகாது. அந்தத் துறவு வெறுப்புத் துறவாகும். அது நிலைக்காது. வெகு சீக்கிரத்தில் அப்படிப் பட்ட துறவியின் மனம் பழைய விஷயங்களில் சென்று மறுபடி உலக வாழ்க்கை ஆரம்பமாகும்.

இல்லற வாழ்க்கையை ஆண்டவனிட்ட கடமை என்று சரியாகப் பக்தியுடன் நடத்தி, எல்லாம் ஈசன் பணி என்று மனதைப் பழக்கப்படுத்தி, பக்குவமடைந்த பின் துறவு பூண்டவர்கள் துறவு நிலையின் பயனைப் பெறுவார்கள். ஒரே பரம்பொருளின் தோற்றங்களே எல்லா உயிரும் என்கிற மெய்யுணர்வைப் பெறுவார்கள்.

*

ஒரு கிராமத்தில் ஆண்டி மடம் ஒன்று இருந்தது. அங்கே பல ஆண்டிகள் ஓடு ஏந்தி ஊருக்குள் சென்று பிச்சைச் சோறு வாங்கிச் சாப்பிட்டு வந்தார்கள்.

ஒரு நாள் ஆண்டிகளில் ஒருவன் ஊரில் சுற்றிய காலத்தில் ஒரு ஜமீன்தார் தன் ஏழைச் சேவகனைப் பலமாகப் புடைத்துக் கதறச் செய்ததைப் பார்த்தான். அதனால் மனம் மிகவும் நொந்து "ஐயா, போதும் அடித்தது! எனக்காக நிறுத்தி விடுங்கள். உங்களுக்கு நன்மையாகுக!" என்று ஆண்டி ஜமீன்தாரை வினயமாக வேண்டிக் கொண்டான்.

இதைக் கேட்டதும் ஜமீன்தாருக்கு முன்னை விடக் கோபம் அதிகமாகிவிட்டது. சேவகனை விட்டுவிட்டு,

தமக்குப் புத்தி சொல்ல வந்த ஆண்டியைக் கண்டபடி அடிக்க ஆரம்பித்தார்.

ஆண்டி நன்ருகப் புடைக்கப்பட்டுப் பிரக்ஞையில்லாமல் தரையில் விழுந்தான். அவன் விழுந்ததும் ஜமீன்தாருடைய ஆவேசம் தீர்ந்து தம் வீட்டுக்குள்ளே போய் விட்டார்.

யாரோ வழியில் போகிறவர்கள், ஆண்டி அடிபட்டு விழுந்து கிடப்பதைப் பார்த்து மடத்துக்குப் போய்ச் செய்தி சொன்ஞர்கள்.

ஆண்டிகள் ஓடிப் போய், ஜமீன்தார் வீட்டு வாசலில் கிடந்த தங்கள் சகோதரனைத் தூக்கி எடுத்து மடத்துக்குக் கொண்டுபோய்க் குளிர்ந்த ஜலம் தெளித்து, வாயில் தண்ணீரும் பாலும் ஊற்றிச் சிகிச்சை செய்தார்கள். வெகு நேரங் கழித்து ஆண்டிக்குப் பிரக்ஞை வந்தது. கண் திறந்து, நினைவு வந்த மாதிரி காணப்பட்டதும் ஒருவன், "தம்பி! நான் யார் தெரிகிறதா?" என்ருன்.

"அண்ணே! தெரிகிறது! நீதான் முதலில் என்னை அடித்தாய்; இப்போது என்னுடைய வாயில் நீயே பால் ஊற்றுகிருய்" என்ருன்.

துறவி ஞானப் பிரகாசம் அடைந்தவ ஞனபடியால் தன்னை அடித்தவனையும் தனக்குப் பணிவிடை செய்தவனையும் ஒன்ருகக் கண்டான். நன்மையும் தீமையும், சுகமும் துக்கமும் ஆண்டவன் லீலை அல்லவோ?

## 14. பொதுப் பணி

ஒரு நாள் சில வாலிபர்கள் பரமஹம்ஸரிடம் வந்து, “ நாங்கள் சமுதாயச் சேவையில் ஈடுபடுவதென்று நிச்சயம் செய்திருக்கிறோம் ” என்று சொன்னார்கள்.

மிக உற்சாகமாயிருந்த அவர்களைப் பார்த்து ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் சொன்னார் :

“ நீங்கள் தீர்மானித்திருக்கிற விஷயம் ரொம்பவும் சிலாக்கியமானது. சமூக கைங்கர்யத்தில் ஈடுபடுவது மிக நல்ல யோசனை. ஆனால் முதலில் தெய்வ வழிபாடு செய்து தியானித்து உள்ளத்தைத் துப்புரவாக்கிக்கொண்டு பிறகு நீங்கள் தீர்மானித்திருக்கிற வேலையில் இறங்குங்கள். ஈசுவரத் தியானம் செய்தால் உங்களுக்குச் சக்தி உண்டாகும். பகவானைப் பக்தியோடு வேண்டிக்கொண்டால் சமூகத்துக்கு நன்மை செய்யும் திறன் உங்களுக்கு வந்து சேரும். நீங்கள் எடுக்கும் காரியங்களுக்கு வேண்டிய சாமர்த்தியமும் சௌகரியங்களும் ஆண்டவன் அருளால் பெறுவீர்கள். பகவானுடைய நாமங்களைச் சொல்லித் துதியுங்கள். அவனைப்பற்றிப் பக்தர்கள் பாடியிருக்கும் பாட்டுக்களைப் பாடுங்கள். பிறகு உங்கள் காரியங்களை எப்படிச் செய்யவேண்டும் என்பது உங்களுக்கு நன்றாக விளங்கும்.”

*

எந்தப் பொதுக் கைங்கரியத்தில் இறங்கினாலும் தேசபக்தர்கள் ஸ்ரீ ராமகிருஷ்ணர் செய்யும் இந்த முக்கியமான உபதேசத்தைக் கவனிக்கவேண்டும் :—

"உலக நன்மைக்காக வேலைசெய்யும் ஆசை மேலிட்டு, 'இதைச் செய்வோம், அதைச் செய்வோம்' என்று வேலைகளைத் தேடித்தேடி அலையாதீர்கள். சகஜமாக நேரும் பணியில் ஈடுபடுங்கள். புகழும் பெயரும் சம்பாதிப்பதை உத்தேசித்து இந்த வேலை சிறந்தது, அந்த வேலை சிறந்தது என்று அலையாதீர்கள். சமூகத்துக்கு உழைப்பதென்றால் எந்த விதமான புகழோ லாபமோ பெறும் யோசனையை விட்டுவிட்டுக் கடமைகளைச் செய்ய வேண்டும். 'ஆண்டவனே, எனக்குப் பக்தியை அருள்வாய்! பரிசுத்த உள்ளத்தோடு உழைக்கும்படி செய்வாய்!' என்று வேண்டிக்கொள்ளுங்கள்."

*

தேச சேவை பலவிதத்தில் செய்யலாம். பொதுப் பணி செய்வது மிக நல்லதானாலும் புகழ் சம்பாதிக்கலாம் என்கிற ஆசை வைத்துக்கொண்டு ஆரம்பிக்கக் கூடாது. புகழாசையானது பொதுநலப் பணியாளர்களுடைய முயற்சிகளைச் சிக்கல் நேரிட்டபோது கோணல் மார்க்கங்களில் செலுத்திவிடும். புகழாசையும் வேறு சுயநலப் பற்றுகளும் வெளிப்படையாகவோ அல்லது உள்ளத்தில் அந்தரங்கமாக இருந்தோ மிக நல்ல முயற்சிகளை யெல்லாம் பயனறச் செய்துவிடுகின்றன.

"நான் பிறருக்காக இவ்வளவு பாடுபட்டேன், ஒன்றும் பலிக்கவில்லை" என்றிவ்வாறு பல தேசபக்தர்கள் வருத்தப் படுவதைப் பார்க்கிறோ மல்லவா? இப்படித் துக்கமும் மனக் கசப்பும் உண்டாவதற்குக் காரணம் என்ன? ஒரு ஆசையை வைத்துக்கொண்டு வேலை செய்து அதை அடையாதபடியால் உண்டாகின்றன. புகழும் பெயரும் அடைவதற்காக தேசப் பணியோ, சமூகப் பணியோ

செய்யப்போனல் பிறகு துக்கம் அனுபவிப்பது நிச்சயம். பாவி ஆசையானது எந்த நல்ல பணியையும் கெடுத்துக் குட்டிச் சுவராக்கிவிடும். பிறருக்கு நன்மை செய்வதற் காகவோ அல்லது சமூகத்துக்குப் பணி ஆற்றவோ எந்தக் காரியத்திலாவது நாம் ஈடுபட்டால் அதை ஆண்டவ னுடைய அருளுக்கு விட்டுவிடுவோம். விட்டுவிட்டால் வெற்றியடைந்தாலும் சரி, தோல்வியானுலும் சரி, மனக் கலக்கம் உண்டாகாது.

வெளிப்படையான சுய லாபத்துக்கோ, அல்லது மனசில் புகழாசை பொதிந்தோ, வேலையில் ஈடுபட்டால் அது சேவையாகாது. ஒருவித வியாபார மாகும். தேச சேவை செய்த உத்தமர்கள் புகழும் பெயரும் அடைந்திருக் கிருர்கள் என்பது உண்மை. ஆனல், அவ்வாறு புகழடைந்தவர்கள் அதற்காக வேலையில் புகவில்லை. அவர்களுடைய புகழின் ரகசியமும், வெற்றிக்குக் காரண மும் புகழை எதிர்பார்க்காமல் வேலை செய்ததே யாகும். இதை உணராமல் அவர்களைப்போல் நாமும் புகழ் பெறலாம் என்ற ஆசையோடு ஆரம்பித்தவர்கள் தோல்வி யும் ஏமாற்றமும் அடைவதை அடிக்கடி பார்க்கிரேம்.

*

ஒரு ஆசையுமில்லாமல் மனிதன் எப்படிப் பொதுப் பணி செய்யமுடியும் என்று சிலர் ஐயப்படலாம். அவ்வாறு ஐயப்படுகிறவர்கள் தங்கள் குடும்ப காரியங்களை மட்டும் கவனித்துக்கொண்டு யோக்கியமாகச் சொந்த வாழ்க்கை நடத்திக்கொண் டிருத்தலே போதிய தேச சேவையாகும். பொதுநலப் பணியில் பிரவேசித்து ஏமாற்றமும் அரு வருப்பும் அடைய வேண்டிய தில்லை.

பற்றும் ஆசையும் இல்லாமற், பொதுநலச் சேவை செய்வது கடினம். ஆகையினுல்தான் ஶ்ரீ ராமகிருஷ்ணர்,

"பகவானுடைய திருவருளைப் பெற்றுப் பொது வேலையில் இறங்குங்கள். 'ஆண்டவனே! என் உள்ளத்தில் பக்தியை நிறுத்து' என்று முதலில் வேண்டிக் கொள்ளுங்கள்" என்கிறார்.

பொதுக் காரியங்களில் இந்தக் காலத்தில் அலைப்புறும் மக்களுக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர் செய்திருக்கும் எச்சரிக்கை மிகவும் முக்கியமானது. மெய் வருந்திப் பாடுபட்டு, பொருள் விரயம் செய்துவிட்டு, பட்ட சிரம மெல்லாம் வீணாயிற்றே என்று பலர் துக்கப்படுகிறார்கள். இதன் ரகசியம் முதலில் ஈடுபடச் செய்த மனப்பான்மையி லிருந்த தோஷமே. பாலில் விழுந்த மோர்த் துளிபோல், அந்தத் தோஷம் தன் வேலையைச் செய்துவிடுகிறது. புகழும் பெயரும் சம்பாதித்துவிடலாம் என்கிற ஆவலை அஸ்திவார மாகக் கொண்டு கட்டின கட்டிடம் விழுந்ததும் துக்கம் ஏற்படாமல் வேறு என்னவாக முடியும்? இதனாலேதான் "பொதுப் பணியில் இறங்குவதற்கு முன் ஆண்டவனைத் துதியுங்கள்; பக்தி என்னும் புனித நீரைக்கொண்டு, மனதைக் கழுவிச் சுத்தப் படுத்திக் கொண்டு வேலை செய்யுங்கள்" என்றார் ஸ்ரீ ராமகிருஷ்ண பர்மஹம்ஸர். அஸ்திவாரம் சரியாகப் பலப்பட்டு நின்றால், பிறகு கட்டிடம் எந்த வகையில் எழுந்தாலும் பழுது இல்லை.

சஸ்திர வைத்தியர்கள் கத்தி எடுத்து அறுப்பதற்கு முன் என்ன செய்கிறார்கள்? கையையும் கத்தியையும் நன்றாகத் தோஷமறத் துலக்கிக்கொண்டே வேலை ஆரம்பிப் பார்கள். அவ்விதமாகவே, பொதுப் பணித் திட்டங்கள் போடுகிறவர்கள் முதலில் மனதை நன்றாகச் சுத்தி செய்து கொள்ள வேண்டும். இப்படிச் செய்தால் ஆண்டவன் அருளால் எல்லாம் சுகமாக முடியும். வெற்றிக்கும் சாந்த நிலைக்கும் வேறு சாதனமில்லை. ஆண்டவனைத் தியானித்து "எல்லாம் உன்னுடையது" என்று மனதை

உறுதியான நிலையில் நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றால் வாயால் மந்திர மொழிகள் சொல்லி மனதை ஏமாற்றிக் கொள்வதல்ல. அவ்வித வற்றல் சடங்கினால் பயனில்லை. மனப்பூர்வமாகப் பக்தி செலுத்த வேண்டும். அதன் பின்னரே எந்த விதமான பொதுப் பணியும் ஆரம்பிக்க வேண்டும். ஆண்டவனை வேண்டிக்கொள்ளாமல் புகழுக்காக ஆரம்பிக்கும் பணி பொய்ப்பணி யாகி, துக்கத்துக்கும் கோபத்துக்கும் அசூயைக்கும் விதைபோட்டுப் பயிரிடுவதாக முடியும்.

*

பொதுப் பணியில் ஈடுபடுவதற்கு முன் பகவான் ராமகிருஷ்ணர் உபதேசப்படி ஆண்டவனைத் தியானித்து, பக்தி செய்வது மல்லாமல், வேலையில் இறங்கிய பின்னும் எந்த நேரமும் எந்தத் தொண்டு செய்து கொண்டிருக்கும்போதும் ஆண்டவன் நினைவை மனதில் நிறுத்திக்கொண்டே வேலை செய்யவேண்டும்.

பொதுநல வேலை வேறு; சுவாமி பூசை வேறு என்று எண்ணுவது தவறு. எல்லாம் ஆண்டவன் வழிபாடாகவே எண்ணி வேலையைச் செய்யவேண்டும். கடவுள் நினைவு வைத்துக்கொண்டு வேலை செய்வது காரியத்துக்குத் தடையாகாது. எந்த வேலை செய்யும்போதும் பக்தி செய்துகொண்டே வேலை செய்வது, பழக்கத்தில் மகிழ்ச்சியாகவே முடியும். ஊக்கமும் தரும். வேலைத் திறமையும் தரும். மகாத்மா காந்தி யடைந்த வெற்றிகளின் ரகசியம் இதுவே என்று நான் உறுதியாகச் சொல்லுவேன். மனிதன் நடக்கும்போது, கூடவே நிழல் செல்வதுபோல் அவர் செய்து நடத்திய எந்த வேலை, எந்தத் திட்டம், எந்த முயற்சியிலும் ஆண்டவனுடைய நினைவை உள்ளத்தில்

எப்போதும் நிறுத்தி வந்தார். அவருடைய வேலைகளுக்கு அது தடையாக இருக்கவில்லை. வெற்றிக்கே காரணமாக இருந்தது. நாம் செய்யும் சிறு தொண்டுகளிலும் அவ்வாறே ஆண்டவன் நினைவு, பக்கத்தில் நிழல்போல் நின்று ஆரவாரமின்றி மௌனமாக உதவி செய்யும். ஈசுவரனை எப்போதும் மனதில் வைத்துக்கொண்டு வேலை செய்வது பொதுப்பணிக்கு ஒரு இன்றியமையாத ஆசார மாகும். சஸ்திர வைத்தியத்துக்குரிய துப்புரவு-ஆசாரத் தைப்போல் இந்த உள்ளத் துப்புரவு-ஆசார முறை பொதுப் பணிக்கு இன்றியமையாதது. பழுதற்ற மனம் என்பது ஒரு பெருஞ் செல்வமும் சாதனமுமாம். அதைப் பெறுவதற்கு பக்தி ஒன்றே வழி.

# 15. அத்துவைதம்

"அத்துவைதத்தைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன? பிரம்மம் ஒன்றே உண்மை; பிரபஞ்சம் அவ்வளவும் பொய்—இதுதானே வேதாந்த முடிவு?" என்று அத்துவைத சாஸ்திரம் படித்த ஒரு பெரிய பண்டிதர் பரமஹம்ஸரைக் கேட்டார். இந்தச் சந்தர்ப்பத்தில் பகவான் ராமகிருஷ்ணர் செய்த உபதேசம் :

எல்லாம் பொய், எல்லாம் மாயை, பரம் பொருள் ஒன்றே உண்மை என்று வாதித்து நிரூபிப்பது எளிது. ஆனால் பேச்சில் நிரூபித்து விட்டதனால் அது நமக்கு மெய்யுணர்வாக முடிந்தது என்று சொல்லுவதற் கில்லை. மெய்யுணர்வாகாத அறிவுக்கும் உண்மையான ஞானத்துக்கும் ரொம்பவும் வித்தியாசம் உண்டு. கானல் நீர் என்று கண்ட பிறகு குடம் எடுத்துக் கொண்டு தண்ணீர் மொள்ளப் போகமாட்டோம். யாராவது போகச் சொன்னால் சிரிப்போம். காண்பது பேய்த் தேர், தண்ணீர் இல்லை என்று தெரிந்த பின் தென்பட்ட பொருளைப் பற்றி நாம் அறிந்து கொண்ட உண்மையை உணர்ந்து அதன்படி நடந்து கொள்ளுகிறோம். கானல் நீரைப் பற்றி நாம் அடைந்த அறிவும் நம்முடைய செயலும் எளிதில் ஒன்றுபட்டு விடுகின்றன.

அத்துவைத உண்மை விஷயத்தில் இப்படியில்லை. 'பரம் பொருள் ஒன்றே உண்மை, ஜீவன்களுடைய வியக்தி நிலையும் பிரபஞ்சத்தில் காணப்படும் சகல பொருள் வேறுபாடுகளும் மாயை' என்று மீமாம்ச ஆராய்ச்சியைக் கொண்டு உறுதியாக முடிவு செய்தாலுங்

கூட நம்முடைய உள்ளுணர்ச்சியில் அந்த முடிவு சரியான இடம் பெற்றுப் பதிவதில்லை. கண்ட உண்மை யானது உயிரோடு ஒட்டாமல் தனித்து நிற்கிறது. உணர்ச்சி என்னும் கெட்டிச் சாந்தில் பதியவில்லை. படித்தும் வாதித்தும் முடித்த முடிவு பொதி மாட்டுச் சுமையாக நிற்கிறதே யொழிய உள்ளுணர்ச்சி யாகவில்லை. மாயை என்று சண்டை போட்டு வாதித்த அறிஞர்களாகிய நாம் மறுநாள் சாப்பாட்டைப் பற்றிக் கவலைப்பட்டு அலை கிறோம். நம்முடைய முயற்சிகள் எதிலாவது யாரேனும் தடையாக நின்றால் அவர் பேரில் கோபங் கொள்கிறோம். அடைந்த அறிவு வாழ்க்கையில் ஏறுவதில்லை. அத்துவைதம் எளிதல்ல. பக்தி வழிபாட்டின் அவசியம் இதுவே.

ஒரு பாம்பையோ புலியையோ கண்டோமானால் உடல் நடுங்குகிறது. புலன் வழியாக அடைந்த அறிவு உடலை யெல்லாம் ஆட்டி விடுகிறது. நல்ல ஆகாரத்தைப் பசி வேளையில் ஒருவன் கண்டால் அவன் வாயில் தண்ணீர் ஊறுகிறது. ஆகார உண்மையானது உயிரோடும் உடலோடும் ஒட்டி வேலை செய்கிறது.

சிநேகிதனையோ அன்புக்குரிய உறவினரையோ கண்டால் 'ஆம், இவர் இன்னார்' என்று தெரிந்து கொண்டு நாம் சும்மா நிற்பதில்லை; உள்ளம் பூரித்து மகிழ்ச்சி யடைகிறோம்.

படத்திலுள்ள பாம்பையோ புலியையோ கண்டது போல் மட்டும் ஒருவன் அத்துவைத உண்மையை அறிவாராய்ச்சியால் கண்டு விட்டதால் பயன் ஒன்று மில்லை.

ஒருவன் அத்துவைத ஞானம் உண்மையில் அடைந்தால் அந்தச் சமயமே அவன் மெய்ப் பொருளுடன் ஒன்று பட்ட நிலையை அடைய வேண்டு மல்லவா? காட்டில் நிஜப் புலியைக் கண்டவுடன் பயங்கொண்டு நடுங்கு

வதுபோல் உண்மை ஞானம் அடைந்தவன் தட்சணமே ஆனந்தம் மேலிட்டுச் சமாதி நிலையை அடைவான்.

*

பிரம்மம் ஒன்றே உண்டு; மற்றவையெல்லாம் மாயை என்று ஒருவன் உண்மையில் கண்டால் பேத உணர்ச்சிக்கு இடம் ஏது? பேத உணர்ச்சி நீங்காம லிருந்தால் அடைந்த அறிவு பேச்சளவுதான்; ஞானுனுபவம் அல்ல.

அத்துவைத மெய்யுணர்வைப் பெற்ருல், எரியும் கற்பூரம் எரிந்து ஒன்றுமில்லாமல் போவது போல் அறியாமையான பேத உணர்ச்சி முற்றிலும் அற்றுப் போகும். துளிச் சாம்பலும் இராது. கற்பூரம் எரிந்து போன பின் 'நான் எரிந்து ஒழிந்தேன்' என்று சொல்லுவதற்குக் கற்பூரம் இருந்தால்தானே? ஆனந்த நிலையை அடைந்திருக்கும் ஒருவன் மாயையை மாயையாகவும் உண்மையை உண்மையாகவும் அனுபவிக்கிருன். ஆனுல் அந்த நிலையில் நீ, அது, இது, அறிவு, அறியாமை, உண்மை, இன்மை என்கிற பேச்சுக்கே இடமில்லை. கரையற்ற மௌன வெள்ளத்தோடு அவன் உயிர் சேர்ந்து விடுகிறது. உப்பால் செய்யப்பட்ட ஒரு பிரதிமையைத் தண்ணீரில் போட்டால் கரைந்து போவது போல் அத்துவைத மெய்ஞான மடைந்தவனுடைய உள்ளம் பரம் பொருள் வெள்ளத்தில் கரைந்து ஒன்ருகிவிடும். கரைந்து போனதைப் பற்றிக் கரைந்து போன உப்பு பேச முடியுமா? 'அறிந்தேன்' 'அறியவில்லை' என்று யாரேனும் வாதிக்கும்போது நான், நீ என்கிற பேத உணர்ச்சியுடன் தான் பேச்சு நடக்கிறது. அந்த நான்-தன்மை இருக்கும் வரையில் அவனுக்குப் பிரபஞ்சம் எப்படி மாயையாகும்?

பேத உணர்ச்சி நீத்த பின்னர் வாதப் பிரதி வாதமே இல்லை. மௌன நிலை.

இதுவே அத்துவைதத்தை உபதேசிப்பதில் உள்ள சிக்கல் ; அறிவுக் கெட்டாத மெய்ப்பொருளை மாயையால் உண்டான நிலையில் வாதித்து விளக்கிப் பார்ப்பதிலுள்ள கஷ்டம். உபதேசமும் வாதமும் நடத்தும் ஆசாரிய னுக்கும் கேட்கும் சீடனுக்கும் ‘ நீ ’ ‘ நான் ’ என்கிற பேத உணர்ச்சி இருந்தே தீருகிறது. இருவருக்கும் உலகம் உண்மையில் மெய்யாகவே இருக்கிறது. சமாதி நிலை ஒன்றில்தான் அத்துவைதத்தை ஒருவன் அனுபவித்து உணரலாம். மற்ற நிலையில் பேசப்படும் அத்துவைதம் வெறும் காற்று மூட்டை ; அதைக் கொண்டு ஓரளவு நீந்தலாம். அடைந்த அறிவைக் கொண்டு பக்தி செய்து ஆண்டவனை வழிபட்டால் மெய்யுணர்வு அடையலாம்.

# 16. அர்ச்சாவதாரம்

வீடு கட்டும்போது சாரம் கட்டி அதன் மேல் நின்று வேலைக்காரர்கள் கட்டிட வேலை செய்வார்கள். வீடு கட்டி முடிந்ததும் சாரத்திற்கு வேலையில்லை. நல்ல ஞானம் அடைந்தவர்களுக்குக் கோயிலும் குளமும் வேண்டியதில்லை. தியானத்தில் மனதை அலையாமல் நிறுத்தப்பயிலாதவர்களுக்குப் பூஜையும் ஸ்நானமும் அவசியமாகும்.

பக்தியுடன் களிமண்ணை எடுத்து லிங்கமாகப் பிடித்து வைத்தால் அதுவே ஈசன். அனைத்திலும் இருக்கும் ஈசன் அந்த லிங்கத்தினின்று நீங்கி விடவில்லை.

*

"இந்த விக்ரகம் வெறும் களிமண்ணுயிற்றே, இதை எப்படிக் கடவுளென்று தியானிக்க முடியும்?" என்று ஒருவர் கேட்டார்.

"ஏன் மண், கல், செம்பு என்று எண்ணுகிறீர்? பரம்பொருளால் ஆன உருவம் என்று ஏன் காண மாட்டீர்? அனைத்திலும் கடவுள் இருக்க அனைத்தும் பரம்பொருளாகவே இருக்க, ஏன் இந்த மூர்த்தியும் அந்தப் பரம்பொருளை உபாசிக்க உதவாது? மண்ணும் பரம் பொருளே, செம்பும் பரம்பொருளே. பரம்பொருள் அன்றி ஒரு பொருளுமில்லை. ஒரு சிறு நீர்த்துளியும் பராசக்தியின் உருவமே. குடிக்கும் நீரும் பராசக்தியே. உள் சென்று தாகத்தைத் தணிப்பதும் பராசக்தியே. துளசி மாலையைக் கையில் வைத்துக் கொண்டு ஹரி நாமங்களைச் சொன்னுேமானல் ஒவ்வொரு துளசி மணியும் ஹரியின் உருவமேயாகும்."

ஆகாயம் கறுத்து, வஜ்ராயுதம் பாய்ந்து இடியும் மின்னலும் கக்கும் மேகத்தில் பராசக்தி இருக்கிருள். அந்த மேகம் மலைமேல் மழையாகப் பெய்து கம்பீரமான நதியாக ஓடும்போது, அதிலும் பராசக்தி இருக்கிருள். ஆற்றங் கரையில் பக்தன் சந்தியா காலத்தில் "ஜலமே! உன் ஆனந்தம் என்னுள் மகிழ்ச்சியை உண்டாக்குக! உன் சக்தி எனக்குள் பாய்ந்து என்னை பலவானுக்குக! ஜலமே! என் கண்கள் விசாலப் பார்வை பெறச் செய்வாயாக! தாய் தன் அருமைக் குழந்தையை ஆர்வங்கொண்டு போஷிப்பது போல, ஜலமே, உன் மங்களச் சுவையும் சத்தும் என்னைப் போஷிக்கும்படி அருள்வாயாக. ஜலமே! எதையும் துப்புரவாக்கிவிட்டு, நீ உலர்ந்து மறைந்து போகிருய். அந்தக் குணத்தை எனக்கும் தந்து என்னையும் துப்புர வாக்குவாயாக! அதற்காக உன்னைச் சரண் புகுந்தேன்" என்று தலையில் ஜலத்தைத் தெளித்துப் புரோக்ஷணம் செய்து கொண்டு கையில் ஆசமனத்துக்குக் கொஞ்சம் ஜலம் எடுத்து, "அழிவற்ற பரம்பொருளே! உன்னை வணங்குகிறேன்" என்று சொல்லி உறிஞ்சி அருந்துகிருன். அந்த ஜலமும் பராசக்தியே.

*

எங்கும் ஆண்டவன் உளன் என்று உண்மையில் கண்டோமானுல் மனதைத் தியானத்தில் நிறுத்துவதற்குச் சாதனமாக ஏன் ஒரு திவ்ய மூர்த்தியை வைத்துக்கொண்டு ஆராதிக்கக் கூடாது? எங்கும் இருப்பவன் அந்த மூர்த்தியில் இல்லாமற் போய்விட்டானு? மூர்த்தி பூஜை செய்யாதவர்கள் செய்ய வேண்டியதில்லை. செய்பவர்களைக் குற்றம் சொல்வது மடமை. ஈசன் சர்வ வியாபகன். பராசக்தியானவள் எதிலும் வீற்றிருக்கிருள். உண்ணும் உணவில்

ஒரு பருக்கையை வைத்துப் பூஜை செய்யலாம். பூஜை செய்து உணவை உண்போமானால் பராசக்தி உள்நின்று அருளுவாள்.

*

ஆராதித்துப் பூஜை செய்யும் மூர்த்தி ஒரு சின்னம் மாத்திரமல்ல. எங்கும் உள்ள ஈசன் அந்த மூர்த்தியிலும் சாக்ஷாத் வீற்றிருக்கிறான். பூஜைக்கு அமைத்துக்கொண்ட விக்கிரகத்தை நம்முடைய பெரியோர்கள் 'அர்ச்சாவதாரம்' என்று ஒரு அவதாரமாகவே பாவித்து வந்திருக்கிறார்கள். ராமன், கிருஷ்ணன் இவர்களைப் போல் இந்த மூர்த்தியும் ஒரு நிரந்தர அவதாரம். கம்பத்திலும் மீனிலும் பன்றியிலும் தசரதன் மகனிலும் அவதரித்ததுபோலவே, திருவரங்கத்துக் கோயிலிலும் மற்றும் பல திருப்பதிகளிலும் ஈசன் நம்முடைய பக்திக்கு இணங்கி அவதரித்து நிற்கி றான். பரிபூரண வேதாந்த ஞானம் அடைந்த ஆழ்வார் களும் நாயன்மார்களும் ஆச்சாரியர்களும் அந்தத் திருப் பதிகளில் ஆண்டவனைக் கண்டார்கள். கண்டு மனதை ஒன்றித்தும், தியானித்தும், பாடியும், ஆடியும் வந்தார்கள்.

தெருவில் குழந்தைகள் விளையாட்டாகத் திருவரங்கக் கோயிலையும், பள்ளிகொண்டான் உருவத்தையும் மண்ணில் கோடிமுத்துக் காட்டிய மாத்திரத்தில் உஞ்ச விருத்தியில் சென்றுகொண்டிருந்த ராமாநுஜர் தரையில் விழுந்து தெண்டன் சமர்ப்பித்துச் சர்வேசுவரனைத் தியானித்ததாக ஒரு கதை கூறப்படுவ துண்டு. நம்முடைய செயற்கைப் பதுமைகளிலும் சித்திரங்களிலும் ஆண்டவன் இல்லை என்று எண்ணுவது அறியாமையாகும்.

சேதனங்களும் அசேதனங்களும் எல்லாப் பொருள் களுமே பிரம்மம் என்று கண்டபின் பூஜைக்கென்று அமைத்துக்கொண்ட மூர்த்தி ஏன் பரம்பொருளின்

உருவம் அல்ல? அல்லவென்று எண்ணுகிறவர்கள் உண்மையில் பிரம்மத்தைத் தனிப்படுத்தி வேறு உலகத்தில் வைக்கிருர்கள் போலும். வாதப் பிரதிவாதத்தில் பரம்பொருளைப் பற்றி சர்வ வியாபகத்தைச் சொல்லிப் பேசுகிருர்களேயொழிய அவர்கள் கடவுளின் சர்வ வியாபகத்தை நம்பவில்லைபோல் தோன்றுகிறது. ஞானமும் பக்தியும் கொண்டு சித்தத்தை ஒரு முகப்படுத்தி பிரம்மத்தைத் தியானித்து உபாசிக்கலாம். ஆனல் இது அனைவருக்கும் முடியாது. முடியும்போல் தோன்றினலும் அது அநேகமாக பிரமையும் ஒருவித ஆணவமுமே யாகும். அசேதன லிங்கத்தை வைத்து அதன்மூலம் எங்கும் நிறைந்த பரம்பொருளைத் தியானிப்பது அனைவருடைய சக்திக்குள் அடங்கும் ஒரு சரியான முறையே யாகும்.

அதைக் குறைவுபடுத்திப் பேசுவது தவருகும். பகவான் ராமகிருஷ்ணரும் சங்கர, ராமாநுஜ, மத்வாச்சாரியார்களும், மேல்நாட்டில் பல கிறிஸ்துவ ஞானிகளும் பக்தர்களும் அர்ச்சாவதார பூஜையை அவலம்பித்து அமைதியும் ஆனந்தமும் அடைந்தார்கள் என்பது பிரசித்தம். ஆனபடியால் அர்ச்சனைக்கென்று கல், மரம் முதலிய அசேதனப் பொருள்களை அமைத்துக்கொண்டு நாமும் பரம்பொருளைத் தியானித்து நன்மை பெறலாம்.

# 17. பஜ கோவிந்தம்

"குழந்தாய்! தூங்கு, தூங்கு!" என்று தாய் சொல்லுகிருள். "நான் தூங்கிப் போனேன், அம்மா!" என்கிறது குழந்தை. தாயிடம் உள்ள அன்பினுலும் தூக்கம் என்ருல் என்ன என்பதை அறியாதபடியாலும் குழந்தை அப்படிச் சொல்கிறது. சமாதி நிலையடையாத ஒருவன் 'சிவோஹம்' 'சிவோஹம்' என்று புஸ்தகம் படித்துவிட்டுச் சொல்லுவதும் இத்தகைய பேச்சுத்தான். குழந்தையானது உண்மையில் தூங்கிஞல் 'தூங்கினேன்' என்ற பேச்சு எப்படி உண்டாகும்?

எவ்வளவு இல்லை என்ருலும் 'நான்' என்பது உள்ளத்தை விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டிருக்க, அத்தகையவனுக்குப் பிரம்மம் நிர்க்குணமாக நின்று எப்படி உதவ முடியும்? பரம்பொருளை ஈசுவரனுகப் பாவித்து, பிரபஞ்சத்தை அவனுடைய லீலையாகக் கொண்டு பகவானை வழிபட்டுப் பக்தி செய்தலே முறை. அவ்விதம் செய்து வந்தால், 'நான்' என்னும் காயானது முற்றிக் கனியாகி, நன்ருகப் பழுத்து உதிர்ந்து போகும். அடையாத ஞானத்தை அடைந்து விட்டதாகப் பாவிப்பதனுல் ஒரு விதமான பயனும் இல்லை.

அத்துவைத பண்டிதருக்குப் பரமஹம்ஸர் தம்மைப் பற்றியே அடக்கத்துடன் சொல்லுகிருர்:

"'நான்' 'நான்' என்னும் அஞ்ஞானத் தன்-நினைவு என்னைப் பாதித்துக் கொண்டிருக்கும் வரையில் என்

பிரம்மம் சகுணப் பிரம்மமே யாகும். சர்வேசுவரனைத் தியானித்து பக்தி செய்வதில் என்ன குறை? தேவியை நான் வழிபடுகிறேன். அவள் பல ஜீவன்களாகவும். பிரபஞ்சமாகவும் என் முன் நிற்கிருள். பகவதியும் ஈசனும் ஒன்றே. வைரக் கல்லும் வைரக் கல்லின் பிரகாசமும் வெவ்வேரு? சூரியன் வேறு, வெய்யில் வேறல்ல. ஒன்று இன்றி மற்ருென்றைக் காண முடியாது. நான் வழிபடும் தேவி இரண்டறத் தனியே நிற்கும் பிரம்மமே யாவாள்.

" சிவோஹம் என்று வாயால் சொல்வதில் பயனில்லை. பக்தி செய்து 'நான்' என்னும் ஆணவம் முற்றிலும் அற்றுப்போன பின்னரே, சிவோஹம். அதுவரையில் நான் ஆண்டவனுக்கு அடிமை. நான் அவன் ஏவியதைச் செய்யும் கருவி."

*

ஒரு சாது புண்ணிய ஸ்தலம் ஒன்றுக்கு வந்து அத்துவைத உபந்நியாசங்கள் ஏராளமாகச் செய்துகொண் டிருந்தார். அச்சமயம் அங்கே இருந்த ராமகிருஷ்ண தேவர் அவரைப்பற்றி ஒரு கெட்ட சமாசாரம் கேள்விப் பட்டார். பிறகு ஒரு நாள் சாது இருந்த பக்கம் சென்ற போது சாதுவைச் சந்தித்து, "என்ன துறவியாரே! வேதாந்தத்தை அலசிக் கொட்டுகிறீரே! ஊரிலே ஏதோ சொல்லிக் கொள்ளுகிருர்களே, அதைப்பற்றிய உண்மை என்ன?" என்று பரமஹம்ஸர் கேட்டார்.

"அதனுல் என்ன? நிழல் நிழலுடன் விளையாடியதைப் பற்றி வேதாந்த ஞானம் பெற்றவர்களுக்கு என்ன விசாரம்? உலகமெல்லாம் மாயை. இந்தப் பிரபஞ்சமே பொய்யாக இருக்க, என்னுடைய உடலின் காம சேஷ்டைகள் மட்டும்

உண்மையா? எல்லாம் பேய்த்தேர். இதற்கு வேதாந்த ஞானியான தாங்கள் ஏன் வருத்தப்பட வேண்டும்?'' இவ்வாறு அத்துவைத நிபுணராகிய அந்தச் சந்நியாசி சொன்னதைக் கேட்ட ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு அடக்க முடியாத வெறுப்பு உண்டாயிற்று.

"உம்முடைய வேதாந்தத்தைத் தீயில் போட்டுக் கொளுத்தும். உம்முடைய படிப்பு ஒரு பெரும் மோசம். ஜனங்களை ஏமாற்றிச் சிற்றின்பத்துக்கு ஒரு வழி தேடினீர்'' என்றார்.

பக்தியில்லாத வேதாந்த மாயாவாதம் மிகவும் அபாய கரமானது.

*

துரியோதனன்கூட ஒரு சமயம் "ஆண்டவன் என் உள்ளத்தில் வசிக்கிறான். அவனல்லவோ, என்னை இவ்வாறு செய்யச் சொல்லுகிறான்? என் பொறுப்பு ஒன்றுமே இல்லை. என்னை ஏன் குற்றம் சொல்லுகிறீர்கள்?'' என்றானும்!

ஒருவன் ஆண்டவனுக்கு அடிமையாகிப்போய்த் தன் செயல் எல்லாம் ஆண்டவன் திருவுள்ளம் என்று உண்மையில் நினைத்தால் அவன் எவ்வாறு பாபச் செயலில் புக முடியும்? பாப எண்ணமே அவனை அணுகாது. பரதநாட்டியம் நன்றாகக் கற்ற பெண் ஒரு அடி பிசகாக வைப்பாளா? அவளுடைய கால்கள் ஒரு யோசனையுமின்றித் தாளத்தோடு துள்ளும். நான் ஆண்டவனுடைய அடிமை, எல்லாம் அவனுடைய செயல்—என்கிற புனித எண்ணம் உள்ளத்தில் நிலைத்துவிட்டால் அந்த இதயத்தில் அழுக்கு வந்துசேர இடமே இல்லை! இதை மறந்துவிட்டுச் சில கற்றறி மூடர்கள் சாஸ்திர சூத்திரங்களை மோசத்துக்கும் பாபத்துக்கும் கருவியாக உபயோகிக்கப் பார்க்கிறார்கள்.

'உலகமெல்லாம் மாயை; ஆகையால் நாம் சிற்றின்பம் நுகர்வதில் என்ன பாவம்?' என்று தம்மைத்தாமே மோசம் செய்துகொள்ளுகிறார்கள். ஞானானுபவமாகாத அத்துவைத வீண் பேச்சைவிட்டுப் பக்தி முறையில் ஈடுபடுவதே மேலானது.

உபநிஷத பிரம்ம சூத்திர வேதாந்த சாகரத்தின் கரையைக் கண்டவரான ஸ்ரீ சங்கர பகவத் பாதாசாரியரே உலகம் வியக்கும் தம் ஞானமயமான மதியை நோக்கி "மூட மதியே! கோவிந்தனைத் துதி! கோவிந்தனைத் துதி!" என்று பாடியிருக்கிறார். சங்கராச்சாரியரே இப்படிச் சொல்ல நாம் எம்மாத்திரம்!

# 18. சமய சீர்திருத்தம்

நம் நாட்டில் புகழ்பெற்ற பல மகான்கள் அவதரித்து நம்முடைய வழிபாடு முறைகளையும் ஆசாரங்களையும் அவ்வப்போது சீர்திருத்தம் செய்து வந்திருக்கிறார்கள். ஆனால் நாளா வட்டத்தில் அவர்களுடைய உபதேசங்களின் பயனாகப் புதுச் சம்பிரதாயங்களும் புது ஜாதிப் பிரிவினைகளும் தோன்றிச் சீர்திருத்தம் அடைவதற்குப் பதில் மக்கள் பல சம்பிரதாயக் குழாம்களாகப் பிரிந்து போயிருக்கிறார்கள். நல்ல எண்ணத்துடன் ஆரம்பிக்கப்பட்ட சீர்திருத்தங்கள் பிரிவினைகளுக்கும் அகங்காரங்களுக்கும் ஒருவரை யொருவர் இகழ்வதற்கும் வேற்றுமை பாவம் கொள்வதற்கும் காரணங்களாகி விட்டன. ஆராய்ந்து பார்த்தால் நம்முடைய சமய வேறுபாடுகளெல்லாம் சீர்திருத்த முயற்சிகளிலிருந்தே உண்டாயின என்பதைக் காணலாம்.

பகவான் ராமகிருஷ்ணருடைய உபதேசங்களும் முயற்சிகளும் இந்த தோஷத்தினின்று விலகி நிற்கின்றன. எந்த வழிபாட்டு முறையையும் எந்தச் சம்பிரதாய ஆசாரத்தையும் அவர் குற்றம் சொல்லவில்லை. அனைத்திலும் பிரம்மத்தைக் கண்ட அந்த ஞானி, அனைத்திலும் நன்மையையே கண்டார். அவருடைய உபதேசங்களினால் மக்கள் முன்னேற்றம் அடைந்தார்களே யொழிய அவற்றின் பயனாகப் புதுச் சம்பிரதாயம் ஏதும் நாட்டில் உண்டாகவில்லை.

பூரண ஞானியாயினும் பகவான் ராமகிருஷ்ணர் மூர்த்தி பூஜை வேண்டாம் என்று சொல்லவில்லை. சமாதி நிலை அடைந்த அத்வைதியாயினும் சாதாரணமான

கோயில் பூஜைக் கிரமங்களையும் மிக மதித்து உபதேசித்து வந்தார். எந்த தெய்வத்தை எந்த முறையில் வழிபடுவதையும் அவர் சரிசமானமாகக் கண்டார்; கண்டு அதற்கிணங்க உபதேசித்தும் வந்தார்.

ஹிந்து சம்பிரதாயத்தில் உயர்ந்த வேதாந்தமும், கூடவே பலவித கிரியைகளும் திருவிழாக்களும் மந்திர தந்திர முறைகளும் இருந்து வருவதற்குக் காரணம் அவர் ஒரு சமயம் எடுத்துச் சொன்னார்: "நெல்லில் முக்கியமான பொருள் அதனுள் இருக்கும் அரிசியே. அரிசியை மூடிக்கொண்டிருக்கும் உமியைக் குத்தி எடுத்துவிட்டுத் தான் அரிசியை உணவாகப் பயன்படுத்திக் கொள்ளுகிறோம். ஆனால் மகனே! அரிசி நாள்பட நிற்காது; கெட்டுப் போகும். நெல்லாக வைத்தால் கெடாமல் நிற்கும். அரிசியை வயலில் விதைத்தால் பயிருண்டாகாது. நெல்லை விதைத்தால்தான் முளைக்கும். அரிசிதான் முளைப்பதாயினும் அது உமியால் மூடப்பட்டு நெல்லாக நிலத்தில் பதிந்தால்தான் முளைவிட்டு வளரும். நம்முடைய தர்மத்திற்குக் காப்பாகவும், உயிர்கொண்டு வேர் ஊன்றி வளர்ந்து பயிர் கொடுப்பதற்காகவுமே கிரியைகளும் முறைகளும் சடங்குகளும், திருவிழாக்களும் நெல்லின் உமி போல் அமைக்கப்பட்டன. சமைத்து உண்பதற்கு உமி வேண்டியதில்லை. அரிசிதான் வேண்டும். ஞானமடைந்தவனுக்குக் கிரியைகளும், திருவிழாக்களும் கோயில்களும் வேண்டியதில்லை. ஆனால் இவையெல்லாம் இல்லாமல் ஞானம் மட்டும் தனித்து உபதேசிக்கப்பட்டு ஹிந்து தர்ம முறையாக வைக்கப்பட்டிருந்தால் அது வேரூன்றிப் பயிராக விளைந்திராது. வயலில் போட்ட அரிசியைப் போல் முளைவிடாமல் அழிந்து போயிருக்கும்."

உடலில் ஒரு காயம் ஏற்பட்டால் அது ஆறும் வரையில் அதற்குக் காப்பாக மேலே பொருக்குத் தோன்று

கிறது. உள்ளே காயம் இருக்கும் வரையில் பொருக்கு இருக்க வேண்டும். புண் ஆறுவதற்கு முன் பொருக்கை எடுக்கக் கூடாது. புண் ஆறிய பின் தாளுகவே அது உலர்ந்து வேறு பட்டுவிடும். ஞானம் அடைந்த பின் சடங்குகளும், ஆசாரங்களும், தாமாகவே கழிந்து ஒழிந்துபோம். ஞானம் அடைவதற்கு முன் அவற்றை ஒழிக்கப் பார்ப்பது புண் ஆறுவதற்கு முன் மேற் பொருக்கை எடுத்துப் புண் ஆறுவதைத் தடுப்பது போலாகும்.

ஆசார விதிகளை மதிக்க வேண்டியதில்லை என்று ஞானம் பெற்ற சிலர் எண்ணலாம். ஞானம் உண்மை யில் முற்றுவதற்கு முன் ஆசார வழக்கங்களை விட்டுவிடப் பார்ப்பது உசிதமல்ல. புகை போட்டுப் பழுக்க வைத்த பழம் நல்ல இனிப்பாக இராது. நன்ருக முற்றி இயற்கை யில் பழுத்த பழமே சரியான சுவை பெறும்.

*

ஞானிகளுக்கு ஜாதி வேற்றுமை கிடையாது. ஆனுல் ஞானத்தை அடைந்து உண்டாகும் அந்த உரிமையை அவர்கள் எவ்வாறு பயன் படுத்திக்கொள்வார்கள் என் பதற்கு ஒரு கதையை ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொன்ஞர் :

கிருஷ்ண கிஷோர் ஒரு சமயம் பிருந்தாவனத்திற்கு யாத்திரை சென்ருர். வெகுதூரம் நடந்து தாகம் மேலிட்டு ஒரு தண்ணீர்க் கிணற்றண்டை நின்ருர். அங்கே கிணற் றில் குடம் விட்டு ஒருவன் தண்ணீர் இழுத்துக்கொண் டிருந்தான். "கொஞ்சம் தாகத்திற்குத் தண்ணீர் வார்ப் பாயா?" என்று கிருஷ்ணகிஷோர் அவனை வேண்டிக் கொண்டார். "ஐயா! நான் பறையன், நீங்களோ பிரா மணர். நான் எடுத்த ஜலத்தை நீங்கள் குடிக்க முடியாது" என்ருன். "அப்பனே! நீ ஹரி நாமம் சொல்லமுடியுமா?"

என்று கேட்டார் கிருஷ்ணகிஷோர். "ஆஹா சொல்லு வேன்" என்ருன் அவன். "அப்படியானல் ஹரி நாமத்தைச் சொல்லிக்கொண்டே தண்ணீர் இழுத்தாயா ஞல் அந்தத் தண்ணீரை நான் குடிப்பதில் தோஷமில்லை" என்ருர். அவ்வாறே அவன் தண்ணீர் இழுத்துக் கொடுத்து அவருடைய தாகத்தைத் தீர்த்தான்.

ஹிந்து தர்மத்தின் அடிப்படையான ஞான-பக்தி மார்க்கங்களை அனுசரித்து ஸ்ரீ ராமகிருஷ்ணர் எப்படிச் சீர்திருத்தத்தை உபதேசித்தார் என்பது இதில் நன்ருக விளங்குகிறது.

*

"இந்தக் காலத்தில் முக்கிய அம்சங்களைத்தான் ஜனங்கள் வேண்டுகிருர்கள். நீக்கிவிடக்கூடிய அனுவசிய மான அம்சங்களை விரும்புவதில்லை. ஆனபடியால் சடங்கு களையும் கிரியைகளையும் குறைத்துக் கொள்வதே நன்று" என்றும் காலத்துக் கேற்றபடி பரமஹம்ஸர் உபதேசித் திருக்கிருர்.

மாவைக் கொஞ்சம் குளிர்ந்த தண்ணீரில் முதலில் கரைத்து, பிறகு வெந்நீரோடு கலந்து கொதிக்க வைத்தால் சரியான கஞ்சியாகும். முதலிலேயே மிகச் சூடான ஜலத்தை விட்டால் மாவு கரையாது; கட்டி தட்டி விடும். ஹிந்து சமுதாயம் மிகப் பெரிய சமுதாயம். அதிகச் சூட்டோடு சீர்திருத்தம் செய்ய முயன்ருல் மாவு கட்டி தட்டுவதுபோல், வேறுபட்ட சமயக் குழாங்கள் தோன்றி விடுகின்றன. சீர்திருத்தத்தின் அவசியத்தை நன்ருகக் கண்ட போதிலும், மிக நிதான முறையை அனுசரித்து உபயோகித்தால்தான் புதுச் சமயங்களும் குழாங்களும் உண்டாகாமல் சீர்திருத்த நோக்கம் வெற்றியடைய முடியும்.

# 19. அடக்கம்

'அடக்கம் வேண்டும்' 'அடக்கம் வேண்டும்' என்று ஞானம் பெற்றவர்கள் எல்லாம் போதித்து வருகிருர்கள். அடக்கம் சித்திக்கு வழி என்று சாஸ்திரப் பயிற்சி யடைந்தவர்கள் அடக்கத்தை மேற்கொண்டு நடந்து வருகின்றனர். ஆனல் அவ்விதம் மேற்கொண்ட அடக்கத்தைக் காட்டிலும், உண்மைக்குப் பயந்து உள்ளத்தில் மெய்யடக்கம் அமைத்துக்கொள்வது மேலானது. அடக்கம் ஒரு சாதனம் மட்டும் அல்ல. உண்மையில் நாமும் நம்முடைய செல்வமோ அறிவோ மற்ற பாக்கியமோ எம்மாத்திரம்? ஒன்றுமில்லை. அஞ்ஞானத்தினின்று விலகினேமானல் உண்மையே அடக்கத்தைத் தரும்.

ஏழை ஒருவனுடைய குமாரன், தான் பணக்காரனுடைய மகன் அல்ல, பரம ஏழை என்று அறிந்து அதற்குத் தக்கவாறு நடந்து கொள்ளுவது உண்மைக்குப் பயந்த அடக்கம். அது புத்திசாலித்தனம். வேறு விதம் நடந்து கொள்ளுவது மடமை. அதுபோலவே யாரேனும் சரி, நான் என்ன பதவியிலிருந்தாலும் என்ன ஐசுவரியம் பெற்றிருந்தாலும் அவற்றின் நிலையும் பயனும் உண்மையில் சிறிது என்பதைக் கண்டு அடக்கத்துடன் நடந்து கொள்ளுவது புத்திசாலித்தனம். உண்மையைக் கண்டு அதற்குத் தக்கபடி நடந்து கொள்ளுவது அவசியம். அவ்வளவின்றிப் பிறருடைய பாராட்டுதலுக்காக மாத்திரம் அடக்கம் காட்டிக் கொள்ளுவது உண்மை அடக்கம் அல்ல.

*

" நான் மகா நீசன், பாவி, எனக்கு வழி காட்ட வேண்டும் " என்று ஒரு சீடன் தன் குருவைக் கேட்டுக் கொண்டான். குருவுக்குத் தெரிந்தது, இவன் இன்னும் உண்மையைக் காணவில்லை, இம்மாதிரி நடந்து கொள்ளுவது சம்பிரதாயம் என்று எண்ணித்தான் இப்படிப் பேசுகிறான் என்பது. இவனுக்கு ஞானப் பிரகாசம் உண்டாக்கலாம் என்று, " சரி ! நீ போய் உன்னைவிட மதிப்பில் குறைந்த பொருள் ஏதேனும் ஒன்றைப் பார்த்துக் கொண்டுவா " என்றார் குரு.

அதற்கென்ன வென்று எண்ணிச் சீடன் வெளியே போனான். ஆனால் போய்ப் பார்த்தபோது தென்பட்ட எந்தப் பொருளும் தன்னைவிட மேலானதாகவே கண்டான்.

பரிசுத்தத்திலும் பிறருக்குப் பயன்படுவதிலும் எந்த விதத்திலும் மற்றப் பொருள்களும் ஜீவன்களும் தன்னை விட மேலானதே என்பதைக் கண்டு ஏங்கினான். எதையேனும் தன்னைவிட மதிப்புக் குறைந்ததாகக் குருவிடம் கொண்டு போய்த் தந்தால் தனக்குப் போதிய அடக்கமில்லை, தன்னைப் பெரிதாக மதித்துக் கொள்கிறான் என்று குரு எண்ணி விடுவார் என்பதாகப் பயந்தான். என்ன செய்வது என்று அவனுக்குத் தோன்றவில்லை.

மறுநாள் காலை வெளியே காட்டில் மல விசர்ஜனம் செய்யும்போது அவனுக்கு ஒரு எண்ணம் உண்டாயிற்று. " என் மலம் என்னைவிட நீசமான பொருள் என்பதில் சந்தேகமில்லை. இந்த மலத்தைக் குருவிடனிடம் கொண்டு போய் இது ' ஒன்றே என்னைவிடக் கேவலமான பொருள் ; மற்ற எல்லாம் என்னைவிட மேலான பொருள்களே ' என்று சொல்லுவேன் "—இப்படித் தீர்மானித்துக் கொண்டான். இப்படி நடந்துகொண்டால் குருவானவர் தன் அடக்கத்தை மிகவும் பாராட்டுவார் என்றும் எண்ணினான்.

அப்படியே ஒரு ஓட்டாஞ் சல்லி எடுத்துக் கொண்டு தான் கழித்திருந்த மலத்தை எடுக்கப் போனன்.

" ஹா ! ஹா ! பாவி ! என்னைத் தீண்டாதே ! " என்று ஒரு குரல் கேட்டது.

மலத்தினின்று ஒரு அசரீரி பேசிற்று. " போதும், போதும், நீ எனக்குச் செய்தது. மகா பாவியாகிய நீ என்னை மறுபடி தீண்டாதே ! நான் ஒரு காலத்தில் சுத்த மான பழமும் பண்டமுமாக இருந்தேன். தெய்வ நைவேத்தியத்திற்கும் தகுந்ததாக இருந்தேன். பார்த்தவர் கள் வாயில் ஜலம் ஊறும் குணம் பெற்றிருந்தேன். என் துரதிர்ஷ்ட வசத்தால் உன்னை அடைந்தேன். நீ என்னை உட்கொண்டாய். உன் உடலில் பிரவேசித்தபின் இந்த நிலையை அடைந்திருக்கிறேன். முன்னே என்னைக் கண்டவர்கள் என் சுவையினலும் அழகாலும் மனம் கவரப்பட்டார்கள்.

" இப்போதோ என்னைக் கண்டால் மூக்கைப் பிடித்துக் கொண்டு தூர விலகிப் போகிருர்கள். இது உன்னல் எனக்கு வந்த கதி. உன்னுடைய ஸ்பரிசத்தின் பலன் இது. ஆகா, உன் குணத்தை என்னவென்று சொல்ல ! தயவு செய்து என்னை மறுபடியும் தீண்ட வேண்டாம். தீண்டுவாயானல் இதைவிடக் கேவலமான கதி எனக்கு வந்து சேருமோ என்னவோ, தூரப்போ ! " என்றது.

அப்போது சீடனுக்குத் தன் புன்மை நன்ருக விளங் கிற்று. குருவிடம் சென்று " என்னைவிட மதிப்பற்ற பொருள் ஒன்றுமில்லை. நான் கழித்த மலம் கூட என்னை மிகவும் இகழ்கிறது " என்ருன்.

# 20. "ஒன்னரையணு பெறும்!"

நியமனம், யோகம் முதலிய அப்பியாசங்களின் பயனுகச் சில சித்திகளை அடையலாம். 'சித்தி' என்ருல் சாதரண மக்கள் செய்ய முடியாத காரியங்களைச் செய்யும் வல்லமை, பிரகிருதிக்கு மாருன அற்புத சக்திகள். இத்தகைய சித்திகளைக் கொண்டு பார்ப்பவர் வியக்கும் படியான காரியங்களைச் சில யோகிகள் செய்து காட்டுவது உண்டு. அதைப்பற்றி அவர்களுடைய சீடர்கள் பெரும் பிரசாரம் செய்வது வழக்கம்.

ஸ்ரீ ராமகிஷ்ண பகவான் இத்தகைய சித்திகளை அடையப் பார்ப்பதும் அவற்றைக் கொண்டு ஜனங்களை வியக்கும்படி செய்வதும் கூடாது என்பார்.

"அந்த ஊரில் ஒரு யோகி அற்புத சக்தி அடைந்திருக்கிருர், வந்து பாருங்கள்! என்று யாராவது ஒருவரைப் பற்றிச் சொன்ஞல் அங்கே போகாதீர்கள். அற்புதம் செய்து காட்டும் யோகிகளைத் தரிசனம் செய்து நன்மை யடையலாம் என்று எண்ணி அவர்களைப் பார்க்கப் போக வேண்டாம்!" என்பார் ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

யோகிகள் காட்டும் அற்புதங்கள் மோசம் என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொல்லவில்லை. ஆனல் அது கடவுளைக் காணும் வழியல்ல, அற்புத சக்திகளை அடைவது கடவுளை வழிபடும் முறையல்ல என்பது அவர் உபதேசம்.

"இந்த சக்திகள் பிரம்மத்தை அடையச் செய்ய வேண்டிய நேர் மார்க்கத்தில் இருக்கும் முட்புதர்களாகும். அவற்றில் சிக்கிக் கொள்ள வேண்டாம். மந்திரத்தால் வியாதியைச் சொஸ்தப்படுத்துபவர்கள், யோக சக்தியால் கோர்ட்டு வழக்குகளில் வெற்றி சம்பாதிப்பவர்கள் இத்தகைய மாந்திரிகர்கள் கிட்ட நெருங்க வேண்டாம். உண்மையான பக்தர்கள் ஆண்டவன் பாத கமலங்களைத்

தவிர வேறு எதையும் அடைய விரும்பமாட்டார்கள். பக்தி யினுலும் யோகப் பயிற்சியாலும் நியமனம் காப்பதினுலும் சில சக்திகள் உண்டாகும். ஆனல் அவை தம்பாட்டுக்கு உண்டாகும். அவற்றைச் சம்பாதிக்க வேண்டும் என்று உண்மை பத்தர்கள் விரும்பி வருந்தமாட்டார்கள்.

"சாப்பிட்டோமானல் மலம், மூத்திரம், வியர்வை உண்டாகிக் கழிப்போம். ஆனல் மலத்தை நோக்கமாக வைத்துக் கொண்டு யாரும் உண்பதில்லை. சித்திகள் அடை யலாம் என்று உண்மை பக்தர்கள் பக்தியாவது யோகமா வது செய்ய மாட்டார்கள். சித்திகள் மலத்துக்குச் சமம்."

சித்திகள் பெறுவதினல் ஆணவம் வளரும். அதனல் பக்திக்குத் தடையே யொழிய அது பகவானை அடைய சாதன மாகாது. ஆகையால் சித்திகளை யோகத்தின் மல மாக ஸ்ரீ ராமகிருஷ்ணர் பாவித்துச் சொன்னர்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொன்ன ஒரு கதை : ஒரு யோகி தன் குருவிடம் சென்று, "நான் பதினன்கு வருஷங்கள் காட்டில் தனியாக இருந்து தவம் செய்து நீரின் மேல் நடக்கும் சித்தியை அடைந்திருக்கிறேன்" என்றனும். அதைக் கேட்ட குருவானவர் அவனைப் பார்த்து, "மகனே! ஏன் இவ்வளவு வருத்தப் பட்டாய்? பதினன்கு வருஷங் களையும் வீணக்கினயே, ஒன்னரையணு கொடுத்தால் ஓடக் காரன் உன்னை நீரின்மேல் கொண்டுபோய் அக்கரை சேர்ப்பானே? நீ அடைந்த சித்தி ஒன்னரையணு மதிப்புத் தான்" என்றர்.

"சித்திகளை அடையும் ஆசையைக் கொண்டு யாரும் காலத்தைக் கழிக்கக் கூடாது. பகவான் பாதத்தை அடைய வேண்டும் என்று உண்மையான பக்தி செய்யுங்கள். அற்புதங்களைக் காட்டி மக்களை வசீகரிக்கும் யோகிகளிடம் சேர வேண்டாம்" என்பது பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் உபதேசம்.

# 21. அடிப்பாறை

பிரபஞ்சத்தின் ஒரு மிகச் சிறு பாகமே நம்முடைய ஆராய்ச்சிக்குள் அடங்கும். ஒரு வரம்புக்கு மேல் எந்த மேதாவியின் மூளையும் செல்லாது. ஆராய வேண்டிய ரகசியமும் ஆராய்ந்து அறியக் கூடிய அறிவும் அறிவு நிலையை அடைவதற்கு இருக்கும் மூலக் கருவியான நம்முடைய மனமும் எல்லாமே விடுவிக்க முடியாத புதிர்கள். ஆகவே, நாம் செய்யும் ஆராய்ச்சிகள் எல்லாம் புதிருக்குள் புதிராய்த்தான் முடியும்.

எல்லாப் பொருள்களும், உயிர்களும் உயிரற்ற பொருள்களும் சேதனங்களும், அசேதனங்களும் ஒரே மூலப் பொருளின் விகாரங்கள்.

தண்ணீரில் தோன்றும் குமிழிகளும் தண்ணீரும் ஒரே பொருள். தண்ணீரில் தோன்றித் தண்ணீரிலே மிதந்து கொஞ்சம் அசைந்து பிறகு அந்தத் தண்ணீரிலேயே குமிழிகள் மறைந்து லயித்துப் போகின்றன. அந்தக் குமிழிகள் போன்றனவே உயிர்கள். நீரைப் பரம் பொருளாகவும் ஜீவனையும் மற்ற வேறுபட்ட எல்லாப் பொருள்களையும் அந்த நீரில் தோன்றும் குமிழிகளாகவும் வைத்துக் கொள்ளலாம். அனைத்தையும் கடந்த மெய்ப் பொருள் கடவுள். அதுவே சகல உயிர்களில் தோன்றும் கருநிலன். அதிலேயே ஜீவராசிகள் அனைத்தும் லயித்து மறைந்து போகும்.

கடவுள் தனித்து நிற்கும் பொருள். சேதன உயிர்களும் அசேதனப் பொருள்களும் நீரை விட்டுத் தனித்து நிற்க முடியாத குமிழிகளைப் போன்றவை. அவை தனித்து நிற்க முடியாது.

காவேரி ஆற்றின் வெள்ளத்தைப் போன்றது மெய்ப் பொருள். காவேரியினின்று ஒரு கை ஜலம் எடுத்து இதுவே காவேரி என்று எண்ணுதல் போன்றது நம்முடைய ஆணவ மயக்கம்.

சேதனங்களின் வேதாந்த ஆராய்ச்சி யெல்லாம், உப்பினால் செய்யப்பட்ட ஒரு பொம்மை உப்புக் கடலில் மூழ்கிக் கடலின் ஆழத்தைப் பார்ப்பது போன்ற முயற்சியே யாகும். நீரில் மூழ்கியவுடன் உப்புப் பிரதிமை கரைந்து போகிறது. பிறகு அதுஎன்ன ஆராய்ச்சி செய்ய முடியும்? ஈசனை அளக்கும் ஜீவன் ஈசனில் மூழ்கியதும் ஈசனோடு ஒன்றாகப் போகிறது. பிறகு அது ஈசனின் ஆழத்தை அளப்பது எப்படி?

மனிதனுடைய தேகம் ஒரு பானை. பானைக்குள் வேகும் அரிசியும் பருப்பும் தண்ணீரும் போன்றன மனிதனுடைய மூளையும் இந்திரியங்களும். அடுப்பின்மேல் பானை கொதிக்கிறது. பானையைத் தொட்டால் சுடும்; சோற்றில் கை வைத்தால் கை வெந்து போகும். பானையிலும் சோற்றிலும் உள்ள சூடு உண்மையில் பானையுடையது மல்ல; சோற்றினுடையது மல்ல. கீழே உள்ள அடுப்பின் நெருப்பே இவற்றின் சூடாகிறது. அவ்விதமே பிரம்மம் உயிர்களுக்குள்ளும் அசேதனப் பொருள்களுக் குள்ளும் அவற்றின் குண விசேஷங்களாக உருவெடுக்கிறது. மூளையும் புலன்களும் செய்யும் வேலை யனைத்தும் பிரம்மத்தின் வேலையே. அதுவின்றி அணுவும் அசையாது.

எந்தச் சிறு பொருளைத் தீர ஆராய்ச்சி செய்யப் போனாலும் கடவுள் பேரில் மோதுகிறோம். சேலம் ஜில்லாவில் எங்கே கிணறு வெட்டினாலும் ஒரு ஆழத்துக்குமேல் பாறைதான். அந்தப் பாறையைப் போலத்தான் பிரம்மமும். எந்தச் சிறு பொருளாயினும் அடியில் வெட்ட முடியாத அந்தப் பாறை நிற்கிறது.

# 22. வருந்தி வேண்டினுல், வந்து நிற்பான்!

"மாயையினின்று மீள்வதற்கு வழி என்ன?" என்று ஒரு சீடர் ஸ்ரீ ராமகிருஷ்ணரைக் கேட்டார்.

"மீளவேண்டும் என்று உண்மையில் விரும்பினுல் ஆண்டவனே வழி காட்டுவான். விரும்புவது என்றுல் வெறும் வாய்ப் பேச்சில் அல்ல. விடுபடவேண்டும் என்கிற ஆசை மேலிட்டு உள்ளம் கரையவேண்டும். குழந்தைக் காகவும், மனைவிக்காகவும், பணத்துக்காகவும் படிக்கணக் கில் கண்ணீர் விட்டு அழுகிறோம். ஆனுல் ஆண்டவனை அடைய வேண்டுமென்று யார் அப்படி அழுகிறுர்கள்?"

"குழந்தை பொம்மைகளை வைத்துக்கொண்டு விளை யாடிக் கொண்டிருக்கும் வரையில் தாய் சமையலறையில் வேலை செய்துகொண்டுதானிருப்பாள். விளையாட்டுப் போது மாகப் போய், பொம்மைகளை எறிந்துவிட்டுக் குழந்தை கத்தி அழுகிறது. உடனே தாயார் தன் வேலையை விட்டு விட்டுக் குழந்தையண்டை ஓடுகிறுள். ஓடும் அவசரத்தில் சமையல் அறைச் சாமான்கள் உருண்டும் சிதறியும் போகும். அந்த மாதிரியே உள்ளம் உருகி அழும் பக்த னிடம் பகவதி ஓடிவருவாள்."

"இந்தக் கலிகாலத்தில் பெரும் தவம் வேண்டியதில்லை. மூன்று நாள் உண்மையாக விரும்பி, தியானித்தால் போதும்.

மக்கள் ஈசுவரியின் அருளைப் பெறுவார்கள். பொய்யல்ல. மகனே! நீ அவளை அடைய, உண்மையில் தீவிரமாக விரும்பி மூன்று நாள் அழுதுபார்! வெற்றி பெறுவாய். 'பகவதி! எனக்கு நிலையான பக்தியை அருள்வாய், ஐயங்களை விரட்டித் துரத்து. உன்னை நான் எப்போதும் மறக்காமல் பார்த்துக்கொள். என் பாவத்தைத் துடைத்து விடு!' என்று மூன்றுநாள் உள்ளம் உருகிப் பிரார்த்தனை செய்துபார். பலனை நிச்சயமாக அடைவாய். பக்தியோடு முறையிட்டால் பயனில்லாமல் போகாது. சந்தேகம் ஏன்? என்னைப் பார், பார்த்து தைரிய மடைவாயாக!'' என்று சொன்னார் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்ஸர்.

*

"அம்மா! எனக்குப் பசி வந்தவுடனே எழுப்பிவிடு'' என்கிறது குழந்தை. "குழந்தாய் பசிவந்தால் அதுவே உன்னை எழுப்பிவிடும்'' என்கிறாள் தாயார். ஆண்டவனை அடையவேண்டும் என்கிற பசி ஏற்பட்டால் யாரும் தட்டி எழுப்ப வேண்டிய தில்லை. வழியும் சொல்லிக் காட்ட வேண் டியதில்லை.

தெருக் கூத்துகளில் இதை நன்றாக எடுத்துக் காட்டு கிறார்கள். முதலில் மத்தளங்கள் அடித்துப் பேர் இரைச்சல் கிளப்பி 'கிருஷ்ணா! கிருஷ்ணா!' என்று பலமாகக் கத்திச் சிலர் பாடுவார்கள். ஆனால் கிருஷ்ண வேஷம் தரித்தவன் தன் பாட்டுக்குத் திரைக்குப்பின் ஏதோ பேசிக்கொண்டும், சாப்பிட்டுக்கொண்டும் கவனியாமல் இருப்பான். பிறகு இரைச்சல் எல்லாம் நின்றுபோய் நாரதர் வீணை மீட்டி மெல்லிய குரலில் பாடி, "கிருஷ்ணா! வா!'' என்பார். உடனே கண்ணன் துள்ளி எழுந்து அரங்க மேடையில் வந்துநிற்பான்.

வேஷமும் ஆரவாரமும் பயனில்லை. உண்மை பக்தர்களிடம்தான் ஆண்டவனுக்கு அபார அன்பு. இதைப் பாமரர்களும் உணரும்படி இந்தத் தெருக் கூத்து முறை நன்ருக எடுத்துக் காட்டுகிறது.

"பகவானே! ஆண்டவனே!" என்று வாயினுல் சொல்லும் பிரார்த்தனை செல்லாது. உள்ளம் கரைந்தால் பேச்சு அடங்கிப்போம். உண்மையாக பக்தன் அழும் போது ஈசுவரி கவனியாமல் இருக்கமுடியாது. ஓடிவந்து நின்று அருள் புரிவாள்.

# 23. பொன்ஞசாரியின் மனைவி

ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் இருந்து வந்த சீடர் ஒருவருக்கு சர்க்கார் உத்தியோகம் ஆயிற்று. சம்பளம் பெற்றுக்கொண்டு வேலை செய்வது சரியா, என்கிற கேள்வி பிறந்தது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொன்னதாவது :

"அப்பனே, உன் தாயாரைச் சம்ரக்ஷிப்பதற்காக நீ உத்தியோகம் ஒப்புக் கொண்டாய். நீ செய்தது சரியே ஆகும். இந்த அவசியம் இல்லாதிருந்தால் இது பெரும் தவரு யிருக்கும். வேலை ஒப்புக்கொண்டு பகவானுடைய பணி செய்து வா" என்ருர்.

பணமும் அதிகாரமும் சம்பாதித்தவர்கள் அவற்றைப் பற்றி அகம்பாவம் அடைந்து விடுகிருர்கள். சமுதாயத்தில் எல்லோரும் அவர்களை மிக மதிக்கிருர்கள். ஆனுல் இவை யெல்லாம் எத்தனை நாள்? உலகத்தை விட்டுப் போகும் போது இவற்றில் எதுவும் கூட வராது. பணத்தைப் பற்றி ஒருவன் பெருமைப் படுவதற்கு என்ன இருக்கிறது? நான் பணக்காரன் என்று ஒருவன் எண்ணுகிருன். எத்தனையோ பேர் அவனை விட அதிகப் பணக்காரர்கள் இருக்கிருர்கள் என்பதை அவன் மறந்து விடுகிருன். அவர்கள் முன் இவன் ஒரு பிச்சைக்காரன்தான்.

இருட்டினதும் மின்மினிப் பூச்சிகள் கிளம்புகின்றன. அந்தப் பூச்சிகள் நினைக்கலாம் : 'ஆகா, நாம் உலகத்துக் கெல்லாம் ஒளி வீசுகிருேம். நமக்குச் சமானம் யார்?' என்று. பிறகு கொஞ்ச நேரம் கழிந்ததும் ஆகாயத்தில் நட்சத்திரங்கள் பிரகாசிக்க ஆரம்பிக்கின்றன. அதைக் கண்டதும் மின்மினிப் பூச்சிக்குக் கொஞ்சம் அடக்கம் ஏற்படுகிறது.

'ஓகோ! எங்களைவிட அதோ ஆகாயத்தி லிருக்கும் அந்த விண்மீன்கள் மிகப் பிரகாசமாக இருக்கின்றனவே? நம்முடைய பெருமையைப் பற்றி இனி அடக்கம் கொள்ள வேண்டும்' என்று எண்ணுகின்றன. பிறகு சந்திரன் பூரண வட்டமாக உதயமாகிருன். அட, அடா! என்று நட்சத்திரங்கள் வாடி ஒளி மங்கிப் போகின்றன. சந்திரன் மிகப் பெருமையோடு பிரகாசிக்கிருன். 'எனக்குச் சமானம் யார்? பூமி யெல்லாம் நிலா நிரம்பிப் பிரகாசிக்கச் செய்கிறேன்' என்றெல்லாம் நினைத்து, திங்கள் கர்வம் கொள்கிறது.

திடீர் என்று கிழக்கில் வானம் வெளுக்கிறது; சூரியன் கிளம்புகிருன். சந்திரன் இப்போது எங்கே? "பணக்காரர்களே, இவற்றை யெல்லாம் பார்த்து அடக்கம் பெறுங்கள்" என்கிருர் ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

*

பாலத்தின் கீழே தண்ணீர் ஓடுகிறது; தேங்கித் துர்நாற்றம் அடிப்பதில்லை. அதைப்போல் பணத்தைக் கையாளுங்கள். பணத்தைத் தேக்கி அசுத்தமடைந்து நாற்றம் எடுக்க விடாதீர்கள். தாராளமாக ஓட விட்டு நலன் செய்யுங்கள். பணத்தை உங்கள் சேவகனை அமைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் அதன் அடிமையாகி விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

பொன்ஞசாரியின் மனைவியைப் பாருங்கள்! ஒரு கையால் உரலுக்குள் நெல்லைத் தள்ளிக்கொண்டிருக்கிருள். மற்ருெரு கையைக் கொண்டு குழந்தையை மடியில் வைத்துத் தட்டிக்கொண் டிருக்கிருள். கூடவே அவல் வாங்க வந்தவனிடம் பேரமும் பேசிக்கொண்டிருக்கிருள். இப்படிப் பல விஷயங்களில் கவனம் செலுத்திக் கொண் டிருந்தும் உரலில் தன் கை விரல்கள் சிக்கிக் கொள்ளா

மலும் பார்த்துக் கொள்ளுகிருள்! அதைப்போல் உலக வாழ்க்கையில் இருந்தாலும் நெறி தவருமல் ஆண்டவனை எப்போதும் நினைவில் வைத்துக்கொண்டே எல்லாக் காரியங்களும் செய்யுங்கள்!

கம்பத்தைப் பிடித்துக் கொண்டு பையன் கிரு கிரு வென்று சுழன்று சுற்றுகிருன். எத்தனை வேகமாகச் சுழன்ருலும் கம்பத்தைப் பத்திரமாகப் பிடித்துக்கொண்டு சுழல்கிருன். அதைப்போல் பகவானைப் பத்திரமாகப் பிடித்துக் கொண்டு உலக வாழ்க்கையில் சுழலுங்கள்.

கிராமத்தில் பெண்கள் தலைமேல் தண்ணீர்க் குடம் வைத்துக்கொண்டு செல்வதைப் பாருங்கள். பெரிய குடத்துக்கு மேல் சின்னக் குடம், அதற்கு மேல் அதை விடச் சிறிய பாத்திரம். எல்லாவற்றிலும் ஜலம் நிறைந்திருந்தாலும் ஒரு சொட்டு நீர் கீழே சிந்தாமல் நடந்து போகிருர்கள். வழியில் குடும்ப யோக க்ஷேம மெல்லாம் பேசிக்கொண்டும் போகிருர்கள். இப்படியே நீங்கள் உலகத்தில் வாழ்க்கை நடத்த வேண்டும். எந்தச் சந்தர்ப்பத்திலும் நெறி தவறிய காரியம் செய்யக் கூடாது.

எல்லாம் ஆண்டவனுக்காகச் செய்கிறேன் என்று மனதை நிலையில் நிறுத்தி எல்லாக் காரியங்களையும் செய்தால் தவறு ஏற்படாது. இதுவே கர்ம யோகம். இதுவே பக்தி யோகமும் ஆகும்.

பலாப் பழம் அறுக்கும்போது கைக்கு எண்ணெய் தடவிக்கொண்டு பிறகு அறுக்கிறோம். அப்படிச் செய்தால் பலாப் பிசின் கையில் ஒட்டாமலிருக்கும். பழம் சரியாக அறுத்துச் சுளை எடுக்க முடியும். அவ்வாறே பகவானிடம் பக்தி செய்து மனதை ஸ்திரப் படுத்திக் கொண்டே உலக வாழ்க்கை நடத்த வேண்டும். அப்படிச் செய்தால் எவ்வளவு பணமும் சுகங்களும் கண்டாலும் உலகப் பற்ருகிய பிசின் ஒட்டாது. கஷ்டங்கள் ஏற்பட்டாலும் மனம் உடையாது.

# 24. "மாடுகள் அசை போடுவதுபோல்"

பசுவானது பால் தருகிறது. இந்தப் பால் பசுவின் உடலில் ஓடும் ரத்தத்தில் கலந்து, அதன் உடல் முழுவதுமே இருக்கிறது. ஆயினும் பசுவின் காதைப் பிழிந்தால் பால் வருமா? வராது. பசுவின் மடியில்தான் பால் சுரக்கும். உலகமெல்லாம் கடவுள் மயம் என்பது உண்மை. ஆயினும் பசுவின் உடலில் பால் சுரக்கும் மடியைப் போன்றது, புண்ணிய க்ஷேத்திரங்களின் மகிமை. அங்கே பக்தர்கள் சென்று, அந்த ஸ்தலங்களில் சுரக்கும் பக்தியைப் பெற்று, பகவானை அடைகிறார்கள். தலைமுறை தலைமுறையாகப் பல பக்தர்கள் தவமும் தியானமும் செய்த அந்த ஸ்தலங்களில் ஆண்டவன் தன் தரிசனத்தை எளிதில் தருகிறான். எண்ணற்ற பக்தர்களுடைய தவம், ஜபம், தியானம், பூஜை, பிரார்த்தனை இவற்றின் புகை அங்கே படிந்து நிற்கிறது. அது அவ்விடம் பக்தியுடன் செல்லும் மக்களின் உணர்ச்சியைத் தன் மயமாக்கும். பக்தர்களின் கால் தூசி பட்டாலுமே போதும் என்று சொல்வது இதுதான். கோடிக் கணக்கான பக்தர்கள்—படித்தவர்கள், படிப்பில்லாத பாமரர்கள்—விழுந்து புரண்டு வழிபட்ட இடங்களுக்குத் தனியொரு சக்தி உண்டு. உலக வாழ்க்கையையும், ஆசைகளையும் நீக்கி உள்ளம் உருகி ஆடியும் பாடியும் புனிதமாக்கிய ஸ்தலங்களுக்கு நாமும் சென்று நம் உள்ளத்தை ஆண்டவன் பாதங்களில் சமர்ப்பித்தால் நம்முடைய கல் மனமும் உருகும். ஆனபடியால் அத்தகைய இடங்களில் எங்கும் பரவி நிற்கும் ஈசனை எளிதில் காணலாம்.

பூமியை எங்கேயும் தோண்டி ஜலம் எடுக்கலாம். ஆனால் சில இடங்களில் ஏற்கெனவே கிணறும் குளமும்

ஏரியும் தயாராக இருக்கின்றன. அவற்றை நாம் அடைந்து சுலபமாகத் தாகம் தணித்துக் கொள்ளலாம் அல்லவா?— அப்படியே கோயில்களும் க்ஷேத்திரங்களும், தீர்த்தங் களும். பக்தி தாகத்தை அவ்விடங்களில் சிரம மில்லாமல் தீர்த்துக் கொள்ளலாம்.

*

க்ஷேத்திரங்களைச் சரியான முறையில் பயன் படுத்திக் கொள்ளவேண்டும். மாடுகள் வயிறு நிறையப் புல் மேய்ந்து விட்டு ஒரு இடத்தில் படுத்து அசை போடுவது போல், புண்ணிய ஸ்தலங்களுக்குப் போய் பூஜை முதலியவை செய்தான பிறகு ஸ்தல மகிமையின் பயனுக அடைந்த புனித எண்ணங்களை நாம் அசைபோட வேண்டும்.

யாத்திரை முடிந்ததும் கடமை தீர்ந்து விட்டது என்று எண்ணிப் பக்தியையும் புனித எண்ணங்களையும் அங் கேயே விட்டு விடாமல், தனிமையான இடத்தைத் தேடி உட்கார்ந்து, தியானத்தில் மனதைச் செலுத்தி அடைந்த பக்தியை ஊர்ஜிதப் படுத்திக் கொள்ள வேண்டும். இல்லா விட்டால் அடைந்த பயனைச் சீக்கிரத்தில் இழந்து விடுவோம்.

*

புண்ணிய ஸ்தலங்களுக்குப் போவதில் மட்டும் அல்லது அங்கே குடியிருப்பதில் மட்டும் பயன் அடைய முடியாது. உள்ளத்தின் நிலைமையே முக்கியம். உள்ளத் தில் பக்தி இருந்தாலொழிய ஸ்தல விசேஷத்தின் பயனை அடைய மாட்டோம். உள்ளத்தில் பக்தி யிருந்தால் புண்ணிய ஸ்தலங்களில் அதை விருத்தி செய்து கொள்ள லாம். அந்த பக்தி ஜவேஜு உள்ளத்தில் இல்லாத பட்சத்

தில் எந்த க்ஷேத்திரத்துக்குப் போவதிலும் ஒன்றும் பிரயோஜனமில்லை.

வீட்டில் சண்டை பிடித்துக் கொண்டு பையன் காசிக்கோ, வேறு புண்ணிய ஸ்தலத்துக்கோ ஓடிப்போக லாம். அங்கே வேலையில் அமர்ந்து பணம் சம்பாதிக்கலாம். பிறகு தாய் தகப்பனுக்கும் கொஞ்சம் அனுப்பலாம். ஆனால் இது வேறு, பக்தி சம்பாதிப்பது வேறு.

ஒரு சமயம் ஸ்ரீ ராமகிருஷ்ணர் வேடிக்கையாகச் சொன்னார்: "நானும் மதுராநாதரும் மேற்கே ஒரு புண்ணிய ஸ்தலத்துக்குப் போனோம். அங்கே மாமரங் களும் மூங்கில் புதர்களும் நம்முடைய ஊரில் இருப்பது போலவே தான் இருந்தன. வித்தியாசம் ஒன்றும் நான் காணவில்லை. ஆனால் ஒரு விசேஷம். இந்தப் புண்ணிய ஸ்தலங்களில் குடியிருக்கும் ஜனங்களுக்கு நல்ல ஜீரண சக்தி. எவ்வளவு சாப்பிட்டாலும் ஜரித்துக் கொள்ளு கிறார்கள்" என்றார். பக்தி செய்யாமல் புண்ணிய ஸ்தலங் களில் இருப்பதில் ஒரு விசேஷமு மில்லை என்பதை எடுத்துக் காட்ட இப்படிச் சொன்னார்.

# 25. உய்யும் வழி

"ஜனக மகாராஜா இருக்கவில்லையா? அவரைப் போலவே நானும் உலக வாழ்க்கையிலிருந்து கொண்டே ஞானியாகலாம்" என்று சிலர் பேசுவதுண்டு. அப்படிப் பேசுபவர்கள் உலகத்தில் ஒரு ஜனகர்தான் இருந்தார் என்பதை மறந்து விடுகிறார்கள் ஜனகருக்குப் பின் அவரைப்போல் எத்தனை பேர் உலகத்தில் உண்டானார்கள்?

உலக வாழ்க்கையில் இருந்து கொண்டே பற்று இன்றிக் கடமைகளை நிறைவேற்றும் ஞானவானாக இருக்க வேண்டுமானால் கொஞ்ச காலமாவது தனியாக இருந்து தியானத்தில் அமர வேண்டும். ஒரு வருஷம் அல்லது ஆறு மாதம் அல்லது ஒரு மாதம், குறைந்த பட்சம் பன்னிரண்டு நாளாவது இதற்குச் செலவழிக்க வேண்டும். அந்தக் காலத்தில் இடைவிடாமல் பகவானை நினைவில் வைத்துக் கொண்டு அவன் அருளைப் பெற வேண்டி உள்ளத்தைச் செலுத்திப் பிரார்த்தனை செய்ய வேண்டும். உலகத்தில் உனது என்று நினைக்கும் படியான பொருள் ஏது? ஒன்றுமில்லை. இதை மனசில் ஊர்ஜிதப் படுத்திக் கொள்ள வேண்டும். உன்னுடைய பொருள் என்று எண்ணக்கூடிய ஒவ்வொன்றும், ஒரு நாள் அல்லது வேறு ஒரு நாள் அழிந்து மறைந்து போகும் என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். நமக்கு இருக்கும் உறுதியான பொருள் ஒன்றேதான். அது ஆண்டவன். நமக்குள்ள அழியாத பொருள் அவன் ஒருவனே. அனைத்துக்கும் கடவுள் ஒன்றே ஆதரவு. அவனே அனைத்தும். தியானம் செய்து பகவானை எப்படி அடைவேன் என்று சிந்தித்துச் சிந்தித்து மனதை நிர்மலப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அவனை அடைவதே ஆசையாகவும் கவலையாகவும் வைத்துக் கொண்டு தியானம் செய். தியானம் பண்ணும் காலத்தில் தியானத்தையும் பக்தியையும் பரிகசிப்பவர் களுடன் சேராமல் இருக்க வேண்டும். பக்தி செய்வதை இகழ்வோர்களுடைய கூட்டுறவு வைத்துக் கொள்ள வேண் டாம். பக்தர்களை அவமதிப்பவர்கள் அல்லது பரிகாசம் செய்பவர்கள்,—இவர்களுடைய சகவாசத்தை நீக்க வேண்டும்.

*

உள்ளம் நிலை தவறிப் போகும்படியான சந்தர்ப்பங் களில் ஜகன்மாதாவை வேண்டிக்கொள். அவள் உன்னைக் காப்பாற்றுவாள். உள்ளத்துக்குள்ளே மறைந்து நிற்கும் பாபங்களினின்று அவள் உன்னைத் தப்புவிப்பாள்.

பக்கத்தில் ஈசுவரி நிற்கிருள் என்பதை அடிக்கடி நினைவுக்குத் தந்துகொள். அப்படிச் செய்தால் பாப எண்ணங்களினின்றும் பாப காரியங்களினின்றும் வெட்கப் பட்டு விலகுவாய். தியானம் செய்து அருள் பெற்றவன் எந்தப் பதவியிலிருப்பினும் எந்தக் கஷ்டம் அல்லது சுகபோகம் நேரிடினும் கலக்கமின்றி நேர்மையான வழியில் நடந்து கொள்ளுவான். தன் கடமைகளை அடக்கத்துட னும் சாதுர்யத்துடனும் செய்து தீர்ப்பான். தெய்வபக்தி யும் மக்களிடம் அன்பும் காரியங்களில் நேர்மையும் அவ னிடம் பார்க்கலாம். லௌகிக சாதுர்யத்தில் மற்றவர்களை விட அவன் எந்த விதத்திலும் குறைவாயிருக்க மாட்டான். எல்லாக் காரியங்களையும் ஒழுங்காகச் செய்வான். கல்வி கற்றவர்கள் மத்தியில் அவனும் கற்றவனுகவே இருப்பான். வாதப் பிரதிவாதம் செய்வதில் மற்றவர்களைப் போலவே அவனும் நன்ருகச் செய்வான். தாய் தகப்பன்மார்களிடத் தில் அடக்கத்துடனும் அன்புடனும் ஒரு குறையுமின்றி

நடந்து கொள்வான். நண்பர்களிடத்திலும் தன் சுற்றத் தார்களிடத்திலும் மிகப் பிரியமாக இருப்பான். பேச்சு, இனிமையாகப் பேசுவான். உபகார சுபாவத்துடன் நடந்து கொண்டு எல்லோருடைய மதிப்பையும் அன்பையும் பெறு வான். மனைவிக்குப் பிரீதியே உருவெடுத்தாற் போன்ற கணவனுவான். இத்தகைய மனிதனே இல்லறத்தில் இருந்துகொண்டு உலக வாழ்க்கை நடத்தி வந்தாலும் ஞானம் அடைந்தவன் என்று சொல்லப்படுவான்.

பகவான் ராமகிருஷ்ணருடைய உபதேசங்கள் வெறும் சாஸ்திரம் அன்று. தன் அனுபவத்தில் சரி என்று கண்டு அனைவரும் அனுஷ்டிக்கத் தகுந்த வழி என்று அவர் ஆராய்ந்து அறிந்து சொல்லும் உண்மை. தேவி பக்கத் திலே நிற்கிருள், அவளைச் சரண்புகு, எல்லாம் அடைவாய், உன்னைப் பாபத்திலிருந்து காப்பாள்,—என்று அவர் அனுப வத்தில் கண்டு நமக்கும் சொல்கிருர். அதை உணர்ந்து நாம் நடந்து கொண்டால், நாமும் உய்வோம்; நாடும் செழிக்கும்.

# 26. பெற்ற தாய்

சுயசரிதங்கள் எல்லாருமே எழுதுகிறுர்கள். ஆனல் நல்ல விஷயங்களை மட்டும் பொறுக்கி எழுதிவிட்டு ஆகாத விஷயங்களைச் சரிப்படுத்தியும் மறைத்துவிட்டும் எழுது கிருர்கள். உண்மையை முற்றிலும் எழுத ஆரம்பித்தால் எத்தனை மகா பாபச் செயல்களைச் செய்ய எண்ணினேம், அதை பகவான் எப்படியோ தடுத்து நம்மைப் பாபத்தி னின்று தப்புவித்தான் என்பதை எல்லோருடைய வாழ்க் கைச் சரித்திரத்திலும் காணலாம்.

ஆண்டவன் பேரருளால் பாபங்களினின்று தப்பு கிறேம். அவன் அருள் இல்லாவிட்டால் மிகப் புகழும் பேரும் பெற்ற பெரியோர்களுடைய கதியும் அதோகதியாகி யிருக்கும்.

அவன் அருள் இருந்தால்தான் மீள்வோம் என்பது உண்மையாயினும், நாமும் எத்தனமின்றிச் சும்மா இருக்கக் கூடாது. அருள் என்பது கடற் காற்றைப்போல். காற்று வீசிக்கொண்டே யிருக்கிறது. ஆயினும் அந்தக் காற்றைப் பயன்படுத்துவதற்காகப் படகுக்காரர்கள் பாய் விரித்தாலன்றிப் படகு செல்லாது. நம்முடைய உள்ளங் களாகிய பாய்களைச் சரியாக விரித்து, வீசுகின்ற அவன் அருளைப் பயன்படுத்திக் கொள்வோமாக.

*

உலக வாழ்க்கையில் நாம் செய்ய வேண்டியதாக ஏற்படும் வேலைகளில் ஒரு வேலை உயர்ந்தது ஒரு வேலை தாழ்ந்தது என்றில்லை. எந்த வேலையும் ஒன்றே, வித்தியாச மில்லை.

எந்தக் காரியத்தையும் ஆண்டவனை மனதில் நிறுத்திக் கொண்டு பக்தியுடன் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் அவன் அருள் பாயில் தங்கி நம்முடைய படகைச் செலுத்தும். எடுத்த காரியத்திற்கு வேண்டிய சாதனங் களும் சூழ் நிலையும் அவன் அருளால் ஏற்படும்.

"எத்தனை ஆண்டுகளோ இருள் மூடியிருந்த ஒரு வீட்டில் விளக்கு ஏற்றினதும் உடனே இருள் நீங்கி ஒளி உண்டாகிறது. அதைப் போலவே ஆண்டவனுடைய அருள் விளக்கு ஏற்றினதும் எத்தனையோ ஜன்மங்களின் பாவங்களும் உன்னை விட்டு விலகி, பக்தி ஒளி வீச ஆரம்பிக்கும்."

"சுவாமி! நீங்கள் ஆண்டவன் தரிசனத்தைப் பெற்றீர் என்று எல்லோரும் சொல்லுகிறார்களே, எங்க ளுக்கும் அவ்வாறு ஆண்டவன் தரிசனம் கிடைக்கச் செய்யுங்கள்" என்று சில சம்சாரிகள் ஒரு நாள் ஸ்ரீராம கிருஷ்ணரைக் கேட்டார்கள்.

"ஆண்டவன் அருள் இருந்தால், உங்களுக்கு அவன் தரிசனம் கிடைக்கும். ஆனால் நீங்களும் முயற்சி செய்ய வேண்டும். பால் கறந்து, தயிர் ஆக்கி, வெண்ணெய் கடைந்து உங்கள் வாயில் ஊட்டச் சொல்லுகிறீர்களோ?" என்றார் பகவான் சிரித்துக் கொண்டு.

*

காற்று வீசும்போது விசிறி வேண்டியதில்லை. காற்று வீசாதிருந்தால் விசிறிக் கொள்ள வேண்டும். ஆண்டவன் அருள் உண்டானால் நம்முடைய முயற்சிகள் எல்லாம் நிறுத்தி விடலாம். அப்போது பிரார்த்தனையும் வேண்டாம், ஜபமும் வேண்டாம். தியானமும் தவமும் வேண்டாம். அவன் அருள் ஒன்றே போதும். காற்று வீசாத வரையில் விசிறியை எடுத்து விசிறிக் கொள்ள வேண்டியது அவசியம்.

'நான்' 'எனது' என்று எண்ணும் வரையில் அவன் அருள் வீசுவதற்குத் தடை. உன்னை நீ மதிக்கும் வரையில் அவன் தூரவே நிற்பான். ஆண்டவன் ஒருவனே எல்லாம் நடத்துகிருன் என்று மனதினின்று ஆணவத்தை முற்றிலும் அப்புறப்படுத்திஞல் அவன் அருளுக்கு ஓடத்தின் பாயை விரித்த மாதிரியாகும். ஆணவம் நிறைந்து கிடந்தால் அருள் காற்றுக்கு இடமில்லை.

✶

குழந்தையின் சுபாவம், தன் மேல் மண்ணும் குப்பையும் பூசிக் கொள்ளும். தாயின் மகிழ்ச்சி அந்த அழுக்கைத் தேய்த்து அலம்பி நன்ருகச் சுத்தப்படுத்தித் தன் குழந்தையின் அழகு முகத்தைப் பார்த்துக் களிப்படைவது. இவ்வாறே மக்கள் தவறு செய்வது அவர்களுடைய சுபாவமாஞலும் ஈசுவரி, அந்த அழுக்கைத் துடைப்பாள். நாம் அவளுடைய அருமைக் குழந்தைகள். பயப்பட வேண்டாம். தாயைத் தாயென்று உணர்ந்து அன்பு செய்யுங்கள். பாவங்கள் எல்லாம் இருந்தவிடம் தெரியாமல் தொலைந்து போகும்.

மகனே ! தாயை ஏமாற்றப் பார்க்காதே ! அன்பு செய். ஈசுவரிக்குத் 'தாய்' என்பது ஒரு பெயர் மட்டுமல்ல. உன்னைப் பெற்றது யார் என்று எண்ணுகிருய் ? அவள் தானே ? பெற்ற • தாயை எவ்விதம் அன்பு செய்து வருகிருயோ அவ்விதம் உன்னையும் அனைத்தையும் பெற்ற ஈசுவரியை அன்பு செய். அதன் பயனை உடனே பார்ப்பாய். உன் உடல், உன் மனம் அனைத்தும் ஒளி பெற்று விளங்கும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். தாயின் மடியில் உட்கார்ந்து தாயின் முகத்தைப் பார்த்துச் சிரிக்கும் குழந்தை போல் சுகமும் ஆனந்தமும் பெறுவாய்!

# 27. பக்தன்

ஆயிரம் ஆண்டு தண்ணீரில் கிடந்தாலும் வெளிச்சக் கல்லில் உள்ள நெருப்பு அணைந்து போகாது. எஃகாணி தாக்கினதும் அதிலிருந்து பொறி கிளம்பும். பல்லாயிர வருஷம் நீரில் அமிழ்ந்து கிடந்தாலும் உள்ளே மறைந்து நிற்கும் அக்னியின் வேகம் கொஞ்சமும் சேதப்படாமல் வெளியாகிறது. நல்ல பக்தனுடைய பக்தியும் இத்தகையதே. உலகத்திலுள்ள அழுக்கு அவனுடைய உறுதியான பக்தியைப் பழுது படுத்தாது. என்ன துன்பம் நேரிடினும் அவனுடைய நிலை மாறாது. ஆண்டவனிடம் அவனுக்குள்ள அன்பு வெளிச்சக் கல்லின் நெருப்புபோல் ஒரு அழியாத பொருள். எஃகு பட்டதும் கல்லினின்று தீப்பொறி பறப்பதுபோல், ஆண்டவனுடைய நாமம் கேட்டதும் அவன் உள்ளத்தினின்று பக்தித் தீப்பொறி பறக்கிறது.

துன்பமும் பழியும் வந்து பக்தனைத் தாக்கும். ஆனால் உரை கல்லில்தங்கத்தைத் தேய்ப்பதுபோல் அதுவெல்லாம் பரீக்ஷையேயன்றி துன்பமல்ல. பக்தனுடைய பக்தி அந்தச் சோதனைகளில் எல்லாம் வெற்றிபெற்று உறுதியடையும்.

புலன்களின் வழியால் அடையும் போகங்களின் மோகத்தை ஒருவன் எப்படித் தப்புவது? ஆண்டவன் நினைவிலும் தியானத்திலும் ஆனந்தம் கண்டு வழக்கப்படுத்திக் கொண்டால், புலன்களின் அபாயம் ஒழியும். சிற்றின்பத்தின் வலையினின்று தப்பவேண்டுமானால், பகவத் தியானத்தில் மகிழ்ச்சி காணப் பயிலுவதே வழி. பெரு மகிழ்ச்சி கண்டதும் சிறு மகிழ்ச்சியின் சக்தி குறைந்து போகும். ஆண்டவனை நுகர்ந்து ருசிகண்ட பக்தன், க்ஷண மாத்திரம் ஆரம்பத்தில் சுகம் தந்து பின்பு துன்பமாக

முடியும் புலன் நுகர்ச்சி இன்பங்களைத் தேடி அலைய மாட்டான். அலைச்சலைத் தவிர அவற்றில் உண்மைச் சுகமில்லை என்பதை அறிந்தபின் தன்னைத் தானே ஒருவன் துன்பப் படுத்திக் கொள்ளமாட்டான். கற்கண்டை அறிந்தவன் குப்பையும் மண்ணும் நிறைந்த கருப்புக்கட்டியை மதிக்க மாட்டான். அரண்மனையில் கட்டிலில் படுத்துத் தூங்கிய பின் அழுக்கு நிறைந்த சேரிக் குடிசையைத் தேடி ஒருவன் மண்ணில் படுத்துத் தூங்குவானா? கடவுளைக் குறித்து ஆனந்தம் கண்ட பக்தன் கள்ளுக்கு ஆசைப்பட மாட்டான்.

*

சிற்றின்ப எண்ணங்களை உண்டாக்கும் சந்தர்ப்பம் ஏதேனும் நேரிட்டால், உடனே உள்ளத்தை ஆண்டவன் பால் செலுத்து. இதைப் பழக்கப் படுத்திக் கொண்டால் எல்லா அபாயமும் தாண்டிப் போகலாம். எங்கேயும் ஈசுவரி உன்பக்கத்தில் நிற்கிறாள் என்பதை நினைவில் வைத்துக் கொள். தனியான இடத்தில் யாரும் உன்னைப் பார்க்காத சந்தர்ப்பத்திலும் அவள் உன்பக்கத்திலேயே நிற்கிறாள். இதை உணர்ந்துவிட்ட பக்தனுக்கு அபாயம் ஏது? எந்தப் பண முடிப்பும் எந்தப் பெண்ணழகும் அவனுக்கு ஆபத்தாகாது.

புகழுக்காகப் பக்தியும் பூஜையும் செய்பவனுடைய பக்தியும் பூஜையும் உண்மை பக்தியல்ல; உண்மைப் பூஜையும் அல்ல. மௌனமும் தனிமையுமான பக்தியே பக்தி. ஆரவாரமும் ஆகுலமும் கூடிய பகவதாராதனம் எல்லாம் பயனற்ற வேஷமாகும்.

மலையருவியானது பாறைகளிடையில் குதித்து ஓடி, பிறகு கம்பீர நதியாக அகன்று செல்கிறது. பக்தன் இதயமும் அவ்வாறே. துன்பமும், தடையும், ஐயமும் தாண்டிப்

பிறகு உறுதிநிலை அடைகிறது. அவ்வப்போது நேரிடும் கவலையும் கலக்கமும் எளிதில் தீர்ந்துபோய்ச் சமநிலை அடைகிறது. பக்தனுடைய நெஞ்சில் உண்டாகும் கலக்கங்கள் க்ஷண மாத்திரமே துன்பம் உண்டாக்கும். உடனே பக்தி நிலையின் ஆனந்தத்தில் அவை கரைந்துபோகும்.

*

பக்தன் பகவானுடைய குழந்தை. அவன் கண்களில் வடியும் கண்ணீரே அவன் பலம். ஹரியின் பெயர்களில் ஒன்றைக் கேட்ட மாத்திரத்தில் மயிர்க் கூச்சு எடுப்பதும் கண்களில் நீர்வடிவதும் பக்தனுக்கு அடையாளம். அக் குறிகள் உண்டானால் ‘இதுவே உன் கடைசிப் பிறப்பு, சம்சாரத்தினின்று மோக்ஷம் அடுத்தாற்போல் இருக்கிறது’ என்பதை அறிவாய்.

# 28. இன்னும் ஏன் பொய்யும் திருட்டும்?

விடுதலை யடைந்து விட்டோம்; நம்முடைய நாடு குடியரசு நாடாகி விட்டது. உலகத்தில் பெரும் கௌரவ ஸ்தானம் நம் தேசம் பெற்று விட்டது. நம்முடைய தலைவரை உலகப் பெரியோர்கள் அனைவரும் மிகப் பெரியவ ராகப் புகழ்ந்தும் வணங்கியும் வருகிறார்கள். இப்படி யெல்லா மிருந்தும், ஏன் நாம் இன்னும் பிச்சைக்காரர் களாகவும் மோசக்காரர்களாகவும் நடந்து கொள்ளுகிறோம்?

பொய்யும் மோசமும் வாழும் வழி என்று ஏன் நாம் எண்ணுகிறோம்? எச்சில் சோற்றைத் தேடித் திரியும் நீசர் களைப் போல் ஏன் நடந்து கொள்ளுகிறோம்? நம் பாரத தேவியின் பெரும் பதவியை நாம் அறியாமல் அநியாய மாக நம்மை நாம் ஏன் தாழ்த்திக் கொள்ளுகிறோம்?

இவ்வாறு வருந்தி ஆராயும் தேசபக்தர்களுக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர் அந்தக் காலத்தில் சொன்ன ஒரு கதையை எடுத்துச் சொல்லலாம்.

*

ஒருநாள் காட்டில் மேய்ந்துகொண்டிருந்த ஒரு ஆட்டு மந்தையைப் புலி ஒன்று தாக்கிற்று. புலி வயிற்றில் குட்டி யிருந்தது. முதிர்ந்த பிரசவப் பருவம். தாக்கின வேகத் தினால் அவ்விடமே குட்டி போட்டுவிட்டுத் தாய்ப் புலி உயிர் நீத்தது.

குட்டி பிழைத்து, ஆட்டு மந்தையிலேயே வளர்ந்து வந்தது. ஆடுகளோடு ஆடாகப் புல் மேய்ந்து தன்னு

டைய சுய சொரூபம் தனக்குத் தெரியாமல் வளர்ந்து வந்தது. ஆட்டுச் சுபாவத்தையே புலிக் குட்டியும் அடைந்து விட்டது.

சில ஆண்டுகள் கழிந்தன. அந்த ஆட்டு மந்தையை வேருெரு புலி ஒரு நாள் தாக்கிற்று. ஆடுகள் சிதறி ஓடின. அப்போது புலிக் குட்டியும் ஆடுகளைப் போலவே ஓடிற்று. தாக்கிய புலி தன் இனத்தைச் சேர்ந்த இந்தக் குட்டியைப் பார்த்து, இது எப்படி இங்கே வந்து சேர்ந்தது என்று வியந்து துரத்திப்போய் அதன் கழுத்தைக் கவ்விப் பிடித்தது. புலிக் குட்டி 'பா, பா' என்று ஆட்டுக் குட்டியைப் போல் கத்த ஆரம்பித்தது. கிழப் புலி அந்த ஆட்டுப் புலிக் குட்டியை ஒரு தண்ணீர் குட்டையண்டை இழுத்துப் போய்த் தண்ணீரில் அதன் பிம்பத்தைக் காட்டி "ஏ, மூடக் குழந்தாய்! நீயும் நானும் ஓர் இனம். அதோ பார், என்னைப் போலவே நீயும் இருக்கிருய். ஏன் ஆட்டைப் போல பயந்து ஓடுகிருய்? நீயும் என்னைப் போல் ஒரு புலிதான். பயப்படாதே!" என்றது. இப்படிச் சொல்லி ஆட்டிறைச்சித் துண்டை அதன் வாயில் போட்டு "தின்னு! தின்னு!" என்றது. முதலில் குட்டி தின்ன வில்லை. 'பா, பா' என்று கத்திக் கொண்டு வெறுப்புடன் இறைச்சியைத் தின்ன மறுத்தது. கொஞ்ச நேரத்திற்குள் நாக்கில் பட்ட இறைச்சியின் ருசி ஏறிவிட்டது. புலிச் சுபாவம் மேலிட ஆரம்பித்தது. இறைச்சித் துண்டைத் தின்றுவிட்டது. இன்னும் வேண்டு மென்றும் கேட்டது. அவ்வளவு நாள் மறைந்திருந்த புலிச் சுபாவம் மிக வேகத் தோடு கிளம்ப ஆரம்பித்தது.

"நீ யார் என்பதை இப்போது தெரிந்து கொண் டாயோ? வா, என்கூட. ஆட்டு மந்தையில் இனி உனக்கு வேலை யில்லை" என்றது பெரும் புலி.

பழைய அடிமை வாழ்க்கையின் குண விசேஷங்களை 'சீ' என்று நீக்கிக் கொண்டு, சீக்கிரம் நமக்குரிய கௌரவத்தை அடைவோமாக. வறுமையல்ல துன்பம். சிறுமையே துன்பம். வறுமையிலும் பெருமையுடன் வாழலாம். அயோக்கியம் வேண்டாம். நம் பாரத தேவியின் புது கௌரவ நிலையைக் காப்பாற்றுவோமாக. திருட்டு, பொய், முதலிய பயங்கொள்ளி நீச சுபாவங்கள் வேண்டாம்.

# 29. பிரார்த்தனே

‘ இது வேண்டும் ; அது வேண்டாம் ’ என்று ஆண்டவனேக் கேட்காதே. ‘ எல்லாம் உன் இஷ்டப்படி ’ என்று அவனுக்கு விட்டுவிடு. இவ்வாறு எல்லா சாஸ்திரங்களும் சொல்லியிருப்பது உண்மை. ஆயினும் மானிட ஜன்மத்தின் பண்பு இதற்கு இணங்க முடியவில்லே. தொன்று தொட்டு இதுவரையிலும் பிரார்த்தனே செய்துதான் வருகிருேம். ‘ எல்லாம் உன் அருள் ; உன் பொருள் ’ என்று வாயால் சொல்லி வந்த போதிலும், உள்ளத்தில் எண்ணியும் பிரார்த்தித்தும் வரும் முறை ‘ இதை எனக்குத் தா, அதை எனக்குச் செய் ’ என்றே நடந்து வருகிறது.

ஆண்டவனுடைய செயலும் பண்பும் நம் அறிவுக்கு எட்டாதபடியாலும், எது நன்மை, எது துன்பம் என்பதை நாம் சரியாக முற்றிலும் அறிந்துகொள்ள முடியாத படியாலும், எல்லாவற்றையும் அவனுக்கே விட்டுவிடுவது மேலான முறை. இதில் சந்தேகமில்லே. ஆனபோதிலும் சேதனம் பெற்றிருக்கும் உயிர்கள் ஒருவரோடு ஒருவர் பேசிச் சம்பாஷணே செய்வது போல் ஆண்டவனிடமும் சம்பாஷிப்பதில் குற்றம் ஒன்றுமில்லே. அதுவே இயற்கைச் செயல். உள்ளத்திலுள்ளதை ஆண்டவனிடம் சொல்லிவிடுவதில் என்ன தவறு? ஒன்றுமில்லே. புருஷனும் மனேவியும் வாய்விட்டுப் பேசிக்கொள்ளுவதுபோல் ஆண்டவனே சர்வ விஷயத்திலும் எஜமானுயினும் பிரார்த்தனே மூலம் அவனேடு தாராளமாகச் சம்பாஷிப்பதில் குற்றமில்லே. நன்மையே யாகும். தினமும் ஒரு வேளேயாவது ஈசனேடு பேசி, அழுது, விளேயாடி, சம்பாஷித்து வருவோமானுல் நம் உள்ளமும் பேச்சும் செயலும் துப்புரவு அடையும்.

பிரார்த்தனையின் பயனாக உள்ளம் அழுக்கு தீர்ந்து சுத்தி யடைகிறது என்பதில் ஐயமில்லை. அனுபவத்தில் அனை வரும் காணக்கூடிய உண்மை.

*

"பிரார்த்தனை எந்த முறையில் செய்யவேண்டும்? மனதில் மௌனமாகச் செய்யவேண்டுமா? அல்லது பிறர் கேட்கும்படி வாய்விட்டுச் செய்வதா?" என்று ஒருவர் கேட்டதற்கு பகவான் ராமகிருஷ்ணர் சொன்னார்:

"எப்படி இஷ்டமோ அப்படிச் செய்யலாம். மெள்ள அழுதாலும் அவன் காதுக்கு எட்டும். சிற்றெறும்பின் காலடிச் சத்தம்கூட ஆண்டவன் காதுக்கு எட்டும்."

"பிரார்த்தனை செய்வதனால் பயன் உண்டா?"

"மனமும் வாக்கும் ஒன்றுபட்டு உள்ளச் சுத்தியுடன் செய்யப்படும் பிரார்த்தனை கட்டாயம் பலன்தரும். வாயால் 'இவை அனைத்தும் உன் சொத்து' என்று சொல்லுவதும், அப்படிச் சொல்லும்போதே உள்ளத்தில் இவை யனைத்தும் எனது என்று எண்ணிக்கொண்டு பிரார்த்தனை செய்தால் பயன் அடைய முடியாது. பிரார்த்தனை செய்யும்போது உன்னை நீயே ஏமாற்றிக் கொள்ளாதே. ஆண்டவனிடம் பொய் சொல்லாதே. உள்ளமும் செயலும் ஒன்றாக இருக்க வேண்டும். சுத்த உள்ளத்துடனும் நல்ல சிந்தனை யுடனும் பிரார்த்தனை செய். ஆண்டவன் மறுக்கமாட்டான். உன்னிடம் மிகப் பிரியம் கொண்டவன். காலத்தில் என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்துவிட்டு ஆண்டவன் பேரில் பாரம் போட்டுவிடு. எதற்கும் கவலைப்படாதே!"

*

கடலில் திசைகாட்டும் துருவ முள்ளைச் சரியாக வைத்துக்கொண்டிருக்கும் வரையில் கப்பலுக்கு அபாய மில்லை. காந்த முள் எப்போதும் துருவத்தை நோக்கு வதைப் போல் மனம் இடைவிடாமல் ஆண்டவனை நோக்கியே நின்ருல் வாழ்க்கை என்னும் கப்பல் கரையைப் போய்ச் சேரும் ; பயமில்லை.

பாமரர்களும் மற்றவர்களும் பழைய முறையில் வழி படும் மூர்த்திகளைப் பக்தியோடு உன்ருல் வழிபட முடியாம லிருந்தாலும் கவலைப்பட வேண்டாம். "உனக்கு உருவம் உண்டோ இல்லையோ, அது எனக்குத் தெரியவில்லை. உன் சொரூபம் எனக்கு விளங்கவில்லை. நான் அறியமாட்டேன். எவ்வாருயினும் எனக்கு அருள்வாய்" என்று வேண்டிக் கொள்.

ஆண்டவன் உன்னை நிச்சயமாகக் கவனிப்பான். மகனே, அவனைப்போல் உன்னைக் கவனிப்பார் யாருமே இல்லை. நீ அவனை வேண்டிக்கொண்டதெல்லாம் அவன் கவனித்தே இருக்கிருன். உனக்கு எது நன்மை என்பதை அவனே அறிவான். ஒரு நாள் உனக்கு நிச்சயமாகத் தரிசனம் தருவான். மரணத் தறுவாயிலாவது தரிசனம் தருவான். பிரார்த்தனை செய்வதை விடாதே. கஷ்டத்தி லும் சுகத்திலும் சம்பாஷணைக்குத் தகுந்த நண்பன் அவனைப்போல் வேறு யாருமில்லை. பிரார்த்தனை என்பது சேதன உயிர்கள் ஆண்டவனேடு சம்பாஷிப்பதே யாகும். மக்கள் ஊமையாக இருக்க இயலாது. பக்தி நிறைந்த பிரார்த்தனை என்பது அந்த நியதிக்குள் அடங்கும்.

# 30. நந்தா விளக்கு

பொய்யும் புனைசுருட்டுமே பலன் தரும் என்று எண்ணி எண்ணி அதுவே வழக்கப்பட்டுப் போயிருக்கிற படியால் தருமோபதேசங்களை, ‘இதுவெல்லாம் என்ன பிரயோசனம்’ என்று தள்ளிவிடுவது உலகத்தார் வழக்கம். ஆயினும் உய்யும் வழி இது அல்ல. தருமமே சுகம், தருமமே சந்தோஷம், தருமமே சாதுரியம், தருமமே செல்வம். தருமம் கெட்டால் நாடு செழிக்காது. எல்லோரும் தரித்திரநிலை அடைவார்கள். மோசமும் பித்தலாட்டமும் சமுதாயத்தை நாசம் செய்துவிடும். சமுதாயம் கெட்டால் அனைவரும் கெடுவோம்.

சில வலைச்சிகள் சந்தைக்குப்போய் மீன் விற்றுவிட்டு ஊருக்குத் திரும்பினார்கள். அன்று சந்தையில் அதிக நேரம் இருக்க நேரிட்டபடியாலும் வழியில் மழை பிடித்துக் கொண்டபடியாலும் இருட்டுவதற்கு முன் ஊர்போய்ச்சேர முடியவில்லை. வழியில் ஒரு கிராமத்தில் பூந்தோட்டக் காரன் ஒருவன் குடிசையண்டை நின்றார்கள். தோட்டக் காரன் நல்லவன். “இரவு இங்கே தங்கி, விடிந்ததும் போங்கள்” என்றான். வலைச்சிகள் “அப்படியே, சரி” என்று தங்கினார்கள்.

இராத்திரி வலைச்சிகளுக்கு அங்கே தூக்கமே பிடிக்க வில்லை. புரண்டு புரண்டு தூங்கப் பார்த்தார்கள்.

அவர்கள் இருந்த அறையில் தோட்டக்காரன் மல்லி கைப் பூவைப் பறித்து ஒரு கூடையில் வைத்திருந்தான். மறுநாள் காலை தன்னிடம் வாடிக்கையாகப் புஷ்பம் வாங்கு பவர்கள் வீட்டுக்குக் கொண்டு போவதற்காக வைத்திருந் தான். அந்த வாசனை வலைச்சிகளுக்குப் பிடிக்கவில்லை. தூங்க • முடியவில்லை. கொஞ்ச நேரம் கழித்து அவர்

களில் ஒருத்தி எழுந்து உட்கார்ந்து, "இந்த நாற்றம் நிற்கவே மாட்டேன் என்கிறது. வரவர அதிகமாகிறது. இதற்கு என்ன செய்ய ?" என்ருள்.

பிறகு கொஞ்சம் தண்ணீர் எடுத்துத் தங்கள் மீன் கூடைகளின் மேல் தெளித்து விட்டுக் கூடைகளைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு படுத்தார்கள். வலை நாற்றம் மிஞ்சி மல்லிகை வாசனையை அடக்கி விட்டது. வலைச்சிகள் குறட்டை விட்டுத் தூங்கிப் போஞர்கள்.

*

அவரவர்கள் வழக்கம் அவரவர்களுக்குச் சுவர்க்கம். நல்ல சகவாசமும் நல்ல பழக்க வழக்கங்களும் இல்லாமற் போஞல் துன்மார்க்கமே மேன்மையாகத் தோன்றும். அதுதான் லௌகீக வாழ்க்கைக்கு வேண்டிய கெட்டிக்காரத்தனம் என்றும் தோன்றும்.

இந்தக் கலியுகத்தில் நாம் செய்ய வேண்டிய தவம் ஒன்றே: உண்மை பேசுவது. அதைக்கூடச் செய்ய 'மாட்டோம்' என்கிருேம். வியாபாரம் செய்பவர்கள், கச்சேரியில் வேலையில் இருப்பவர்கள் அனைவரும் உண்மை பேசவேண்டும். சத்தியமே கெட்டிக்காரத்தனம். அதுவே கடவுளை அடையும் வழியும் லௌகீக சாதுரியமும் ஆகும்.

வீட்டில் பண்டிகை நாட்களில் நந்தா விளக்கு ஏற்றுகிருேம். அது எரிந்து கொண்டே இருக்கவேண்டும், அணைந்து விட்டால் குடும்பத்துக்கு ஏதாவது கஷ்டம் நேரிடும். அப்படியே கடவுள் நினைவும் ஒரு நந்தா விளக்கு. இதய கமலத்தில் ஏற்றி வைத்த அந்த விளக்கு அணைந்து போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். எந்த லௌகீக காரியத்தில் ஈடுபட்டிருந்தாலும் அவ்வப்போது அந்த விளக்கில் எண்ணெய் ஊற்றியும் திரியைத் தூண்டிக் கொண்டும் இருக்க வேண்டும். அதஞல் எந்த வேலையும் தடைப்படாது. வெற்றி ஏற்படும்.

# 31. கமலியின் கண்ணாடி

“ அம்மா, எனக்கு நீ கொடுத்த கண்ணாடியில் முகம் சரியாகத் தெரியவில்லையே !” என்கிறாள் கமலி.

“ கண்ணாடியை நன்றாகத் துடைத்து வைத்துக் கொள் ” என்கிறாள் கமலியின் தாயார். “ அதன்மேல் எண்ணெயும் தூசியும் படிந்திருந்தால் சரியாகத் தெரியாது. துப்புரவாக வைத்துக் கொண்டால் நன்றாகத் தெரியும், பார் !” என்று சொல்லித் துணி எடுத்துக் கண்ணாடியைச் சுத்தமாகத் துடைத்துக் குழந்தைக்குத் தந்தாள்.

கமலி சிரித்துக்கொண்டு “ ஆம், ஆம் !” என்று தன் முகத்தைக் கண்ணாடியில் பார்த்துப் பார்த்து மகிழ்ச்சியடைந்தாள்.

தியானத்தில் கடவுளைக் காணும் ரகசியமும் இதுவே. உள்ளத்தைத் துப்புரவாக வைத்துக் கொண்டால் அதில் ஆண்டவன் முகத்தைக் காணலாம். ஆசையும் அழுக்கும் படிந்திருக்கும் உள்ளத்தில் அந்த திவ்ய சொரூபம் காணப் படாது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் தேவியை நேரில் கண்டு மகிழ்ந்து ஆனந்தத்தில் மூழ்கினார் என்றால் அதன் காரணம் இதுவே. அவர் உள்ளத்தில் அழுக்கே இருக்க வில்லை. இதையே அவர் பிறருக்கும் உபதேசித்தது. அந்த உபதேசத்தை உணர்ந்து பயன் படுத்திக் கொள்வோமாக.

குளத்து ஜலத்தில், கரையிலுள்ள மரமும் செடியும் வானமும் வெளிச்சமும் நன்றாகப் பிரதிபலிக்கிறது. காற்றடித்து ஜலம் கலங்கினால் மறைந்து போகிறது. நாம் கடவுளைக் காண்பதும் அவ்வாறே. உள்ளத்தைப் பாசி மூடாமலும் கோபம் துவேஷம் முதலிய காற்று வீசிக்

கலங்கிப் போகாமலும் வைத்துக்கொண்டால் அதில் ஆண்டவன் ஒளியைக் காணலாம். கோபமும் ஆசையும் துவேஷமும் பற்றுகளும் பாபங்களும் உள்ளத்தைப் பற்றிக் கொண்டு மூடியும் கலக்கியும் வந்தால் ஒளி மறைந்து போகிறது.

சிறு விஷயங்களில் ஆசைகளைத் தீர்த்துக்கொண்டு, பேராசைகளை விவேகத்தைக் கொண்டு ஒழித்துக்கொள்ள வேண்டும். அறிவை இதற்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அடைந்த அறிவை யெல்லாம் வாதிப்பதிலும் அகம்பாவத்திலும் செலுத்தினால் பயனில்லை.

ஆசைகளையும் பற்றுகளையும் நீக்கிக் கொள்ளுவதில் அறிவைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் உள்ளம் நிர்மலமான ஜலம்போல் ஒளி வீசும், ஆண்டவனுடைய முகம் பிரதிபலிக்கும்.

உலக வாழ்க்கை ஒரு பெரும் பாதாளக் கிணறு போலாகும். குழந்தை அதன் பக்கத்தில் நின்றுகொண்டு எட்டி எட்டிப் பார்த்தால் என்ன சொல்லுவோம்? "அங்கே நிற்காதே, எட்டிப் பார்க்காதே, தூர நில்" என்போம். அவ்வாறேயாகும் வாழ்க்கையின் அபாயங்கள். கிணற்றில் விழுந்து விட்டால் மீள்வது துர்லபம்.

லோபமும் கோபமும் விடமாட்டேன் என்கின்றனவே, இதற்கு என்ன செய்ய?

"ஆசையும் கவலையும் கோபமும் சுபாவத்தில் நிலைத்திருக்கின்றன. அவற்றைப் பிடுங்கி எறிய முடியவில்லையானால் சரியான வழியில் அவற்றைத் திருப்பி அமைத்துக் கொள்ள வேண்டும். உன் காதல் சுபாவத்தைக் கடவுள் மேல் செலுத்து. உன் ஆசையையும் சக்தியையும் ஆண்டவனை அடையும் முயற்சியில் செலவழிக்கப் பார். உன் கோபத்தைக் கூடக் கடவுள்மேல் செலுத்து! ஏன் எனக்குத் தரிசனம் தரமாட்டாய் என்று அவன்மேல் கோபித்துக்

கொள். மக்கள் பேரில் உண்டாகும் ஆத்திரத்தை ஆண்டவன் பேரில் செலுத்தித் தீர்த்துக்கொள்'' என்ருர் பரமஹம்ஸர். இது சுபாவத்தை வெல்லும் வழி.

★

பெருங் காட்டு மிருகங்களை யெல்லாம் சாதுவாகச் செய்து விடுகிருேமல்லவா? யானையை அடக்கி, சொன்னபடி செய்யப் பண்ணுகிருேம். நம்முடைய மனமும் அடக்கி ஆளக் கூடிய ஒரு மிருகம். முயற்சி வீண் போகாது. உள்ளத்தை அடக்காமல் கண்டபடி காட்டில் திரிந்து மேயவிடாதீர்கள். பயனற்ற எண்ணங்களே காடு. அதில் மேயவிட்டால் உள்ளம் ஒரு காட்டு யானையாகப் போகும். அடக்கி ஆள முடியாமற் போகும். ஏமாந்து போகாதீர்கள். விவேகமே யானையை அடக்கும் அங்குசம்.

பற்றுகளையும் ஆசைகளையும் குறைத்துக்கொண்டே போக வேண்டும். அவை வளர்ந்தால் விவேகம் வளராது. பூண்டு வளர இடம் கொடுத்துவிட்டால் பயிருக்குச் சேதம்; களை பிடுங்கிஞல் பயிர் நன்ருக வளரும். இல்லாவிட்டால் பயிர் அழிந்து வயல் காடாகிப் போகும். அப்படியே விவேகமும். ஆசைகளையும் பற்றுகளையும் குறைத்துக் கொள்ளாமற் போஞல் விவேகம் வளராது.

# 32. உய்தலும் உபதேசமும்

கதை, காலக்ஷேபம், பிரசங்கம் முதலிய தருமோபதேச முயற்சிகளில் பலர் ஈடுபட்டு வேலை செய்து வருகிறார்கள். இவர்கள் நன்றாகப் படித்து சாஸ்திரப் பயிற்சி பெற்றவர்கள் என்பதில் சந்தேகமில்லை. இவர்களுடைய முயற்சியும், நல்ல எண்ணத்துடன் செய்யப்படும் முயற்சியே யாகும். ஆனால் மக்களைத் திருத்த வேண்டுமானால் முக்கியமாக வேண்டியது பக்தி வேகம். போதிப்பவர்களுடைய பக்தியே கேட்பவர்கள் உள்ளத்தில் பாய்ந்து வேலை செய்யும். சாமர்த்தியமாகப் பேசுவது மட்டும் போதாது.

"சமயப் பிரசாரம் செய்கிறவர்களைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று பகவான் ராமகிருஷ்ணரை ஒருவர் கேட்டார்.

இதற்கு அவர் பதில் சொன்னதாவது: "ஒருவன் தன்னுடைய வீட்டில் தனக்கே போதும் போதாததுமாக சாப்பாடு இருக்கும்போது நூறு பேரைச் சாப்பிடக் கூப்பிட்டால் அவனுடைய நிலைமை எப்படி யிருக்கும்? அந்த நிலைமையே சாதாரணமாகப் பிரசாரம் செய்பவர்கள் நிலைமை. அவர்கள் உள்ளத்தில் உண்மையாக நிலைத்திருக்கும் பக்தி அவர்கள் உய்வதற்கே போதாது. அப்படியிருக்க மற்றவர்களுக்குப் பக்தி ஊட்டுவது எப்படி?"

முதலில் உங்கள் உள்ளத்தில் ஆண்டவனை அமைத்துக் கொள்ளுங்கள். பிறகு மற்றவர்களுக்குப் போதிக்கப் பிரசங்கமும் உபதேசமும் ஆரம்பியுங்கள். ஒருவன் தன் உள்ளத்தில் காமமும் கோபமும் பற்றுகளும் வைத்துக் கொண்டு பிறருக்கு வைராக்கியமும் பக்தியும் உபதேசித்தால் என்ன பயன் உண்டாகும்? பிறருக்கு உபதேசம்

எளிதில் செய்து விடலாம். ஆனால் அது மூர்த்தியில்லாத பாழுங் கோயிலில் மணியடித்து, சங்கு ஊதுகிற மாதிரி.

*

குற்றங்கள் இருக்கலாம். ஆயினும் உண்மையான பக்தி உண்டாகி ஆண்டவனைச் சரண் அடைந்து அந்தக் குற்றங்களினின்று நீங்கிப் பிறருக்கும் வழி காட்டலாம்.

இத்தகைய ஒருவனை பகவான் ராமகிருஷ்ணர் கண்டு பேசிய கதை ஒன்று சொல்லுகிறார்: "என்ன சுவாமிகளே! தருமோபதேசம் பலமாகச் செய்து வருகிறீர். உம்முடைய சொந்தக் கதை வேறு விதமாக இருக்கிறதே! இவ்வளவு தோஷங்களை வைத்துக் கொண்டு நீர் எப்படி மக்களை வசீகரித்து அவர்களைப் பக்தியில் ஈடுபடச் செய்து வருகிறீர்? இதன் ரகசியம் என்ன?" என்று பரமஹம்ஸர் கேட்டார்.

"நான் மகா நீசன் என்பது உண்மை. ஆயினும் ஆண்டவன் அருள் என்பது ஒன்று இருக்கிறது. ஒரு துடைப்பக்கட்டை தெருவையும் வீட்டையும் பெருக்கிச் சுத்தம் செய்ய உபயோகப்படுகிறதல்லவா? அத்தகைய அழுக்குப்பட்ட ஒரு கருவி நான்" என்றார் அந்த மனிதர்.

"இதற்கு நான் ஒரு பதிலும் சொல்ல முடியவில்லை" என்கிறார் ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

*

ஒருவனுடைய உள்ளத்தில் பக்தி அமைந்து இதய கமலத்தில் ஆண்டவன் கோயில் கொண்டபின் எந்த தோஷமும் தடையாகாது!

சூரியனுடைய கிரணங்கள் வெளிச்சமும் வெப்பமும் பரப்புவது போல் அவனுடைய பக்தி மற்றவர்களுடைய உள்ளத்துக்குள் ஊடுருவிப் பாயும்.

# 33. ஐயப்பட வேண்டாம் !

"சுபாவத்தை எப்படி நான் வெல்ல முடியும் என்று பயப்படாதே. கன்னங்கரேல் என்றிருக்கும் கரியை நெருப்பு தீண்டியதும் அது என்னவாகிறது? அதன் சுபாவ மான கறுப்பு தீர்ந்து போகிறது. அவ்வாறே உன்னுடைய சுபாவமும், ஞானத் தீ பட்டதும் உள்ளத்தின் கறுப்பு தீர்ந்து போகிறது!"

உள்ளத்தைச் சுவாதீனத்தில் வைத்துக் கொண்டு அதில் அழுக்குச் சேராமல் வைத்துக்கொண்டால் எதையும் செய்ய முடியும்.

வண்ணான் வீட்டிலிருந்து வந்த புதுத் துணிக்கு எந்தச் சாயமும் ஏற்றிவிட முடியும். அந்தத் துணியைப் போன்றதுதான் மனமும். நல்ல சகவாசமும் முயற்சியும் இருந்தால் அதை நல் வழிக்குத் திருப்பலாம். ஆங்கிலம் படித்தவர்களுடைய பேச்சைப் பாருங்கள். ஆங்கில மொழிகள் கலந்தே எப்போதும் பேசுவார்கள். சமஸ்கிருதம் படித்தவர்கள் எப்போதும் சுலோகங்களை மேற்கோள்களாக எடுத்துக் காட்டியே பேசுவார்கள். சத்சங்கத்திலிருப்பவர் களுடைய மனம் கோணல் வழிகளில் செல்லாது. கெட்ட சகவாசத்தில் இருப்பவர்களுடைய சிந்தனை எப்போதும் கெட்ட விஷயங்களில் செல்லும். துணியில் சாயம் ஏறுவது போல் மக்கள் உள்ளங்கள் சகவாச குணத்தை ஏற்றுக் கொண்டுவிடும். சகவாசம் நல்லதா யிருந்தால் நல்ல குணம் உண்டாகும். சகவாசம் தோஷங்கள் கொண்ட தாக இருந்தால் கெட்ட சுபாவம் வளரும்.

தன்னைத்தான் மோசம் செய்து கொள்ளக்கூடாது. உன் உள்ளத்தை நீ மோசம் செய்யப் பார்த்தால் உனக்கே

நஷ்டம். உண்மையும் பக்தியும் தெய்வத்தை அடையும் வழி. ஆண்டவனை மறந்தால் மாண்டு போவாய். பக்தி இல்லையேல் வாழ்க்கை இல்லை.

ஞானம் வேறு பக்தி வேறு அல்ல. பக்தியும் உண்மையும் கலந்தால் ஞானம்.

பிறரைக் கொல்ல வேண்டுமானால் கத்தியும் துப்பாக்கியும் வேண்டும். தற்கொலைக்கு ஒரு ஊசியும் போதும். அதைப் போலவே பிறருடைய அஞ்ஞானத்தைப் போக்கி ஞானம் ஊட்ட வேண்டுமானால் பல்வேறு சாஸ்திரங்கள் ஓத வேண்டும். தன் உள்ளம் ஒளி பெறுவதற்கு ஒரு சின்னஞ்சிறு மந்திரம் போதும். ஆனால் பக்தியிருக்க வேண்டும்.

பக்தியே எல்லாச் சமயங்களுக்கும் வேர். பக்தியிருந்தால் அவனவன் சமயமும் ஆசாரமும் அவனவனுக்குப் போதும். பக்தி யில்லாத ஒருவன் எத்தனை அறிவு பெற்றாலும், சமயம் மாறினாலும் ஞானம் அடைய மாட்டான்.

✶

இதைத் தின்னும் அதைத் தின்னாது என்று வைத்த உணவை மோந்து பார்த்துத் தள்ளும் பசு என்ன பால் கறக்கும்? எதை வைத்தாலும் ஆவலோடு தின்று விடுகின்ற பசுவோ மடி நிறைந்து வேண்டிய பால் தரும்.

ஐயம் குடி கொண்ட மூளையில் ஞானப்பால் சுரக்காது.

✶

தாகம் அதிகரித்தபோது ஒருவன் ஆற்று நீரில் ரொம்ப மண் கலந்திருக்கிறது என்று தாகத்தைத் தீர்த்துக்

கொள்ளாமலிருக்கமாட்டான். இந்த ஜலத்தில் மண் கலந்திருக்கிறது என்று நல்ல சுத்தமான தண்ணீருக்காகக் கிணறு வெட்ட ஆரம்பிக்க மாட்டான். தாகத்தைப் போன்றதுதான் ஆண்டவன் அருளைப் பெறும் ஆசையும். அருகில் இருக்கும் சமயத்தை, சேறு கலந்திருக்கிறது என்று தள்ளி விட்டு அதில் தாகம் தவிர்த்துக் கொள்ளாமல் வேறு மதங்களைத் தேடிப் போகமாட்டான். தனக்காக ஒரு புது மதமும் உண்டாக்க முயற்சி செய்ய மாட்டான். உண்மையான வேட்கை ஏற்பட்டிருப்பின் தான் பிறந்த சமயத்தைக் கொண்டே தாகம் தீர்த்துக் கொள்ளுவான். புது மதம் உண்டாக்கிக் கொள்வதற்கு வேண்டிய கற்பனைக்கும் யோசனைக்கும் அவனுக்கு ஏது அவகாசம்?

லோபி ஒருவன் பணத்துக்கு ஆசைப்படுவதுபோல் பக்தன் ஆண்டவனை விரும்புகிறான். குளத்தில் விழுந்து முழுகிப்போய் இறக்கும் தறுவாயில் ஒருவன் சுவாசத்துக்காக எப்படித் தத்தளிக்கிறானோ அப்படி ஆண்டவனைக் காண பக்தன் தத்தளிப்பான்.

"குருட்டு பக்தி என்று ஏளனமாகச் சிலர் பேசுவதைக் கேட்டிருக்கிறீர்கள். இது எனக்கு விளங்கவே இல்லை" என்கிறார் ஸ்ரீ ராமகிருஷ்ணர். "குருட்டு பக்தி என்றால் என்ன? குருட்டு பக்தி என்றும் கண்ணுள்ள பக்தி என்றும் இரண்டுவித பக்தி கிடையாது. அறிவு என்றும் பக்தி என்றும் உண்டு. ஆனால் பக்தியில் குருட்டு பக்தி என்ற ஒரு தகாத பக்தி கிடையாது. பக்திக்குக் கண்கள் இல்லை. எல்லாவித பக்தியுமே குருடுதான்."

*

ஆண்டவனை நீக்கிவிட்டு வாழ்க்கை நடத்தும் மக்கள் பெருந் துன்பத்துக்கு ஆளாகிறார்கள். ஐயத்தை

நீக்கிவிட்டு பக்தி செய்யுங்கள். சூன்யத்திலிருந்து இந்த அற்புத பிரபஞ்சம் தானுக உண்டாகவில்லை. மனித னுடைய சேதனமும் சிந்தனையும் வெறும் சூன்யத்தி லிருந்து தோன்றமுடியுமா ? பரம்பொருளேப்பற்றி ஐயப்பட வேண்டாம்.

*

" நரகம், நரகம் என்று பயப்படாதீர்கள். ஆண்டவனைத் தியானித்து, 'செய்யத் தகாத பல காரியங் களைச் செய்துவிட்டேன். செய்ய வேண்டியதைச் செய்யா மலும் விட்டேன். அப்பனே! என்னைக் காப்பாயாக!' என்று வேண்டிக்கொள்ளுங்கள். பாவங்கள் அனைத்தும் ஓட்டமாக ஓடி மறையும்" என்கிறுர் பகவான் ராம கிருஷ்ண பரம்ஹம்ஸர்.

# 34. ஒரு பாட்டிக்கு உபதேசம்

"பேரண்டத்தைப் படைத்தாய், உன் பெருமை சிந்தைக்கு எட்டாது. நீ இதையெல்லாம் செய்தாய், அதையெல்லாம் செய்தாய் என்றெல்லாம் ஆண்டவனைத் தியானிப்பதில் என்ன பயன்?" என்று ஒரு தடவை ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் பிரம்ம சமாஜத்துத் தலைவரைப் பார்த்துச் சொன்னார்.

"பெற்ற தகப்பன் எதிரில் உட்கார்ந்து மகன், 'ஆஹா! என் தகப்பனுக்கு இவ்வளவு சேவகர்கள், இவ்வளவு குதிரைகள், வண்டிகள், தோட்டங்கள் இருக்கின்றன!" என்று கணக்கிடுகிறானா? இல்லை. அன்புள்ள மகன் தகப்பனாருடைய செல்வத்தை மதிப்புப் போட்டுக்கொண்டிருக்க மாட்டான். தகப்பனுடைய அன்பைக்கூட மகன் அது ஒரு விசேஷம் என்று நினைக்க மாட்டான்.

"நாம் ஆண்டவனுடைய மக்கள். அவன் அன்பு ஒரு இயற்கை நியதி. அதைப்பற்றி வியக்கவும் பேசவும் எண்ணவும் வேண்டியதில்லை. ஆனபடியால் இவற்றைப் பற்றியெல்லாம் பேசிப் பொழுது போக்காமல் நேராக ஆண்டவனை அடையுங்கள். மனைவி புருஷனிடம் செல்வதுபோல் அவனிடம் செல்லுங்கள். குழந்தை தாயிடம் செல்வதுபோல் நெருங்குங்கள். இதைச் செய், அதைச் செய் என்று பயப்படாமல் குழந்தையோ மனைவியோ கேட்பதுபோல் கேளுங்கள். ஆண்டவனை வெகுதூரத்தில் நிறுத்தித் துதித்தால் அவனை எப்படிக் கட்டி அணைப்பீர்கள்? ஐயோ, அவனை எப்படி நான் நெருங்குவேன் என்று பயந்து போவீர்கள். ஆண்டவன்

உங்களுக்கு மிகச் சொந்தம், மிக நெருங்கி அளவளாவக் கூடிய பந்து என்று எண்ணுங்கள்.''

இது பக்தி மார்க்கத்தின் ரகசிய சூத்திரம். பக்தியில் பயமில்லை, வியப்பில்லை, வணக்கமுமில்லை. தைரியம், அன்பு, நிச்சயம், நம்பிக்கை இவையே பக்தியின் லக்ஷணங்கள். ஆரம்பத்தில் தயக்கமும் அச்சமும் இருக்கும். பக்தி முதிர்ந்ததும் அவை தீர்ந்துபோய் தைரியம் ஏற்படும். பக்தன் ஆண்டவனை ரொம்பவும் உரிமையோடு நெருங்குவான்.

*

தம் சீடருக்குள் ஒருவருடைய தாயார் ஸ்ரீ ராம கிருஷ்ணரிடம் வந்து "எனக்கு வயதாயிற்று. நான் குடும்பக் கவலைகளை விட்டுவிட்டு பிருந்தாவனம் சென்று என்பாட்டுக்கு ராதையின் சந்நிதியில் துறவு நிலையில் இருக்க விரும்புகிறேன்'' என்று சொன்னாள்.

பரமஹம்ஸர் கண்டுகொண்டார்—அந்தக் கிழவி யம்மாள் நிலை இதற்கு இடம் தராது, இது வெறும் மனக் கோட்டையான விரக்தி, குடும்பத்தில் அவளுக்கு உள்ள பற்று நீங்கவில்லை என்று.

"அம்மா! உனக்கு உன் பேத்தியிடம் உள்ள அன்பு எனக்குத் தெரியும். நீ பிருந்தாவனம் அல்லது காசி அல்லது வேறு எங்கே போனாலும் பேத்தியின் நினைவு கூடவே இருந்துகொண்டே யிருக்கும். அந்தக் குழந்தை யின் உடம்பு எப்படி யிருக்கிறதோ, அவளைச் சரியாய்ப் பார்த்துக் கொள்கிறார்களோ இல்லையோ, என்றெல்லாம் யோசித்துக்கொண்டே யிருப்பாய். உன் உடல் பிருந்தா வனத்திலிருந்தாலும் உன் உள்ளம் பேத்தியின் பக்கத்தில் தான் இருக்கும். ஆனபடியால் ஒன்று செய்: உன்

பதை உணராமல் வெளியே வெகு தூரத்தில் வானத்திலோ, அதற்கும் மேலேயோ இருப்பதாக எண்ணித் தேடும் வரை யில் அறியாமை மூடிக் கொண்டிருப்பதாக நிச்சயமாக வைத்துக் கொள்ளலாம். ஞான விளக்கு ஏற்றினதும் தன் உள்ளத்திலேயே ஆண்டவன் கோயில் கொண்டி ருப்பது பிரகாசமாகும்.

தனக்குள் ஆண்டவனைக் காண்பது என்றால் உண் மையைப் பிறனொருவன் சொன்னதைக் கேட்டு 'ஆம்' என்று தலையாட்டுவதல்ல. உண்மையைக் கேட்டறிந்த பின், அந்த உண்மை உணர்ந்ததன் காரணமாகத் தன் வாழ்க்கை அதற்கு ஏற்றாற்போல் மாற வேண்டும். தன் இதயத்தில் பகவான் இருக்கிறான் என்று கண்டுவிட்ட ஒரு விவேகி அப்படிக் கண்டபின் தன் வாழ்க்கையை முற்றிலும் மாற்றிக் கொள்வான். கெட்டுப்போய் விட்டது என்று எண்ணிய பண முடிப்பு தன் ஜோபியிலேயே இருப்பதை அறிந்ததும் எப்படி ஒருவன் நடந்து கொள்வான்! அல்லது தன் குழந்தையைச் சொப்பனத்தில் தேடித் தேடி அலைந்து அழுது, பிறகு தூக்கம் தீர்ந்து தன் பக்கத்திலேயே குழந்தை படுத்துத் தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்ட தாய் ஒருத்தி எப்படி நடந்து கொள்வாள், யோசியுங்கள். இதயத்தில் பகவான் கோயில் கொண்டிருக்கிறான் என்றால் அவ்விதமான மகிழ்ச்சியைக் காண வேண்டும்.

*

"கோபாலன் எங்கே போய்விட்டான், போனவன் இன்னும் திரும்பவில்லையே. உனக்கு ஏதாவது தெரியுமா?" என்று ஒரு நாள் யசோதை கவலையுடன் ராதையைக் கேட்டாளாம்.

தூங்கிக் கொண்டிருந்த ராதை எழுந்து வணங்கி, "தாயே! ஏன் கவலைப் படுகிறாய்? கண்ணை மூடிக்

கொண்டு கோபாலனைத் தியானித்தாயானால் கோபாலன் வந்து விடுவான்'' என்றாள். யசோதையும் அப்படியே செய்து கோபாலனுடைய தரிசனம் பெற்றாள்.

"இது உன்னுடைய பக்தியின் பயனாகும். எனக்கும் இந்தச் சக்தியைத் தரமாட்டாயா?'' என்று யசோதை ராதையிடம் கேட்டு வரம் பெற்றாளாம்.

நாம் அனைவரும் ராதை, யசோதை இவர்களைப் போலவே கோபாலனை எப்போதும் எங்கேயும் காணலாம். ஆனால் ராதையைப் போல் யசோதையைப் போல் கோபாலனை விரும்ப வேண்டும். இதயத்தில் விருப்பம் உதயமாக வேண்டும். விருப்பம் உண்டானால் தரிசனம் தருவான் என்பது கடோபநிஷதம்.

